Registered as a News Paper

# ஈழநாதம்

விலை: 15.00
பக்கம் : 28+IV

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 14 | வெள்ளி - 35 | 24 - 30 - அக்டோபர் - 2003

## தீபாவளி வாழ்த்து

அன்பினிய வாசகர்கள்,
விளம்பரதாரர்கள்
அனைவருக்கும்
வெள்ளிநாதத்தின்
தீபாவளி வாழ்த்துக்கள்









# விடுதலைப்புலிகள் முன்வைக்கும் முதல் வரைபு...





## அரசியல் ஆடுகளத்திற்கு புதிய வரவு

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 24.10.2003
மின் அஞ்சல : Ehatham@sltnet.lk

# வரைபு ஆசீர்வதிக்கப்படட்டும்

சனநாயக நீரோட்டத்தில் ராஜதந்திர விழிமுறையில் பேச்சுவார்த்தை என்ற நகரீகமான அணுகுதலோடு பிரச்சனையைத் தீர்க்க புலிகள் முன்வருவார்களா? என்பதே தமிழர்களின் போராட்டவிடயத்தில் புலிகள் என்ற தலைமைத்துவத்தின் மீது இதுவரை எழுப்பப்பட்டுவந்த கேள்வியாக இருந்தது.

எதிர்வளமாக, ஓர் இனத்தின் தனித்துவ உரிமையை மதித்து, அதன் அபிலாசைகளுக்கு தம்செவிகளைக்கொடுத்து, அதன் மனவடுக்களைப்புரிந்துகொண்டு உரிமைகளை வழங்கி, அதிகாரத்தைப் பகிர்ந்தளித்து ஐக்கியத்தைத் தக்கவைத்துக் கொள்ள சிங்கள அரசு தயாரா? என்று என்றுமே கேள்வி எழுப்பப்படுவதில்லை.

இதற்குக் காரணம், ஓர் அரசு என்ற ஸ்தானத்துக்கு கிடைக்கும் சர்வதேச உறவும், அதனுடைய வலைப்பின்னலும், அதற்கான முகவரி என்பதும் வேறு; குருட்டுத்தனமான கொள்கைகளுக்காகவும் தேவைக்காகவும் ஆயுதம் ஏந்துவதும் தூண்டுவதுமான இந்த உலகில் ஒடுக்கப்படும் ஓர் இனம் தன்னைத்தற்காத்துக்கொள்வதற்காகவும் உரிமைக்காகவும் ஆயுதம் தூக்கிப்போராடுகின்ற நிர்ப்பந்தம் உருவாகும் போது அதற்குக் கிடைக்கின்ற முகவரி அல்லது முத்திரை என்பது வேறு.

முகவரியை வைத்துத்தான் முக்கியத்துவம் வழங்கப்படுகின்ற காலம் இது. முக்கியத்துவம்தான் நீதியையும் அநீதியையும் தீர்மானிக்கின்ற சக்திமிக்கது.

விடுதலைப் புலிகள் வெல்லப்படமுடியாத ஒரு போர்ச்சக்தியாக மாறியதால்தான், அல்லது அதனை நிரூபித்ததனால்தான் சர்வதேச அரங்கில் கவனம்பெறுவதற்கான ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

சந்தர்ப்பத்தைச் சாதகமாக்கி சாதகத்தை முகவரியாக்கி முகவரியை மூலதனமாக்கி முளைவிடுவதிற்தான் தமிழர்களுக்கான எதிர்கால விளைச்சல் அடங்கியிருக்கிறது.

புலிகள் ஒரு உள்ளகச்சுயநிர்ணயத்தின் அடிப்படையிலான சமஷ்டியைப் பரிசீலிக்கத்தயார் என்று அறிவித்தபோது சிங்கள அரசின் அத்திவாரமே ஈடாடிப்போனது.

இதுவரை வரமாட்டார்கள், வரமாட்டார்கள் என்று அவர்கள் சொன்னது உலகின் செவிகளுக்கு ஏறியதே தவிர, தரமாட்டார்கள், தரமாட்டார்கள் என்று நாங்கள் சொன்னது எவரது செவிகளையும் உறுத்தவில்லை. புலிகளின் இந்த அறிவிப்பு உறுத்தியது, அரசு அதற்குத் தந்த பதிலால்: "இப்போது அதற்கான சூழல் இல்லை. இந்தப் பேச்சை இப்போது எடுக்கவேண்டாமே" என்று பீரிஸ் கேட்டபோது;

இப்போது மறுபடியும் புலிகள் தமது யோசனை என்னவென்று என்றுமே தந்ததில்லை, என்றுமே தரமாட்டார்கள் தரமாட்டார்கள் என்றார்கள். ஏனென்றால் பேச்சுமேசையில் புலிகளின் நோக்கம் சமாதானத்தை அடைவது அல்லவே என்றார்கள். இப்போது புலிகள் தமது (இடைக்கால) யோசனையைத் தந்துவிடப் போகிறார்கள், அடுத்தவாரம் வந்துவிடப்போகிறது.

அது தமிழரின் செந்நிறக்கொடி வெழுத்துப்போவதாக இருக்கவேண்டாம். இருக்கவும் கூடாது. இருக்கமாட்டாது என்றும் நம்புவோம். ஆனால் அதற்கு அரசாங்கம் தரப்போகும் பதில் உலகின் கண்களில் நாமும் பயங்கரவாதிகளாக அல்லாமல் மனிதர்களாகத்தெரிவதாக அதற்கான நெகிழ்வும் அதன் நியாயமும் இருக்கட்டும்.

அரசின் எதிர்வினையில் இடைக்கால நிர்வாகசபை என்றொன்று வரப்போவதில்லை என்பது தெரிந்ததுதான். ஆனால் எமக்கான முகவரியாவது உலக மனச்சாட்சியால் திருத்தி எழுதப்படட்டும்.

அது ஒன்றே எதிர்பார்க்கத்தக்கதும், எதிர்பார்க்கவேண்டியதும் எனக்கொள்வோம். அதையேனும் பெற்றுவருமானால் இவ்வரைபு ஆண்டவனால் ஆசீர்வதிக்கப்பட்ட வரைபாக இருக்கும்.

## தூரனின் பார்வையில்

# மதங்கொள்ளும் மத பீடங்களும் ஆட்டம்காணும் அரச பீடங்களும்

மதம் மதங்கொள்ளும் போது மனிதம் ஆபத்துக்குள்ளாகிறது. மதம் அரசியலை ஆக்கிரமிக்கும் போது தேசம் அழிவுக்குள்ளாகிறது. ஆன்மீகம் அரசியலாக்கப்படும் போது அரசும் மக்களும் மதவாத நோயால் பீடிக்கப்பட்டு இயல்பாக இயங்கமுடியாத நிலைக்கு உள்ளாகின்றனர்.

அரச பீடங்கள் தத்தமது அரசியல் அபிலாசைகளுக்கேற்ப மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைக்ளுக்கும் தேசிய முலாம் பூசி மக்களை ஏமாற்றிவருவதொன்றும் இரகசியமான விடயமல்ல. இந்த அரச பீடங்களுக்கு மதபீடங்கள் வாழ்த்தும் ஆசீர்வாதமும் வழங்குவதுதான் ஒரு தேசம் எதிர்கொள்ளக் கூடியதான சகல ஆபத்துக்களுக்கும், அழிவுகளுக்கும் காரணமாகும்.

அதேபோன்று மத பீடங்கள் அரசபீடங்களை ஆட்டிப் படைக்கும் சர்வவல்லமை மிக்க அதிகாரசக்தியாக விளங்குவதானது எத்தகைய மோசமான அழிவுகளுக்கும், பின்னடைவுகளுக்கும் ஒரு தேசத்தை இட்டுச்செல்லும் என்பதற்கு உலக வரலாற்றில் எத்தனையோ உதாரணங்களை கூற முடியும்.

இந்தவகையில் இலங்கையையும் இந்தியாவையும் மிகச்சிறந்த-மிகவும் அறிந்த உதாரணங்களாக எடுத்துக்கொள்ளலாம்.

இந்திய அரசியலில் ஆர்.எஸ்.எஸ் என்றழைக்கப்படும் ராஷ்ட்ரீய ஸ்வய சேவக் என்ற இந்து அடிப்படைவாத அமைப்பு வகிக்கும் முக்கியத்துவமும், வல்லமை மிக்க பங்கினை எவரும் அறிவர். மகாத்மா என்றழைக்கப்படும் - இந்தியாவின் தேசபிதா என்று போற்றப்படும்- மோகன் தாஸ் கரம் சந்த் காந்தியின் படுகொலையில் இருந்து பாபர் மசூதி தகர்ப்பு வரை இந்த அமைப்பும் இதன் உப அமைப்புக்களான இந்து முன்னணி, விஸ்வ ஹிந்து பரிஷத் போன்றவைகளும் எத்தகைய பங்கு வகித்தார்கள் என்பது வரலாறு உணர்த்தும் பாடமாகும்.

இன்றைய இந்திய ஆளும் கட்சியான பாரதீய ஜனதாவை ஆட்டிப்படைப்பதும் இதே ஆர்.எஸ்.எஸ் தான்.

கடந்த இந்திய நாடாளுமன்றத்திற்கான தேர்தலில் இந்த இந்து அடிப்படைவாதிகளால் முன்வைக்கப்பட்ட பச்சை மதவெறிக் கோஷம்.

'இராமராஜ்ஜியமா? ரோம ராஜ்ஜியமா?' என்பதேயாகும். இது சோனியா காந்தியின் தாய் நாடான இத்தாலியைக் குறித்து கூறப்பட்டதாகும். பாரதீய ஜனதாவின் ஆட்சி இராமராஜ்ஜியமாக இருக்குதோ இல்லையோ ஆனால் அனுமான் ராஜ்ஜியமாக இருப்பதென்னமோ உண்மைதான்.



இந்திய ஆளும் இந்துத்துவ சிந்தனையாளர்களின் மனங்களிலும், செயல்களிலும் குண்டு வெடித்த வண்ணம் இருக்கிறது, தீயெரிந்து சுவாலைவிட்ட வண்ணம் இருக்கிறது. இது அனுமானின் இலங்கா தகனத்தையே நினைவூட்டுகிறது.

குறிப்பாக இஸ்லாமிய மக்களுக்கெதிரான இந்துத்துவ மதவாதிகளின் நடவடிக்கைகள் ஜனநாயகத்துக்கும் மனித நேயத்திற்கும் வெளிப்படையாகவே எதிரானவை.

ஆனாலும் இந்தியா தன்னை உலகின் மாபெரும் ஜனநாயக நாடாக பிரகடனம்செய்து கொள்வது தான் விசித்திரமான கோமாளித்தனமாகும்.

ஒரு வருடத்தின் முன்னர் வன்னி வந்திருந்த விஷ்வ ஹிந்து பரிஷத்தின் படித்துப் பொறியியல் பட்டதாரியாகி விட்ட துறவியொருவருடன் பேசிக்கொண்டிருந்தபோது அந்தத்துறவி ஆன்மீகம் குறித்து பேசியவற்றை விடவும் அரசியல் குறித்து பேசியதே அதிகம்.

அந்த காவியுடை தரித்த இராமபக்தரான இராமராஜ்ஜியக் கனவில் மிதக்கும் துறவி கேட்ட ஒரு கேள்வி...

- அன்ரன் பாலசிங்கம் இந்துவா, கிறிஸ்தவரா என்பதேயாகும்.

- இது போதும் இந்திய அரசியலில் இந்துமதவாதம் எத்தகைய ஆதிக் கத்தை செலுத்துகின்றது என்பதை அறிந்து கொள்வதற்கு -

- இன்னும் ஒரு முக்கிய உதாரணம் காஞ்சி சங்கர பீடம் குறித்ததாகும்.

இந்திய அரசியல் தலைமைகள் அனைத்தும் வெளிப் படையாகவும், மறைமுகமாகவும் சரண்புகும் இடம் சங்கர பீடம்தான்.

அவர்கள் ஆசீர்வாதம் பெறுவதும் சங்கராச்சாரிய சுவாமிகளிடம்தான். அரச பீடம் ஆன்மீக பீடத்தை சரணடைகிறது.

ஆன்மீக பீடம் அரச பீடத்தை தீர்மானிக்கிறது.

இந்திய அரசியல் குழப்பங்கள் அனைத்திற்கும் மதவாத அடிப்படையிலான சிந்தனா வாதிகள் தான் காரணம் என்பதில் ஐயமில்லை.

இலங்கையின் இனப்பிரச்சினை ஒரு அரசியல் பிரச்சினை அதனை சிங்களவர் இந்துக்களா, தமிழர்கள் இந்துக்களா என ஆராய்ந்து அணுகமுனையும் இந்திய இராமராஜ்ஜிய வாதிகளுக்கு, இலங்கை தமிழர்கள் இராவணன் என்கிற தமிழனின் - இராமனின் எதிரியின்-வாரிசுகள் என்று எவராவது பிரசாரம்செய்து இருக்கக்கூடும்.

இனி இந்தியா எமது பிரச்சினையை எப்படிப்பார்க்கும் என நீங்களே ஊகித்துக்கொள்ளுங்கள்.

இந்தியாவில் சங்கர பீடமென்றால் இலங்கையில் மல்வத்தை - அஸ்கிரிய பௌத்த பீடங்களின் சிங்கள பௌத்த அடிப்படைவாத வெறிகுறித்து விளக்க வேண்டிய அவசியமேயில்லை.

பிக்குமார் முன்னணி அமைத்து ஜே.வி.பி. யின் பின்னால் சமாதான எதிர்ப்பு பாதயாத்திரையையும், சிகல உறுமயவின் பின்னால் குரங்குபாஞ்சான் புலிகள் முகாம் மீதான படையெடுப்பையும் மேற்கொள்ளும் காலம் இது.

இங்கு ஆன்மீகம் அரசியலில். இங்கும் ஆன்மீகம் மதவாதம் பேசுகின்றது, இனவாதம் கக்கு கின்றது. இந்தியாவின் இராம ராஜ்ஜியம் அமைக்கப் போவதாகக் கூறுகிறார்கள். இங்கு புத்த ராஜ்ஜியம் அமைக்கப் போவதாகக் கூறுகிறார் கள். பாவம் இராமரும், புத்தரும், இருவருமே ராஜ்ஜி பாரம் வேண்டா மென்று நாடுவிட்டு காடேகி தவமியற்றியவர்கள்.

அவர்களின் பக்தர்கள் அரச பீடத்தைக் குறிவைப்பதுதான் வேடிக்கை. அண்மையில் அஸ்கிரிய பீடாதிபதி சங்கைக்குரிய உடுகம சிறிபுத்தரகித்த தேரர் மகாநாயக்க தேரர் தற்போதைய சமாதான நடவடிக்கைகளால் நாடுபெரும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளது என எச்சரித்துள்ளதுடன், மல்வத்தை பீடத்துடன் உடன் பேச்சு நடத்தி உரியநடவடிக்கைகளை மேற்கொள்ள விருப்பதாகவும் தவறினால் பௌத்த சிங்கள மக்களுக்கு என்று ஒரு நாடு இல்லாமல் போய்விடும் எனவும் பச்சை இனவாதத்தைக்கக்கியுள்ளார்.

பௌத்த மத பீடங்களை மதம் கடுமையாகத்தான் பீடித்துள்ளது போலும். பௌத்த மதபீடங்கள் தம்மத போதனைகளை மறந்து இனவாத அரசியலை வேதமாக்க முனைந்துள்ளார்களோ என்ற சந்தேகமும் எழவே செய்வதில் வியப்பில்லை...

இந்த நிலையில் சமாதானம் குறித்து அதிகம் எதிர்பார்க்கமுடியுமா? இதுவே இன்று சமாதான ஆர்வலர்கள் முன்னால் உள்ள கோடி ரூபாய்கள் பெறுமதியான கேள்வி. ●



# ENDLF: ஒரு பொம்மலாட்டம் நடக்குது

**அடுத்தவாரம்** விடுதலைப்புலிகள் கையளிக்கவிருக்கும் இடைக்கால நிர்வாக சபைத் திட்டவரைபையொட்டி இலங்கை அரசியல் மீண்டும் சூடு பிடித்திருக்கிறது.

சமாதானத்திற்கு ஆதரவான முகாம் அல்லது சமாதானத்தில் இருந்து நலன்களை அறுவடை செய்யக்கூடிய முகாம் ஒருபுறமும் சமாதானத்திற்கு எதிரான முகாம் அல்லது இந்த சமாதானத்தினால் பாதிப்படையக்கூடிய முகாம் மறுபுறமுமாக அரசியல் சதுரங்கத்தில் காய்களை நகர்த்தத்தொடங்கிவிட்டன.

ஜனாதிபதி சந்திரிகாவின் முகாம் மேற்கைப் பகைக்க முடியாமலும் ரணிலின் முகாம் இப்பிராந்திய சக்தியான இந்தியாவைப் பகைக்கமுடியாமலும் உள்ள போக்கில் சமாதானம் செத்துவிடாமலும் பிழைத்துவிடாமலும் இருக்கிறது.

சதுரங்கத்திற்கு இப்பொழுது புதிய இரண்டு காய்கள் மறைமுகமாக நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதன் ஆட்டக்காரர்களின் உள்நோக்கம் பற்றி இக்காய்கள் நிறுத்தப்படப் போகும் கேந்திரம் பற்றியும் அபாயச்சங்கு ஊதுவதுதான் இந்தப்பேனாவின் நோக்கம.

அதில் ஒரு வரவு பண்டாரநாயக்காவின் அடுத்த புத்திரியான சுனேத்திரா. இது அதிகம் சுதந்திரக்கட்சியின் உட்கட்சி அரசியல் விவகாரம். பண்டாரநாயக்கா குடும்ப அரசியலை நொய்துபோக விடாது தக்கவைப்பதும் ஆளும் கட்சிக்கு எதிரே நிறுத்தப்படுவதற்கான பலமான பின்னணி உள்ளதுமான காயாகத்தான் இதன் வரவு இருக்கிறது.

மறுவரவு ENDLF அல்லது 'த்திறீ ஸ்ரார்' என அறியப்பட்டு தமிழ்மக்களால் மறந்துவிடப்பட்ட ஈழதேசிய ஜனநாயக விடுதலை முன்னணி.

முதல்வரவு பற்றி இன்று எடுத்தாள வேண்டிய அவசரமில்லை. அது அதிகம் உட்கட்சி சார்ந்தது என்பதுடன் அதன் தாக்கம் தேசிய அரசியலில் நிகழ பல மாதங்களுக்கு மேல் ஆகலாம். அதனை பிறிதொரு தடவை ஆராயலாம். ஆனால் அடுத்தவரவு அத்தகையதல்ல. அது காலம் தப்பி வரும் மாரியாக இருக்கிறது. அதன் அனர்த்தம் தமிழ் மக்களுக்காக கனிந்து வரக்கூடிய எல்லாவற்றையும் சிதைப்பதை நோக்காகக்கொண்டது. அது சுயமாக இயங்குவது அல்ல இயக்குவிக்கப்படுவது. எனவே அவதானிக்கப்படவேண்டியது அவசியம்.

அண்மையில் இலங்கை வரவிருந்த ஐ.நா. பொதுச்செயலாளர் கோபி அனான் கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளையும் சந்திப்பார் என்று நம்பப்பட்டது. அத்தருணத்தில் ஒக்டோபர் 03ஆம் திகதியன்று ஈ.என்.டீ.எல்.எவ் பொதுச்செயலாளர் பரந்தன் ராஜன், கோபி அனானிற்கு, புலிகளை அவர் சந்திக்கக்கூடாது எனக்கேட்டு கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிறார்.

**ஜி.கே**

இப்படி ஒரு பெரும் பாய்ச்சலை பாய எத்தனிக்கும் இவர்கள் யார்? நோக்கம் என்ன? முன்னைய செயற்பாடு என்ன? இவர்கள் காட்ட விரும்பும் தோற்றமென்ன? இவர்களை எந்த வகைக்குள் வைத்துப் புரிந்துகொள்ள வேண்டும்? இவர்கள் தம்மை எங்கே வைத்துள்ளார்கள்? இவர்களை எங்கே வைக்கவேண்டும்? என்றெல்லாம் பல கேள்விகளை சடுதியாக எழுப்புகின்றன இவர்களின் செயல்கள்.

இலங்கை - இந்திய ஒப்பந்த காலத்தில் இந்திய இராணுவத்தால் பிரசவிக்கப்பட்ட குழந்தையே ஈ.என்.டீ.எல்.எவ். அப்பொழுது நாணயக் கயித்தை எப்பொழுதும் தம்மிடமே தந்துவிட்டு தாம் தந்த வண்டியைக் கூடச் சவாரி செய்யவேண்டும் என்பதை ஈ.பி.ஆர்.எல்.எவ்.க்கு வலியுறுத்துவதற்காக அரவணைத்து வைத்திருந்த ஏனைய மாற்றீடுகளுள் இது உருவாக்கப்பட்ட மாற்றீடு. தத்தெடுத்த குழந்தையை விடவும் பெற்றெடுக்கும் குழந்தை அதிக நம்பகமானது என்பதனால் அடிவருடிகளான ஆயுதக் குழுக்களுள் அதற்காகவே பெற்றெடுக்கப்பட்ட குழந்தையிது. இது அரசியல் கட்சியாகவுமல்லாமல் ஆயுதக் குழுவாகவுமல்லாமல் இரண்டுங் கெட்டான் தனத்தோடு தன் தேவைக் காகப் பேணப்பட்டது.

அராஜகக் கும்பலாக அப்போது தமிழ்மக்களால் உணரப்பட்ட அமைப்பு இது. கிளிநொச்சியிலும் திருமலையிலும் இதன் தாக்கம் அதிகமாக இருந்தது. இந்திய இராணுவம் வெளியேறியபோது நூலுள்ளவர் கையோடு இதுவும் போய்ச் சேர்ந்தது.

இதைப் பெற்றெடுத்ததன் முதல் பிரயோகம் தோல்வியில் முடிந்தது.

பின் 90இல் பிரேமதாசா அரசு ஓடிய ஆயுதக் குழுக்களை வரவழைத்து கைக்கூலி அந்தஸ்துக் கொடுத்தபோது இது வராமலேயே தாயுடன் விருப்பின்றியோ அனுமதியின்றியோ அங்கேயே நின்றுவிட்டது.

அதன்பின் 96இல் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி இடப்பெயர்வுகளின் பின்னால் புலிகளின் இறுதித் தோல்வியை சாத்தியமாக்கலாம் என்று எதிர்முகாம் நம்பிய சூழலில் ஈ.என்.டீ.எல்.எவ். வன்னிவந்து புலிகளுடன் தாம் இணைந்துகொள்வதற்கான ஒரு இரகசியப்பேச்சு நடத்தியதாக இந்தியாவில் அறிக்கை விடுத்தது.

நீண்ட காலத்தின்பின் அதன் வரவும் பேச்சும் அப்போதைய புலிகளுக்கான அக, புற நிலைமைகளோடு பார்த்தால் சூடு அறிவதற்கான 'தேர்மாமீற்ற'ராகவோ முடிந்தால் ஒரு 'வைரசா'கவோ பிரயோகப்படுத்தப்பட்டது என ஊகிக்கலாம். அதன் பிரயோக நிலையில் அது அப்போதும் தோல்வியுற்றது.

பிற்பாடு 1998இல் (?) ஐரோப்பாவில் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (TBC) என்ற பெயரில் ஒரு வானொலிச் சேவையை ஈ.என்.டீ.எல்.எவ் ஆரம்பித்தது. இதில் அதிகம் விடுதலைப்புலிகளும் அதன் தலைமைத்துவமும் சரியானதென்றும் புலம்பெயர் நாடுகளிலுள்ள விடுதலைப்புலி உறுப்பினர்களதும், செயலகங்களினதும் நடவடிக்கைகள் தவறானவையென்றும் மோசடிமிக்கவை என்றும் தலைமைத்துவத்துடன் எந்தத் தொடர்பும் அற்றவை என்றும் ஒரு விமர்சனக் கோதாவில் பாரியளவிலான பிரச்சாரத்தில் இறங்கியது.

வன்னிப் போர்க்களம் புலிகளுக்கு வசப்பட்டு இராணுவத்திற்கு அது சாவின் பாதையாக இருந்தபோது புலிகளின் பலத்திற்கான பின்னூட்டல் - அது அரசியல் அர்த்தத்திலென்றாலும் சரி இராணுவ அர்த்தத்திலென்றாலும் சரி - மேற்கு நாடுகளில் புலம்பெயர்ந்து இருந்த தமிழர்களால் நிகழ்கிறதென்று கணித்தபோது புலிகளின் சிறகுகள் அங்குதான் அசைகின்றன என்று தெரிந்து அதனை அரிவதற்காக தேவையுணர்ந்து கொடுக்கப்பட்ட பணியே அந்த வானொலிப்பணி எனலாம்.

மக்களின் மனநிலையை புத்திபூர்வமாக திருப்பிவிடுவதன் மூலம் மேற்கு நாடுகளில் விடுதலைப்புலிகளின் இயங்கு நிலையை முடக்கி பின்னூட்டலைத் தடுத்து அதன்மூலம் வன்னிப் போர்க்களத்தை பலவீனப் படுத்துவதனூடாக யுத்தத்தின் இறுதி வெற்றியை சாத்தியப்படுத்திக்கொடுக்கலாம் என்ற அர்த்தத்தில் பிரயோகிக்கப்பட்டதே இந்தச் செயற்பாடு. அதுவும் தன் பிரயோகத்தில் தோற்றுப்போனது.

ஓயாத அலைகள் - 03இல் புலிகளின் வெற்றி இராணுவச்சமநிலையை மாற்றியமைத்தபோது, புலிகள் தாம் பேச்சுக்குத் தயாரென அழைப்பு விடுத்தபோது, கூட்டமைப்பு உருவாவதற்கான வேலைகள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருந்த தருணத்தில் ஈ.என்.டீ.எல்.எவ் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு 12.01.2001இல் கடிதமொன்றை அனுப்பி வைத்ததாகவும், ஒரு கூட்டமைப்பின் அவசியத்தைத் தாம் உணர்வதாகவும் அக்கூட்டமைப்பில் தாமும் இணைந்து செயற்பட விரும்புவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டிருந்ததாக பின்நாளில் TBC வட்டாரங்களில் அறியக்கிடைத்தது.

இலங்கை - இந்திய ஒப்பந்த காலத்தில் இந்திய இராணுவத்தால் பிரசவிக்கப்பட்ட குழந்தையே ஈ.என்.டீ.எல்.எவ். அப்பொழுது நாணயக் கயித்தை எப்பொழுதும் தம்மிடமே தந்துவிட்டு தாம் தந்த வண்டியைக்கூடச் சவாரி செய்யவேண்டும் என்பதை ஈ.பி.ஆர்.எல்.எவ்.க்கு வலியுறுத்துவதற்காக அரவணைத்து வைத்திருந்த ஏனைய மாற்றீடுகளுள் இது உருவாக்கப்பட்ட மாற்றீடு. தத்தெடுத்த குழந்தையை விடவும் பெற்றெடுக்கும் குழந்தை அதிக நம்பகமானது என்பதனால் அடிவருடிகளான ஆயுதக் குழுக்களுள் அதற்காகவே பெற்றெடுக்கப்பட்ட குழந்தையிது. இது அரசியல் கட்சியாகவுமல்லாமல் ஆயுதக் குழுவாகவுமல்லாமல் இரண்டுங்கெட்டான் தனத்தோடு தன் தேவைக்காகப் பேணப்பட்டது.

விடுதலைப்புலிகள் தமிழ்க் கட்சிகளுக்கிடையிலான கூட்டமைப்பை விரும்பிய, வரவேற்ற ஒரு தருணத்தில் அதை அரவணைத்துச் செயற்பட விருப்பம் கொண்டிருந்த ஒரு சமயத்தில் அதை அறிந்து ஈ.என்.டீ.எல்.எவ் உட்புகுந்து தனக்கான 'சேவையை' நிகழ்த்துவதற்கான வாய்ப்பாக இதனைப் பயன்படுத்த எத்தனித்ததெனலாம். அப்போதும் அதன்பிரயோகம்தோற்றுப் போனது.

TBC வானொலியிலிருந்து விலகிய பணியாளர்கள் அண்மையில் விடுத்த அறிக்கையில் "தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பணிப்பாளர் தான் சார்ந்துள்ள ஈ.என்.டீ.எல்.எவ் எனப்படும் தமிழர் விரோத அமைப்பின் செயற்பாடுகளை விஸ்தரிக்கவும் தமிழின விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்கும் நோக்கிலான அந்த அமைப்பின் பொய்:யான பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தை பயன்படுத்தியமையையடுத்து இந்த நடவடிக்கைகளால் அதிருப்தியடைந்த நாம் இந்த நிறுவனத்திலிருந்து விலகியுள்ளோம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் நிகழ்ச்சிப் பணிப்பாளர், வர்த்தகப் பணிப்பாளர், பொது முகாமையாளர், நிகழ்ச்சித் தயாரிப்பாளர் உட்பட பலர் கையெழுத்திட்டிருக்கிறார்கள்.

இறுதியாக யூலை மாத முதல் வாரத்தில் இந்தியா சென்ற யப்பான் தூதுவர் டில்லியில் ஈ.என்.டீ.எல்.எவ் ஐச் சந்தித்து பேச்சு நடத்தியிருக்கிறார். அதற்குமுன் சென்னையில் இத்தகைய பேச்சு நடத்தப்பட்டதாக ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்பொழுது புலிகளைச் சந்திக்கவேண்டாம் என்று கோபி அனானுக்கு அனுப்பிய கடிதத்தில் புலிகள் ஒரு படுகொலை புரியும் அமைப்பென்றும், அதே கடிதத்தின் பிறிதொரு இடத்தில் புலிகள் மட்டுமே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அல்ல, புலிகள் மற்றைய தமிழ்க் கட்சிகளை தம்முடன் பேச்சில் இணைத்துக் கொள்ள முன்வரவேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறது.

ஈ.என்.டீ.எல்.எவ். ஐ பொறுத்தவரை அது குறிப்பிடப்படக்கூடிய அளவேனும் ஒரு அரசியல் சக்தியல்ல. ஒரு ஆயுதக்குழுவுமல்ல. அப்படியிருக்க அதன் பாய்ச்சல்களால் ஒரு விளைவும் இல்லை என்று சொல்லலாம் தான். ஆனால் அது எப்பொழுதும் எய்யப்படும் அம்பாகவே தொழிற்பட்டிருக்கிறது. அதன் பிறப்பும் அப்படியே காலத்திற்கு காலம் அது வெவ்வேறு தளங்களில் சேவை செய்திருக்கிறது அதை எய்தும் வில்லால் அது தனக்கான கனதியை கொள்கிறது.

திடீரென கொழும்பில் செயலகம் ஒன்றைத் திறந்து அங்கத்தவர்களை இணைக்கும் பணியில் அது ஈடுபடுவதாகவும் அறிய வருகிறது.

கூட்டமைப்பில் கூட்டணிக்குள்ளான குழப்பமும் ஈ.என்.டீ.எல்.எவ் இன் வரவும் காலம் தப்பிய மாரியாகவே இருக்கிறது.

ஏற்கனவே புளொட், ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ்., வரதர் அணி ஆகியவற்றை கூட்டமைப்பு உள்ளெடுக்காது வெளியில் விட்டிருக்கிறது அல்லது வெளியில் நிற்கிறது. இப்பின்னணியில்;

தமிழர் தரப்புக்குள் ஒரு எதிர்முகாமை உருவாக்குவதற்கான எத்தனமாக இதன் வரைபு அமையலாம். தமிழர்களின் பேரம் பேசும் ஆற்றலுக்கு வலுச்சேர்க்கும் ஏக பிரதிநிதித்துவம் என்பதை ஆட்டம்காண வைப்பதற்கான முயற்சிக்கு இதைப் பிரயோகிக்க முனையக் கூடும். இதன்மூலம் சமாதானம் தோற்கடிக்கப்படலாம். அதற்கு புலிகளைப் பொறுப்பாளியாக உருவகிக்கலாம். அதன்மூலம் விடுதலைப் போராட்டத்தை சர்வதேச சமூகத்திடமிருந்து அதன் அங்கீகாரத்திடமிருந்து எட்டாத தொலைவில் நிறுத்தி வைக்கலாம் என்று சமாதானத்தினது எதிர்முகாம் நம்புகிறது என்போமா.

☞ ஈவதற்கும், பெற்றதைப் பாதுகாப்பதற்கும் மூளை வேண்டும். - பிகெல் தெ ஸெர்வான்டிஸ்.

# நறுக்கென...

## சங்கரியார் பற்றி சில சங்கதிகள்...



**சங்கரியாரின்** சங்கதி யாவும் ஆனந்தம் தருவதாக இல்லை... அண்மையில் அவர் பீ.பி.ஸிக்கு ஒரு செவ்வியை வழங்கியிருந்தார். அதில் தமிழரசுக்கட்சியின் கூட்டம் நடைபெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமையானது தனக்கு ஆச்சரியமளிப்பதாகக் கூறினார்.

1972 இல் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் தமிழரசுக்கட்சி செயலற்றுப் போய்விட்டதாகவும் கூறியிருந்தார்.

அப்படிப்பட்ட செயலற்ற நிலையிலுள்ள ஒரு கட்சியின் கூட்டத்திற்கு தானோ, தனது கட்சிக்காரரோ போக வேண்டிய அவசியமில்லை என்றும் தெரிவித்திருந்தார். நல்லது சங்கரியாரே...

நீண்டகால அரசியல் அனுபவம் கொண்டவர் என்று கூறப்படும் உங்களுக்கே அரசியல் வரலாறு சரியாகத் தெரியவில்லை என்பதற்காக அனுதாபப்படுவதைத்தவிர வேறொன்றும் சொல்லத் தோன்றவில்லை.

1972இல் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி தோற்றம் பெற்றாலும் அதில் ஒரு அங்கமாக இணைந்து கொண்ட தமிழரசுக் கட்சி கலைக்கப்படவில்லை என்பது தங்களுக்குத் தெரியுமா?

1977 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் அக்கட்சியும் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணையாது தனியாக ஒரு தொகுதியில் போட்டியிட்டது என்பது தெரியுமா?

1977ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் மட்டக்களப்பு இரட்டை உறுப்பினர் தொகுதியில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி சார்பில் செல்லையா இராசதுரை அவர்கள் போட்டியிட்ட அதேசமயம் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சார்பில் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் போட்டியிட்டார் என்பது தெரியுமா?

கூட்டணி உருவான போதும், அதிலுள்ள அனைத்துக் கட்சிகளும் தனித்தனியாக இயங்காவிட்டாலும் கூட அவை கலைக்கப்படவில்லை என்பதே உண்மையாகும் சரி.. அது கிடக்கட்டும், எந்தவொரு இலங்கையனும் இந்தியாவுக்கு எதிரானவனாக இருக்கமுடியாது என்ற கருத்தை ஏன் சொன்னீர்கள்? யார் இப்போ இந்தியாவை எதிர்க்கிறார்கள்? அதனைத் தெளிவாகக் கூறமுடியுமா? உங்களுக்கு இந்தியா மீதான பற்றுதலும், விசுவாசமும் அதிகம் இருப்பதை வெளிப்படுத்திக்காட்டவேண்டுமென்பதற்காக இப்படி கூறியிருக்கத்தேவையில்லை.

சரி, அதுவும் கிடக்கட்டும், தமிழ்த் தேசியக் கூட்டணி மீது உங்களுக்கு நம்பிக்கையில்லை என்று கூறியுள்ளீர்கள்'

இந்த ஒரு உண்மையையாவது வெளிப்படையாக ஒப்புக்கொண்டமைக்கு நன்றி...

நம்பிக்கையில்லாதவர்களை நம்புவதில்லை என்பதுதான் உங்களை விடுதலைப்புலிகள் அழைக்காததற்கும் காரணமாக இருக்கலாமல்லவா?

## சீறிய சீற்றமென்ன, திரும்பிய வேகமென்ன...?



'போனமச்சான் இங்கு திரும்பி வந்தானடி கோமணத்தோடு' இது ஒருகாலத்திய இசைப்பாட்டு... கிராமியப்பாட்டு.

இந்தப் பாட்டைக் கேட்கும் போது (சிலநாட்களின் முன் இந்திய வானொலியில் ஒலிபரப்பினார்கள்) சிகல உறுமயவினரின் குரங்குப்பாஞ்சான் பகுதியை நோக்கிய படையெடுப்புத்தான் நினைவுக்கு வந்தது.

போர்ப்பிரகடனம் செய்த கம்பீரம் என்ன...

அரசுக்கு விடுத்த அச்சுறுத்தல் என்ன ...

அணிதிரண்டு பஸ் ஏறிப் படையெடுத்து புறப்பட்ட வேகம் என்ன... என்ன நடக்குமோ என்று அனைவரையும் பீதி கொள்ளவைத்த தன்மை என்ன...

அரசு குரங்குப்பாஞ்சான் புலிகளின் முகாமை அகற்றாவிட்டால் நமது வீரர்கள் தாமே சென்று அதனை அகற்றுவர் என சிகல உறுமய தலைவர் திலக் (கருணாரத்ன) பிரகடனம் செய்ய...

சிகல உறுமயக்காரர் இன்னும் என்ன செய்வீர்கள் என புலிகளின் திருமலை அரசியல் பொறுப்பாளரான மற்றைய 'திலக்'கை கேட்டபோது வரட்டும் பார்ப்போம் பிறகு என்ன செய்வது என்று யோசிப்போம் என்றதையடுத்து உண்மையாகவே ஒரு பதற்றநிலை விபரமற்ற அப்பாவி பொதுமக்களிடையே ஏற்பட்டது.

ஆனால் சிகல உறுமயக்காரின் 'சீனவெடி' விளையாட்டுக்களை புரிந்து கொண்டவர்கள் ஒரு நகைச்சுவையான சம்பவம் நடக்கப்போவதை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள்.

நினைத்தது போலவே நடந்தது.

ஆரவார அட்டகாசத்துடன் போனவர்கள் போன வேகத்தில் திரும்பிவந்தார்கள். வெற்றிவீரர்களாயல்ல... வெறுங்கையுடன்.

குரங்குப்பாஞ்சான் விவகாரத்தை வைத்தே ஒரு அரசியல் பிரபல்யம் பெற்றுவிடலாம் எனக் குறுகிய நோக்குடன் திட்டமிட்ட சிகல உறுமயவின் சவால் சப்பென்று போய் விட்டது.

கொள்கையடிப்படையில் சிங்கள பௌத்த மக்களிடையே கூட செல்வாக்கு பெறமுடியாத சிகல உறுமயவினரின் 'இனவாதம்' குரங்குப்பாஞ்சான் விவகாரத்தில் மோசமான அவமானத்தை சந்தித்த நிலையில் கேள்விக்குறியாகியுள்ளது.

வழமைபோல் அவர்களுக்கு பின்பலமாக அணிதிரண்டு சென்ற பிக்குகளுக்கும் அவர்கள் அவமதிப்பை தேடிக்கொடுத்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

இனி அவர்கள் என்ன செய்வார்கள்? தங்களை திருப்பியனுப்பிய பாதுகாப்புப் படையினரை திட்டுவார்கள். அவர்களுக்கு கட்டளை இட்ட அரசை திட்டுவார்கள். தங்களுடன் பெருமளவில் அணிதிரள மறுத்து ஒதுங்கிய மக்களை தேச விரோதிகள் என்பார்கள்... அவ்வளவுதான்.. பின் அடுத்த போராட்டம் பற்றி அறிக்கை விடுவார்கள்...

இல்லையேல் முகவரியில்லாமலல்லவா போய் விடுவார்கள்!

## 'நிருபம் சென்'னின் கருத்துப்பற்றி தமிழ்மக்கள்...



**இலங்கையின்** இனப்பிரச்சினையே சிக்கலானது. அதை அதிகம் இடியப்பச்சிக்கலாக்கிய பெருமை இந்தியாவைச் சாரும்.

இன்றும் கூட இலங்கை விவகாரங்களில், குறிப்பாகச் சமாதானம் குறித்த செயற்பாடுகளில் தான் எவ்விதமான தலையீடும் செய்யவில்லை. இலங்கைப் பிரச்சினைக்கு சுமுகமான சமாதானத் தீர்வு கிடைக்கவேண்டுமென்றே இந்தியா விரும்புகிறது என வெளிப்பகட்டுக்கு டில்லி அரசு கூறிக்கொண்டாலும் கூட அதன் தலையீடு என்பது இன்றைய சமாதான முயற்சிகளில் எப்படியெல்லாம் நுட்பமாக ஊடுருவியுள்ளது என்பதை அரசியல் அறிந்தோர் நன்கு அறிவர்.

நோர்வேயிலோ, ஜப்பானிலோ, தாய்லாந்திலோ, ஜேர்மனியிலோ ஏன் உலகத்தின் எந்த மூலையில் பேச்சுவார்த்தை தொடர்பான நகர்வுகள் நடந்தாலும் உடனேயே அதுபற்றி விபரிக்க. விளக்கமளிக்க மொரகொட அமெரிக்காவுக்கு பறப்பார். பீரிஸோ டில்லிக்குப் பறப்பார்.

அங்கு கேட்கப்படும் கேள்விகளுக்கு விளக்கங்கள் அளித்துச் சமாளிப்பதும், அவர்கள் வழங்கும் அறிவுறுத்தல்களை பவ்வியமாக இருவரும் கேட்டுவந்து அரசுக்கு சொல்லுவதும் கூட ஒரு மரபாகிவிட்டது.

உலக வல்லரசு, பிராந்திய வல்லரசு ஆகிய இரண்டினதும் அபிலாஷைகளுக்கு எதிராக எந்தத்தீர்வும் வந்துவிடக்கூடாது.

சண்டையென்றாலும் சமாதானமென்றாலும் இதுதான் முக்கியமாக அவதானிக்கப்பட வேண்டும்.

இல்லையெனில் எல்லாமே போச்சு...!

அமெரிக்காவின் இஷ்டத்திற்கு ஏற்ப, அதன் நேசசக்திகளின் செயற்பாடுகள் சமாதான நகர்வுகளை முன்னெடுத்துச் சென்றால் இந்தியாவுக்குப் பிடிக்காது.

இந்தியாவும் சமாதான எல்லைக்குள் செயற்படவராது. எனவே முன்னெடுப்பு முயற்சிகளை ஏதோ ஒருவகையில் குழப்பியே தீரும்.

ஒரு காலத்தில் இந்தியாவின் பிரதான எதிரி ஜே.வி.பியே. இப்போது அதுதான் இந்தியாவின் பின்புல அநுசரணையுடன் சமாதானச்சபை குழப்பியாக இயங்கிவருகிறது. சரித்திரம் தனக்குள் தானே சிரிக்கிறது.

அண்மையில் இந்தியத் தூதர் நிருபம்சென் கூறிய கருத்து இதனை உறுதிசெய்வதாக உள்ளது.

'இப்போதைய சமாதானப் பேச்சில் முஸ்லிம்களின் பங்கு குறித்து இந்திய அரசு கவனமெடுக்கும்' என்பதே அவர் கூறிய கருத்து.

வடக்கு கிழக்கில் முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் குறித்தும் இந்தியா கவனமெடுக்குமாம். இதையும் 'சென்'தான் கூறியுள்ளார்.

ஐயா, சென் அவர்களே... இந்திய அமைதிப்படை வடக்கு கிழக்கை ஆக்கிரமித்திருந்த காலத்தில் தமிழ் முஸ்லிம் மக்களின் உரிமைகளுக்கும், பாதுகாப்புக்கும் அந்தப்படையாலேயே ஆபத்து ஏற்பட்டு அவர்கள் அவலப்பட்டபோது நீங்கள் எங்கே இருந்தீர்கள்?

இந்தியாவின் இலங்கை மீதான ஆதிக்க உரிமையையும் அரசியல் அபிலாஷைகளையும் பாதுகாத்துக்கொண்டிருப்பீர்கள்... அப்படித்தானே...?

## அநுரா பற்றி அக்கா சுனேத்திரா...



**அரசியல்** வாதியாக அறியப்படாத பண்டா குடும்பத்தைச் சேர்ந்த ஒரே ஒருவர் சுனேத்திரா பண்டாரநாயக்கா. சந்திரிகா - அநுரா பண்டாரநாயக்காக்கள் இருவருக்கும் மூத்தவர். ஒரு காலத்திய பலவேகய அமைப்பின் தலைவரும் தற்போதைய 'அலேர்ட் இன்ரர்நாஷனல்' அமைப்பைச் சேர்ந்தவருமான குமார் ரூபசிங்க இவரது முன்னாள் கணவர், தற்போது 'சுனேத்திரா பவுண்டேஷன்' என்ற அமைப்பின் தலைவியாக கலை, கலாச்சார பணிகளில் ஈடுபட்டுவரும் இவர் சில தசாப்தங்களில் பின்னர் முதல் தடவையாக அரசியல் சம்பந்தமாக சில கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

பொதுசன.ஐக்கிய முன்னணி - மற்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி வட்டாரங்களில் பெரும் பரபரப்பை இவரது இக்கருத்து ஏற்படுத்தியுள்ளது.

முதலாவது கருத்து ஜே.வி. பிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையே கூட்டணி ஏற்படும் வாய்ப்பு இல்லை என்பதாகும்.

கூட்டணி தொடர்பாக தனது சகோதரி எடுத்துள்ள நிலைப்பாடு சரி எனத்தெரிவித்துள்ள சுனேத்திரா தனது தம்பியான அநுரா தவறான வழிகாட்டலில் செயற்படுகிறார் என்றும், அவர் இனவாத சக்திகளுக்கு இரையாகிவிட்டார் எனவும் வெளிப்படையாகக்கூறிவிட்டார்.

இது ஜே.வி.பிக்கு பலத்த அடியாகவும் அநுராவுக்கு பேரிடியாகவும் உள்ளது.

ஜே.வி.பி.யோ சுதந்திரக்கட்சியுடனான கூட்டமைப்புக்கான பேரம் பேசும் கருவியாக அநுராவையே பயன்படுத்தி வந்துள்ளது.

அநுராவின் பலம் பலவீனம் இரண்டும் ஜே.வி.பிக்கும் தெரியும் - அவரின் அக்காமாருக்கும் நன்கு தெரியும்.

அநுரா தனது அரசியல் சுயநலத்திற்காக, சுதந்திரக்கட்சியை ஜே.வி.பி.யின் அபிலாஷைகளுக்கேற்ப இசைந்துபோகுமாறு மறைமுக நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது பண்டா என்ற இனவாத பரம்பரையைச் சேர்ந்த சுனேத்திராவே ஜே.வி.பி.யை இனவாதிகள் என்று மறைமுகமாக பிரகடனம் செய்துள்ளமையானது சுதந்திரக்கட்சியே ஜே.வி.பி.யை இனவாதிகள் எனப்பட்டியலிட்டுள்ளதைக் காட்டுகிறது.

ஒரு பேய் மற்றொன்றைப் பார்த்து மோசமான பேய் எனக்கூறினால் மற்றப்பேய் எப்படிப்பட்டபேயாக இருக்கும்?

இனம் இனத்தோடு சேருகிறது. பேரினவாதப்பரம்பரையைச் சேர்ந்த அநுரா புதிய பேரினவாத இடதுசாரிகளான ஜே.வி.பியுடன் சேர்ந்து நிற்கிறார். அவ்வளவுதான்...

ரணிலைக் கைவிட்டு அக்கா சந்திரிகாவை நம்பிவந்த அநுராவை அக்கக்கா இப்படிச் சொல்லிவிட்டாரே...

"அச்சச்சோ...பாவம்!"

**செங்குட்டுவன்**

## மதவடி மயிலர்



**செய்தி:-** *பயங்கரவாத அமைப்புகளைத்தோற்றுவித்த காரணிகளுக்கு தீர்வு காணப்படுதல் அவசியம் என்கிறார் சந்திரிகா.*

**மயிலர்:-** காரணிகளே அவர்கள்தான்... அப்படியிருக்கையில் தீர்வு காண்பது எப்படியாம்? சந்திரிகா அம்மையார் சரியாத்தான் சொல்வார். பிழையாத்தான் செயற்படுவார் பாருங்கோ... சமாதானத்தை சண்டை பிடித்துகொண்டுவர முடியும் என்று கண்டுபிடித்த மேதையல்லே...

**செய்தி:-** *இராணுவ வாகனங்களால் ஏற்படும் விபத்துகள் குறித்து ஆராய விசாரணைக்குழு யாழ் வரும்...*

**மயிலர்:-** வருகிற குழு 'ஏ னைன்' பாதையால் வராமலிருந்தால் சரி... வந்தாலும் இராணுவ வாகனத்தை கண்டால் இறங்கி ஓடி ஒழிந்து கொள்வது நல்லது பாருங்கோ... விசாரிக்க வாறவைக்கு ஏதும் நடந்து பிறகு அவையளைப்பற்றி விசாரிக்க வேண்டியெல்லே போய்விடும்...

**செய்தி:-** *இடைக்கால நிர்வாக சபைக்கு பொதுமக்களின் ஆதரவைப்பெற பொதுசன ஐக்கிய முன்னணியின் ஆதரவைப்பெற்றால் தான் முடியும் என்கிறார் வாசுதேவ நாணயக்கார*

**மயிலர்:-** இது அலாவுதீனின் அற்புத விளக்கு கிடைத்தால் எல்லாப்பிரச்சினையும் தீரும் எண்டமாதிரியெல்லே இருக்குப் பாருங்கோ... பொதுமக்களால் தேர்வுசெய்த பொதுசன ஐக்கிய முன்னணியின் ஆதரவைப் பெற்றால் பொதுமக்களின் ஆதரவை பெறமுடியும் என்பதும் கூட கணிதவியல் சூத்திரம் போலையெல்லே கிடக்கு.

**செய்தி:-** *முடிவுகள் இன்றி முடிவடைந்த சனாதிபதி - பிரதமர் சந்திப்பு...*

**மயிலர்:-** சந்திப்பு தொடரவேண்டும் என்பதற்காக அவர்கள் முடிவெதையும் எடுக்காமலும் விட்டிருக்கலாம் அல்லவா? இரட்டை ஆட்சியில் ஒற்றை முடிவென்பது சாத்தியமில்லை என்பதையும் இதூ உணர்த்தக்கூடும்... எப்படியோ ஆளையாள் காய்வெட்டியே காலத்தை கடத்தி விடுவினம் பாருங்கோ..

**செய்தி:-** *இனவாதப் போக்கில் சனாதிபதி செயற்படுவது கண்டிக்கத்தக்கது என்கின்றனர் புதிய இடதுசாரி முன்னணியினர்.*

**மயிலர்:-** இது பண்டாரநாயக்கா பரம்பரையின் அரசியல் பாரம்பரியம் பாருங்கோ... இரத்தத்தோடு ஊறிய வாதநோய் இது பாருங்கோ... அது சரி இடதுசாரிகள் கூட இப்படி இனவாதப் போக்கில் செயற்படுகையில் சந்திரிகாவைக் குறைகூறி என்ன செய்வது. கலிகால அரசியல் இப்படித்தான் இருக்கும் பாருங்கோ.

கல்லாரே ஆயினும் கற்றாரைச் சேர்ந்து ஒழுகில் நல்லறிவு நாளும் தலைப்படுவர். - நாலடியார்

# மேற்றிராணியாரின் வாக்குமூலம்

**சிறி.இந்திரகுமார்**

அமெரிக்காவில் செப்ரெம்பர் 11இல் நடத்தப்பட்ட தாக்குதலின் பின்பு விடுதலைப் போராட்டங்களுக்கும் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கும் இடையிலான வேறுபாடு அர்த்தமிழந்து போனது.

செப்ரெம்பர் 11தாக்குதலின்பின்பு அமெரிக்காவின் பயங்கரவாதம் தொடர்பான நிலைப்பாடு அங்கீகரிக்கப்பட்ட அரசுகள் இனங்கள் மீதான தமது வஞ்சனைகளை நியாயப்படுத்தும் வலுவை ஒருவகையில் அதிகரிக்கும் சக்தியைபெற வகைசெய்து விட்டது.

இந்த வகையில் அமெரிக்கா செப்ரெம்பர் 11 தாக்குதலின் பின்பு பயங்கரவாதம் என்பதற்கான தெளிவான வரையறை ஒன்றை முன்நிறுத்தாது பொதுவான வரையறை ஒன்றிற்குள் எல்லா விடுதலைப் போராட்டங்களையும் பயங்கரவாதம் என்ற பொதுநிலையில் இருந்து நோக்கும் செயல்முறையை வகுத்துக்கொண்டது.

இது முற்றிலும் அமெரிக்க சார்பு நலனைக்கருத்திற்கொண்டு அமெரிக்க விஸ்தரிப்பின் அடிப்படைக்கான அமெரிக்காவின் பலம் மிக்க கருத்தியல் ஆயுதம் ஒன்றை உருவாக்கும் முயற்சியேயாகும்.

இந்த இலத்திரனியல் மயப்பட்ட வகையில் அமெரிக்காவின் கைகளில் இருக்கக்கூடிய நவீன அணுகுண்டுகளின் பலமிக்க சக்திகளுக்கு மேலிடக்கூடிய சக்தி பொருந்தியதே இந்த ''பயங்கரவாதம் என்கின்ற அமெரிக்காவின் கருத்தியல் ஆயுதம்'' ஆகும்.

இந்த பயங்கரவாதம் என்கின்ற அமெரிக்காவின் கருத்தியல் ஆயுதமானது அமெரிக்காவின் வசம் இருக்கின்ற எல்லா அதிநவீன ஆயுதங்களையும் பிரயோகிக்கும் அல்லது பிரயோகிக்கப்படும் என்ற எச்சரிக்கை மூலமான வசப்படுத்தலை சதா விடுத்தவண்ணமே இருக்கிறது. எனியும் இருக்கப்போகிறது.

இதன்பயனாக ஏற்கனவே அரசுகள் தத்தமது நாடுகளுக்குள் உற்பத்திசெய்து வைத்திருந்த இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளின் விளைவான அரசுகளுக்கெதிரான போராட்டங்களுக்கு அமெரிக்காவின் தெளிவற்ற பொதுமையான பயங்கரவாத என்கின்ற சர்வதேச முத்திரையை பொறித்துக்கொண்டன.

ஆனால் உண்மையான யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள அண்மையில் ஹன்ரபெரி அதிமேற்றிராணியார்(Arch bishop) கலாநிதி றோவன் வில்லியம்ஸ் சர்வதேச விவகாரங்களுக்கான றோயல் ஆய்வு நிலையத்தில் ஆற்றிய உரையின் ஒரு கூற்றை இங்கு கவனத்தில் கொள்வோம்.

...பயங்கரவாதிகள் எனச் சொல்லப்படுபவர்களும் செயல் நோக்கோடுகூடிய நீதியான இலக்குகளைக் கொண்டிருக்கலாம்.

பயங்கரவாதம் எப்போதும் கண்டிக்கப்படவேண்டியதுதான். எனினும் அதனை நிகழ்த்துபவர்களிடம் அரசியல் ரீதியிலான பகுத்தறிவுடமை இல்லை என்று எடுத்துக்கொள்ளமுடியாது எனத் தெரிவித்துள்ளார்.

றோவன் வில்லியம்ஸின் கூற்று என்பது பயங்கரவாதம் என்கின்ற பொதுப்பட்டியலுக்குள் விடுதலைப்போராட்டங்களை அடக்கிவிட்டதன் வெளிப்பாட்டின் விளைவுளில் ஒன்றுதான் இது.

ஏனென்றால் விடுதலைப் போராட்டங்கள் எப்போதும் ஒரு தெளிவான செல் நெறிகளுக்குள் நின்று ஒரு இனத்தின் விடுதலைக்காக அரசியல் பகுத்தறிவின் பாறபட்டு போராடுவதன்





விளைவாக அதன் எதிர்வினைகளை வெளிப்படுத்தி யபடிதான் இருக்கும்.

இந்த வகையில் கிறிஸ்தவ நாடுகளில் போப்பாண்டவரைப் பிரதிநிதித்துவம் செய்யக்கூடியவர்கள் என்று சொல்லக்கூடிய உயர்நிலையில் இருக்கும் ஹன்ரபெரி அதிமேற்றிராணியார் கலாநிதி றோவன் வில்லியம்ஸின் இக்கூற்று முக்கியத்துவம் பெறுகின்றது.

இந்த அடிப்படையில் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் உட்பட அமெரிக்க சார்பு கிறிஸ்தவ நாடுகளின் கொள்கைளுக்கெதிராக கிறிஸ்தவ உலகின் வலுமிக்க ஒருவரிடம் இருந்து எழுந்த பலமான எதிர்ப்பு அரசியல் கூற்றாக தைக்கொள்ளலாம்.

ஒருகாலத்தில்' பிரிட்டனின் மதக்கட்டமைப்புக்குள் மாத்திரமன்றி அரசியல் கட்டமைப்புக்குள் அரசைத் தீர்மானிக்கும் அளவுக்கு செல்வாக்குப் பொருந்தியவர்களாக இந்த அதிமேற்றிராணியார்கள் இருந்தனர். அந்த வகையில் அரசியல் ரீதியான செல்வாக்குப் பொருந்திய ஒரு கூற்றாக இதனைக் கொள்ளலாம்.

ஆகவே பேரண்டப்பேரசுகளின் பயங்கரவாதக் கூற்றின் பலவீனங்களை விமர்சிக்கும் இத்தகைய கூற்றின் ஊடாக நாம் தமிழீழ விடுதலைப்போராட்டத்தை நோக்கமுடியும்.

அதிமேற்றிராணியாரின் வார்த்தைகளை அப்படியே ஒப்புவிப்போமானால் தமிழீழ விடுதலைப் போராட்டமானது செயல் நோக்கோடு கூடிய நீதியான இலக்கு ஒன்றிற்காகவே நடந்துவருகின்றது.

இதனை சர்வதேச சமூகம் புரிந்து கொண்டுள்ளதை பல தடவைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் றோவன் வில்லியம்ஸ் தெரிவித்திருப்பது போல கயமைமான அரசு ஒன்றிற்கெதிராக படைத்துறை நடவடிக்கை எடுப்பது தொடர்பாக எந்த அரசும் தனக்குத்தானே நீதியாளராக மாறக்கூடாது.

ஆக,அமெரிக்காவின், தமிழீழ விடுதலைப்போராட்டம் தொடர்பான நிலைப்பாடு எப்படிப்பட்டதாக இருக்கிறது என்றால் கயமையான இலங்கை அரசிற்கெதிராக படைத்துறை நடவடிக்கை எடுத்த புலிகள்மீது அமெரிக்கா ஒரு பக்கச்சார்பான நீதியாளராக மாறுவதையே புலிகள் மீதான அழுத் தங்களும் தடைநீடிப்பும் வெளிப்படுத்துகின்றன.

ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளுக்கு அவற்றிற்கே உரியவையும் வெளிப்படையாக தெரிகின்றவையுமான அக்கறைகளைக் காட்டாத எந்த அரசு அல்லது நிர்வாகம் வன்செயலை மேற்கொள்ளும் தனிநபர்களை ஒத்ததாகவே இருக்கிறது என்பது போலவே தமிழ் மக்கள் தொடர்பான விவகாரத்தில் இலங்கையில் மாறிமாறி ஆட்சிபீடம் ஏறிய அரசுகளின் செயற்பாடுகள் இருந்தன.

இதனை நியாயப்படுத்தும் வகையில் ஒத்த வெளிப்பாடுகளைத்தான் அமெரிக்காவும் வெளிப்படுத்துகின்றதா?

ஆகவே, பயங்கரவாதம் தொடர்பான கருத்தியல் பதத்தின் தெளிவு வரையறை செய்யப்பட வேண்டியதன் தேவை உலகில் இப்போது எழுந்துள்ளது.

இந்த அடிப்படையில் இலங்கையில் புலிகளுக்கும் அரசிற்கும் இடையில் ஆறு சுற்றுப் பேச்சுக்கள் சர்வதேச நாடுகளின் நகரங்களில் நடைபெற்று இப்போது இடைக்காலத் திட்டவரைபொன்றை தயாரிக்கும் முயற்சியில் புலிகள் ஈடுபட்டிருக்கும் நிலையில் அமெரிக்கா புலிகள் மீதானதடையை நீடித்திருப்பதும் பிரிட்டன் தடையை தக்கவைத்திருப்பதும் பொருத்தமில்லாத செயற்பாட்டை வெளிப்படுத்துகின்றது.

ஆகவே உலக ஒழுங்கின் இசைவாக்கத்தில் பங்குகொண்டு நிற்கும் புலிகள் போன்ற விடுதலை அமைப்புக்களின் செயற்பாடுகளை மீள்பரிசீலனை செய்யவேண்டிய அவசியத்தை காலக்கிரமத்தில் உலகின் சக்திமிக்க அரசுகளின் மத்தியில் நிச்சயம் தோற்றுவிக்கவேசெய்யும்.

இந்தவகையில் உலகில் ஒடுக்கப்படும் இனங்களுக்குரிய உரிமைகளைப் பெறக்கூடிய உரியவகைகளையாவது அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கை போன்ற அரசுகள்மீது பிரயோகிக்க வேண்டும்

பதிலாக மாற்றீடான விஸ்தரிப்புவாத இலாப நலன்களை பெற்றுக்கொள்வதற்கு புலிகள் போன்ற விடுதலை அமைப்புக்களை பயங்கரவாதம் எனும் பொது தரப்படுத்தலுக்குள் அடக்குவது இந்த நாடுகளின் நியாயத் தன்மையை கேலிசெய்யவே வழி செய்யும்.

இது மேலும் மேலும் உலகில் புதிய புரட்சிகர எதிர்ப்பு எண்ணங்களை தோற்றுவித்துக் கொண்டேஇருக்கும்.

அந்த வகையில் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கென புறப்பட்டு எதிர்ப்புபோராட்டங்களுக்குரிய வித்துக்களை விதைப்பதாகவே முடியும்.

இதனடிப்படையில் துரதிஷ்டவசமாக பயங்கரவாத பட்டியலுக்குள் உள்ளடக்கப்பட்டிருக்கும் புலிகள் போன்ற அமைப்புக்களை நீக்கி அவர்களின் பேசும் வல்லமையை சர்வதேச நாடுகளின் மத்தியில் கேட்க பேரண்ட பேரரசுகளின் நடவடிக்கைகள் வழிசெய்யவேண்டும்.

இதுவே உலகின் நிரந்தர அமைதிக்கும் நியாயமான தீர்வுகளுக்கும் வழி வகுக்கும்

---

## ஓகோ! அப்படியா!



ஆனந்தசங்கரி. B.B.C.பேட்டியில்.

எந்த இலங்கையனும் இந்தியாவிற்கு எதிரானவனாக இருக்க முடியாது.

**ஓகோ !அப்படியா!**



பத்திரிகையாளரிடம். திலக் கருணாரட்ண.

அடுத்த முறை சிறந்த திட்டத்துடன் குரங்குப்பாஞ்சான் நோக்கி படை எடுப்போம்.

**ஓகோ !அப்படியா!**



செய்தியாளரிடம். விமல் வீரவன்ச.

அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு கூட்டணிதான் வேண்டுமென்பதில்லை. கூட்டணி இல்லாமலும் நாம் அரசைக் கவிழ்க்க ஒன்றிணைந்து செயற்படுவோம்.

**ஓகோ !அப்படியா!**



சிகல உறுமய அமைப்பாளர். சம்பிக்க ரணவக்க. செய்தியாளரிடம்.

பிரபா யுத்தத்திற்கு வந்தால் அப்போது பிறக்கும் எல்லாக் குழந்தைகளும் துட்டகைமுனு ஆவர்.

**ஓகோ !அப்படியா!**



இரத்தோட்டையில் பரிசளிப்பு விழாவில் அமைச்சர் திஸ்ஸஅத்தநாயக்க

நாட்டில் பல்கலைக் கழகங்கள் இருப்பதைவிட மூடி விடுவது சிறந்தது.

**ஓகோ !அப்படியா!**



காலிப் பொதுக் கூட்டத்தில் அநுரா.

28 வருடங்கள் பாராளு மன்றில் இருந்தும் எதுவித பலனும் எனக்குக் கிடைக்கவில்லை.

**ஓகோ !அப்படியா!**



அனுராதபுரத்தில் நடந்த கலந்துரையாடலில். புதிய இடதுசாரி முன்னாள் தலைவர்.விக்கிரமபாகு கருணாரட்ண.

சிறு இருமல் ஏற்பட்டாலும் அமெரிக்காவிற்கு ஓடிவிடும் அநுரா போன்றோரிடம் அதிகாரத்தை வழங்க எமக்கு அவசியம் இல்லை.

நேர்நோக்கு

# அம்பாறையில் மாறாத சோகமாகத் தொடருமா...?

**அம்பாறை** மாவட்டம் திராய்க்கேணியில் கடந்த 12ம் திகதி கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி தமிழ் மக்களிடையே மீண்டும் துன்பநினைவுகளைக் கிளறியுள்ளது. 1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் 06ம் திகதி இராணுவம் மற்றும் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் பிடித்துச்செல்லப் பட்ட 48 பொது மக்களின் புதை குழியாக இது இருக்குமோ என எழுந்த சந்தேகமே இவ்வாறான ஓர் உணர்வைத்தூண்டியுள்ளது. இதன்போது காணாமல்போன பொது மக்களின் உறவினர்கள் மீண்டும் ஒரு மரணவீட்டை- அதன் சோகத்தை அனுபவிக்கவேண்டிய நிலைக்கு உள்ளாகினர்.

அது மட்டுமல்லாது அம்பாறை மாவட்டத்திலும் - கிழக்கு மாகாணம் முழுவதிலுமே இவ்வாறு காணாமல் போன தமிழ் மக்களின் பெற்றோர் உறவினர்கள் இப்புதைகுழி கண்டு பிடிக்கப்பட்டதனையடுத்து வேறும் புதைகுழிகள் உண்டா? எனத் தேடுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். கிழக்கு மாகாணத்தில் 1990-1994 ஆண்டு காலப்பகுதியில் பெருமளவு பொதுமக்கள் படுகொலைசெய்யப்பட்டு அவர்களின் உடல்கள் மர்மமான இடங்களில் புதைக்கப்பட்டுள்ளன. இவர்கள் படையினராலும் சிங்கள, முஸ்லிம் ஊர்காவல்படையினராலும் கைது செய்யப்பட்டமை மட்டுமே அவர்களின் உறவினர்களுக்குத்தெரியும். பின்னர் அவர்களின் நிலை என்ன? என்பது குறித்து எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை.

இவ்வாறு காணாமல் போனவர்கள் என்ன ஆயினர்? என்பதற்கு ஆதாரத்துடனான சான்றுகள் எதுவும் அவர்களுக்குக்கிடைப்பதில்லை. ஆனால் சிறிலங்காவின் படையினர், பிடித்துச் சென்றவர்கள் குறித்த தகவல்களைக்கூறா விட்டால், அவர்களுக்கு என்ன நடந்திருக்கும்? என்ற ஊகத்தின் அடிப்படையில் மக்களே முடிவுசெய்துகொள்வர்.

ஓரிருவர் சில வருடங்களின் பின் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் பெற்றோருக்குக்கிடைக்கக்கூடும். மிக அருமையாக நீண்ட காலத்தின்பின் கூட சிறையில் இருப்பதாக தகவல் கிடைப்பதும் உண்டு. ஆனால் படையினர் கைது செய்து விட்டு தாம் பிடிக்கவேயில்லை எனக்கைவிரித்தால் அவர்கள் சித்திரவதை மூலம் கொடூரமாகக்கொல்லப்பட்டு இனம்தெரியாத இடங்களில் புதைக்கப்பட்டிருப்பார்கள் என்றே ஊகிக்க முடியும்.

இவ்வாறானவர்களின் பெற்றோர் உறவினர்கள் தமது வாழ்நாளில் என்றுமே ஆற்ற முடியாத துயரத்தை அனுபவிப்பவர்களாகவே இருக்கின்றனர். குறிப்பிட்ட தனது உறவினர் உயிருடன் இருக்கிறாரா? இல்லையா? என்ற முடிவுதெரியாமல் பெரும் மன உளைச்சல்களுக்கு உள்ளாகின்றனர்.

ஒருவர் இறந்துவிட்டார் என உறுதிப் படுத்திக்கொள்ளமுடியுமானால் அவரது உயிரற்ற உடலைப்பார்த்து இறுதி மரியாதைகள், கிரியைகள் செய்யமுடியுமானால் கிடைக்கக்கூடிய மனஆறுதல்கூட இவர்களுக்குக் கிடைப்பதில்லை. இதனால் இவர்கள் பெரும் மனோவியல் பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். அதுமட்டுமல்லாது இவ்வாறு எங்கோ எந்த மூலையிலோ ஒருசிலரைப் புதைத்த புதைகுழிகள் குறித்து வெளியாகும் செய்திகள் கூட இவர்களை அது தம்முடைய பிள்ளையுடையனதாக இருக்குமோ? கணவனுடையதாக இருக்குமோ? உறவினருடையதாக இருக்கக் கூடுமோ? என எண்ணி புதிதாகத் துன்பத்தை கிளறிவிடுவதாக இருக்கின்றது.

இத்தகையதொரு நிலை வடக்கு கிழக்கில் வாழ்கின்ற பல்லாயிரக்கணக்கான மக்களின் தனிப்பட்ட துயரமாகவும் ஒட்டுமொத்த தமிழினத்திற்குமே கவலை தருவதாகவும் இருக்கின்றது.

எனவே படையினரால் கைதாகிக் காணாமல்



போனவர்கள் தொடர்பாக இறுதியான தகவல்கள் எதுவும் கிடைக்கப்பெறாதநிலையில் இந்தப்படுகொலைகளுக்கு ஏவிவிட்ட அரசாங்கத்திடமே மீண்டும், மீண்டும் நீதி கேட்கவேண்டிய நிலையில் தமிழ்மக்கள் உள்ளனர். காலத்திற்குக்காலம் இம்மக்களின் குரல்கள் ஓங்கி ஒலிக்கும் போது ஆட்சியாளர்களும் சில அரசியல்வாதிகளும் இணைந்து தாமும் நீலிக் கண்ணீர்வடிப்பதும் அவர்களை எவ்வாறாவது தேடித்தருவதாகக்கூறி காலக்கெடு கோருவதும் வழமை. சிறிலங்காவின் சனாதிபதியாகச் சந்திரிகா குமாரதுங்க பதவிஏற்று அவர் நடத்திய "சமாதானத்திற்கான யுத்த"காலப்பகுதியில் யாழ் குடாநாட்டில் இவ்வாறு 800ற்கும் அதிகமானோர் காணாமல் போயினர். இவர்களில் சுண்டுக்குளிப்பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசாமி மற்றும் அவரது தாய், சகோதரர், அயலவர் ஒருவரது சடலங்களும் இப்படுகொலையில் குற்றவாளியான இராணுவச்சிப்பாய் ஒருவர் காட்டிய சில புதைகுழிகளும் தவிர ஏனையோர் குறித்து சந்திரிகா அரசாங்கம் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இப்புதைகுழிகள் தொடர்பாகவும் காணாமல் போன ஏனையோர் தொடர்பாகவும் எத்தனையோ போராட்டங்கள் நடத்தியும் இதுவரை காலமும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இவர்கள் இராணுவத்தால் கைதாகி படுகொலை செய்யப்பட்டதற்கான உறுதிப்பத்திரம் வழங்கக்கூட அரசாங்கம் மறுத்துவருகிறது.

இவர்கள் தொடர்பான தகவல்களைத் தேடித்தர தம்மைச்சந்தித்த பெற்றோர். பாதுகாவலரிடம் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆறுமாத கால அவகாசம் கோரினார். பின்னர் பல ஆறு மாதங்கள் கடந்தும் கூட இன்னமும் அதேநிலையிலேயே இவ்விவகாரம் இருக்கின்றது. இன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூட உறுதிமொழிகளுடன் மட்டும் நிறுத்திக் கொண்டுள்ளார்.

கண்டெடுக்கப்பட்ட எலும்புகள், மண்டையோடுகளைக்கூட- இன்றைய நவீன யுகத்தில் பல வழிகள் இருந்தும்- இது இன்னாருடையதுதான் என உறுதிப்படுத்த அரசாங்கம் முன்வரவில்லை. அவ்வாறு உறுதிப்படுத்தினால் படையினர் மேற்கொண்ட படுகொலைகள் காட்டிக்கொடுக்கப்பட்டுவிடும் என அரசாங்கம் நம்புகிறது.

எனவே எத்தனை மனிதப்புதைகுழிகள் தான் கண்டுபிடிக்கப்பட்டாலும் குற்றவாளியிடமே நியாயம் கேட்கும் நிலைமை தொடரும் போது தமிழ் மக்களுக்கு நியாயமேதும் கிட்டிவிடப் போவதில்லை. ஆனால் இப்படுகொலைகளுக்கு நல்ல தீர்ப்பு எவ்வாறாயினும் கிடைத்தே தீரும், அதற்குரிய காலம் கனியும்போது .

வேலவன்

---

# யாழ்ப்பாணம் புதிய அச்சுறுத்தல்களின் களமாக விஸ்தரிக்கப்படுகின்றதா?

**புரிந்துணர்வு** உடன்பாட்டிற்குப் பின்னர் பல தடவை யாழ்ப்பாணம் பதட்டத்துக்கு உட்பட்டுள்ளது. அவை உருவாக குடாநாட்டில் உள்ள கட்டுப்படுத்தப்படாத ஆக்கிரமிப்பின் வலிமையும் அவை நேரடியாகவோ மறைமுகமாகவோ ஏற்படுத்தியுள்ள குழுக்களின் அடாவடித்தனங்களுமே காரணங்கள் ஆகும்.

இவற்றின் கட்டுக்கடங்கா மனோபாவமும் ஒடுக்குமுறையின் தொடர்ச்சியும் அவ்வப்போது புரிந்துணர்வு உடன்பாட்டிற்குப் பின்னரும் பதட்டத்தை உண்டாக்குகின்றன. இதன் மிகப்பிந்திய வெளிப்பாட்டை கடந்த ஒரு மாதமாக தொடர்ச்சியாக அவதானிக்கலாம்.

இக்காலத்துள் உயிர்ப்பலிகளும், காயமடைதல்களும் நிகழ்ந்துள்ளன. இவற்றில் எவையுமே தற்செயலானவை என்று கருதக்கூடியன அல்ல. இதற்கு அவற்றின் பின்னணியில் நின்று செயற்படும் மாற்று அரசியல் சக்திகளே காரணமாக இருக்கின்றன.

பிந்தியதில் முதலாவது சம்பவம் யாழ்ப்பாணத்தில் ஒரு பகுதி மாணவர்களோடு இன்னோர் பிரிவு கனிஷ்ட மாணவர்களுக்கு ஏற்பட்ட முரண்பாடு பெரும் மோதலாக உருவெடுத்தது. கனிஷ்ட மாணவர்களோடு இணைந்துகொண்ட ஆயுததாரிகளான இரு இளைஞர்குழுக்கள் மற்றைய மாணவர்களை வீதி வீதியாகத் துரத்தித்துரத்தித் தாக்கின.

கத்திகள், அலவாங்குகள், வாள்கள் உட்பட உயிருக்கு ஊறுவிளைவிக்கக்கூடிய ஆயுதங்களில் இருந்துமாணவர்கள் மயிரிழையில் உயிர் தப்பியபோதும் சிலர் காயங்களுக்கு உள்ளாக நேர்ந்தது.

மாணவர்களுக்கு இடையிலான ஒரு சாதாரண முரண்பாடு திட்டமிட்டுக் கையாளப்பட்டு இத்தகைய பெரும் மோதலாக மாற்றப்பட்டது. உயிர்ப்பலியையும் சேதங்களையும் பெருமளவில் ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட திட்டம் ஒப்பீட்டளவில் தோற்றுப் போயிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளிலும் உருவாகியுள்ள தென்னிந்திய சினிமாப்படங்களின் பெயர்களிலான குழுக்களை, சிறிலங்கா இராணுவமும் அதனோடு தொடர்புடைய தமிழ் விரோத சக்திகளும் கையாண்டு வருகின்றன. அக்குழுக்கள் அண்மைய நாள்களாக மக்கள் மற்றும் மாணவர்களிடையே ஏற்படும் சாதாரண உறவுநிலை பாதிப்புக்களை பயன்படுத்தி பெரும் முரண்பாடுகளுக்கும் மோசமான விளைவுகளுக்கும் அவற்றை இட்டுச்செல்ல முயல்கின்றன.

இவற்றின் ஊடாக யாழ்ப்பாணத்தில் எழுச்சிகொண்டுள்ள தமிழ்த்தேசியம் பற்றிய உணர்வு விழிப்பை மழுங்கடிக்கவும் திசை திருப்பவும் இந்த சக்திகள் முயன்றுவருகின்றன. இதற்காக எதனோடும் தொடர்புபடாத அப்பாவிகளை கொலை செய்யவும் தலைப்படுகின்றன.



கடந்தவாரம் யாழ்ப்பாணம் நீராவியடியில் கத்தியால் இளைஞன் குத்திக்கொலை செய்யப்பட்ட சம்பவம் இத்தகைய ஒன்றேயாகும். இரண்டு இளைஞர்களுக்கு இடையிலான ஒரு காதல் விவகாரம் இரவு நேரம் வீதியில் வைத்துக்கொல்லப்பட்ட ஒரு இளைஞனது சடலம் கண்டெடுக்கப்பட்டதோடு முடிந்துள்ளது. இக்கொலையை ஒரு இளைஞனின் பக்கம் சார்ந்த சினிமாப்பட பெயரிலான அடிதடிக்குழு செய்திருக்கிறது.

இப்போது இதில் சம்மந்தப்பட்ட கும்பலின் இளைஞர்கள் சிறிலங்கா பொலிசார் வசம் உள்ளனர். இதன் விசாரணை முடிவுகள் எவ்வாறாக அமைந்தாலும் ஏழாண்டுக்கு மேலான படையினரின் குடாநாட்டு ஆக்கிரமிப்பு இப்படி உயிர்களை பலியெடுக்கும், காயப்படுத்தும் நிலைக்கு வழிசமைத்துவிட்டது. இது தமிழர்களின் ஒன்றிணைந்த வாழ்வுமுறைக்கு திட்டமிட்டு சிறிலங்கா இராணுவத்தால் விடுக்கப்படும் ஒரு சவாலேயாகும்.

இத்தகைய சவாலை யாழ்ப்பாணம் எதிர்கொண்டு வரும் சூழ்நிலையில், சிறிலங்கா இராணுவம் புதிதாக இன்னொரு சவாலை உண்டுபண்ணியிருக்கிறது. வீதி விபத்துக்கள் என்ற வடிவில் தமிழர்களை கொல்வதும் காயப்படுத்துதல்களும் கடந்த இரு வாரங்களாக அதிகரித்துள்ளமை இதனையே காட்டுகின்றன.

இரு இளைஞர்கள் கொல்லப்பட்ட தண்ணீர்த் தாங்கியடி விபத்தில் இருந்து இறுதியாக அரியாலை மாம்பழம் சந்தியில் முச்சக்கர வண்டியை மோதி சாரதி உட்பட பலரைக் காயப்படுத்தியது வரை அனைத்தும் இச்சந்தேகத்தை பலமாக கிளப்புவனவாகவே உள்ளன.

யாழ்.குடாநாட்டில் அன்றாடம் பல வாகன விபத்துக்களும் உயிரிழப்புகளும் இடம்பெறுகின்றனதான். ஆனால் இராணுவ வாகனங்களால் ஏற்படும் விபத்துக்களின் பின்னர் படையினர் நடந்துகொள்ளும் முறைதான் இன அழிப்பு நடவடிக்கையின் ஒரு வடிவத்தைக்காட்டுவதாக உள்ளது.

தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் மீது அதீத நம்பிக்கையும் செயலாண்மையும் கொண்டுள்ள தமிழர்களை வாகன விபத்து என்ற இவ்வடிவம் மூலமாக கொன்று குவிக்க படைத்தரப்பு முயல்கின்றதா என்ற சந்தேகம் தவிர்க்கமுடியாததாகவே உள்ளது. விபத்து நடந்ததன் பின்னர் அதன் தடயங்களை இராணுவ, பொலிஸ் அதிகாரங்களைப்பிரயோகித்து அகற்றுவது நீதியை புறமொதுக்கும் செயலேயாகும். இதனை கண்டிக்கும், எதிர்க்கும், அம்பலப்படுத்தும் மக்களும் பத்திரிகையாளர்களும் தயவு தாட்சண்யம் இன்றி தாக்கப்படுகின்றார்கள்.

அண்மைய விபத்துக்களால் காயமடைந்தோரின் எண்ணிக்கையைவிட இத்தகைய தாக்குதல்களால் காயமடைந்தோரின் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது. இது யுத்த காலத்தில் செய்ததை படையினர் புரிந்துணர்வு உடன்பாடு அமுலில் உள்ள காலத்திலும் செய்யமுடிவதையே காட்டுகின்றது. யுத்த நிறுத்த மீறலானதும் மனித உரிமை மீறலுமான இச்செயல்கள் இதுவரை நடந்துள்ள ஐந்து இராணுவ வாகன விபத்துக்களின் பின்பும் இடம்பெற்றுள்ளன. யாழ்ப்பாணம் பிரதான வீதி, தண்ணீர் தாங்கியடி,கொட்டடி, இலுப்பை யடிச்சந்தி, சாவகச்சேரியில் கச்சாய், அரியாலை மாம்பழம் சந்தி ஆகிய இடங்களில் விபத்துத் தடயங்கள் அகற்றப்பட்டதோடு மக்கள் தாக்கப்பட்டுமுள்ளனர்.

இவை இனிவரும் காலங்களில் மக்கள் விபத்துக்கள் என்ற போர்வையில் கொன்றொழிக்கப்படலாம் என்ற அச்சத்தை அதிகரிப்பனவாகவே உள்ளன. ஏனெனில் சிறிலங்காவின் நீதித்துறையோ சர்வதேச போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுவோ இது தொடர்பில் வலுவான நடவடிக்கைகளை எடுத்ததாக இல்லை.

மொத்தத்தில் சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பின் வலிய கரங்கள் குழுக்களூடாக மறைமுகமாகவும் விபத்துக்களும் அது போன்ற பிற வடிவங்களூடாகவும் நேரடியாகவும் யாழ்ப்பாண மக்களை அச்சுறுத்தத்தொடங்கிவிட்டன. இவற்றில் இருந்து தற்காத்துக்கொள்ள போதியவிழிப்பும் போதியஅதிகாரக் கைவரவும் தான் உதவும்.

ஞாபகன்

# இந்திய உளவுத்துறை வரலாற்றில் கே.வி.உன்னிகிருஷ்ணன்

*1987ல் இந்திய அரசால் கைதுசெய்யப்பட்ட உன்னிகிருஷ்ணன் முன்பு இந்தியாவின் உதவிப்பொலிஸ்மா அதிபராகப் பதவிவகித்தார். அதன் பின் அவர் இந்தியாவின் வெளிநாட்டு உளவமைப்பு றோவில்(RAW) இணைக்கப்பட்டார். 1981ல் தனது 41ம் வயதில் கே.வி.உன்னிகிருஷ்ணன் கொழும்பு இந்தியத்தூதரகத்தில் றோ அதிகாரியாகப்பணியாற்ற வந்து சேர்ந்தார். அவருடைய வீழ்ச்சிக்கான வித்து கொழும்பில்தான் இடப்பட்டது.*

இந்திய அரச நிர்வாகம் மேற்கு நாட்டு உளவமைப்புக்களின் சேவையில் இயங்குகின்றது என்று இந்தியாவுக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் பேராசிரியர் ஜோன் கெனத் கல்பிறெயித் (JOHN KENNETH GALBRAITH) பகிரங்கமாகக் கூறியுள்ளா் வெளிநாட்டு உளவுத் துறையினர் இந்திய நிர்வாகக் கட்டமைப்பிற்குள் நன்கு ஊடுருவியுள்ளனர் என்பது பேராசிரியரின் கூற்று. இது எவ்வளவு உண்மை என்பதை 1985 தொடக்கம் 1987 வரை நடந்த நிகழ்ச்சிகள் நிரூபிக்கின்றன.

நவீன இந்தியாவின் மிகப்பெரிய ஊழல் என்று ஆய்வாளர்களால் வர்ணிக்கப்படும் நிகழ்ச்சிகள் 1985 முற்பகுதியில் தொடங்கின. 31ஒக்ரோபர் 1984ல் இந்திராகாந்தி கொல்லப்பட்ட பின் இந்தியப் பிரதமராக ராஜீவ்காந்தி உயர்த்தப்பட்டார். பதவி மாற்றம் காரணமாக இந்தியாவின் உள்நாட்டு புலனாய்வுப் பணியகம் மந்தகதியில் இயங்கியதால்கைது நடவடிக்கைகள் பிற்போடப்பட்டன. ஐபி(IB) எனப்படும் இப்பணியகம் 1985 ஜனவரியில் தனது துரிதகதிச்செயற்பாடுகளைத்தொடங்கியது.

மேற்கு ஐரோப்பிய நாடுகளின் தொழிலகங்களுக்கும் பொறியியல் நிறுவனங்களுக்கும் இந்திய முகவராகச் செயற்பட்ட மனெக்லால் என்ற வர்த்தக ஸ்தாபனத்தின் பிரத்தியேக அலுவலகத்தினுள் அதிரடியாக ஐபி அதிகாரிகள் நள்ளிரவில் நுழைந்தனர். அது ஜனவரி 16. 1985ம் நாள் மனெக்லால் நிறுவனத்தின் தொடர்பு அதிகாரி குமார் நரெயின். ராஜீவ் காந்தியின் முதன்மைச்செயலர் டாக்டர் பீ.சி. அலெக்சாந்தரின் பிரத்தியேக உதவியாளன் பீ.கோபாலன் ஆகியோர் அங்கு மது அருந்திக்கொண்டிருந்தனர்.

இருவரும் கொடுத்த தகவலின் அடிப்படையில் சனாதிபதி ஜெயின் சிங்கின் உதவியாளன். பிரதமர் அலுவலகத்தின் இருமுக்கிய அதிகாரிகள். பாதுகாப்பு அமைச்சகத்தின் கொள்வனவு மற்றும் தயாரிப்பு அதிகாரி. பொருளாதாரத்திணைக்களத்தின் மூத்த அதிகாரி ஆகியோர் அன்றே விடியுமுன் கைது செய்யப்பட்டனர். ஜனவரி18.1985ல் பாராளுமன்றத்தின் முன் தோன்றிய ராஜீவ் காந்தி முழு விபரத்தையும் எடுத்துக்கூறியதோடு நாட்டில் அவசரநிலை தோன்றி விட்டதாகவும் கூறினார்.

மிகவும் கொதிப்படைந்த ராஜீவ் காந்தி பிரெஞ்சு நாட்டின் தூதரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பின்வருமாறு திட்டினார். "எனது நாட்டின் இரகசியங்களைத் திருடுவதற்கு உங்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?" அதற்குப்பதிலாக. "உங்கள் நாட்டில் திருடக்கூடிய இரகசியம் என்ன இருக்கிறது" என்றார் தூதுவர். இது நாட்டு இராசதந்திர உறவுகளும் முறியுமளவுக்கு பழுதடைந்தன. பின்பு எல்லாம் சரியாகிவிட்டன.

கைதுசெய்யப்பட்டவர்கள் நீதிமன்றத்தின்முன் நிறுத்தப்பட்டனர். 2100பக்கம் கொண்ட குற்றப்பத்திரிகையை அரசு தாக்கல் செய்தது. 188 சாட்சிகள் அழைக்கப்பட்டனர். புலனாய்வுத்துறையினரின் அறிக்கைப்படி மனெக்லால் நிறுவனம் தலைமையிலான கும்பல் 1972 தொடக்கம் செயற்பட்டுக்கொண்டிருந்தது. ஆனால் அவர்களுக்கு எதிரான காத்திரமான நடவடிக்கை 1985க்கு முன் எடுக்கப்படவில்லை. குமார் நரெயின் எல்லா மட்டத்திலும் ஊடுருவிச்செயற்பட்டார். வழக்குப்போடப்பட்ட பின்பும் அவர்உயர்மட்டத் தொடர்புகள் காரணமாகத் தப்பிவிட்டார்.சிறை வைக்கப்பட்டால் அவர் பெரிய மனிதர்கள் தொடர்பு பட்ட இரகசியங்களை வெளியிடலாம் என்ற அச்சமும் இருந்திருக்கலாம்.

இதே காலப்பகுதியில் இந்தியஆயுதப்படைகளில் உயர் பதவி வகித்த லார்க்கின் (LARKIN) சகோதரர்களும் கைதுசெய்யப்பட்டனர். இவருடைய தந்தை ஆங்கிலேயர். தாய் இந்தியப்பெண் இருவரும் பாகிஸ்தானுக்கு எதிரான போரில் அருஞ்சாதனை படைத்தவர்கள். மூத்த சகோதரர் இந்தியவிமானப் படையின் தலைமை அதிகாரியாகவும். இளைய சகோதரர் இராணுவத்தில் மேஜர் ஜெனரலாகவும் பதவி வகித்தவர்கள். கைதுசெய்யப்படும்போது இருவரும் இளைப்பாறிவிட்டனர். அவுஸ்திரேலியாவுக்கு பிரசாவுரிமை பெற்று செல்வதற்குத் தயாராக இருந்தனர். இந்தியா ருஷ்யாவிடமிருந்து கொள்வனவு செய்த விமானங்கள். ஆயுதங்கள். பயிற்சி விவரங்கள் பற்றிய தரவுகளை சி.ஐ.ஏ அமைப்பிற்கு வழங்கிய குற்றத்திற்காக சிறையில் அடைக்கப்பட்டனர்.

பதினைந்து வருடங்களுக்கு மேலாக சி.ஐ.ஏயின் முகவராக பணியாற்றிய றாம்சுவரூப் என்பவரும் 1985ல் கைதுசெய்யப்பட்டார்.இவர் உபகண்டம் பிளவுபட்டபோது லாகோர் நகரில் இருந்து புதுடில்லி வந்தார். மிதிவண்டி திருத்துநராக வாழ்க்கையை ஆரம்பித்தவர் கைது செய்யப்படும்போது அமெரிக்காவுக்கு மாத்திரமல்ல இஸ்ரேயில். மேற்கு ஜேர்மனி. தாய்வான் ஆகியவற்றிற்கும் உளவுப்பணி ஆற்றினார்.ஹரி வெதர்பீ என்ற அமெரிக்க இராசதந்திரியை இந்தியா நாடுகடத்தியபோது அவர் றாம் சுவரூப்பிற்கு நன்றி கூறிவிட்டுச்சென்றார். அத்தோடு தனது இடத்திற்கு நியமிக்கப்பட்ட சகாவுக்கும் றாம் சுவரூப்பை அறிமுகம் செய்துவைத்தார்.

1987ல் கைது செய்யப்பட்ட உன்னிகிருஷ்ணன் முன்பு இந்தியாவின் உதவிப்பொலிஸ்மா அதிபராகப் பதவி வகித்தார். அதன் பின் அவர் இந்தியாவின் வெளிநாட்டு உளவமைப்பு றோவில்(RAW) இணைக்கப்பட்டார். 1981ல் தனது 41ம் வயதில் கே.வி.உன்னிகிருஷ்ணன் கொழும்பு இந்தியத் தூதரகத்தில் றோ அதிகாரியாகப் பணியாற்ற வந்து சேர்ந்தார். அவருடைய வீழ்ச்சிக்கான வித்து கொழும்பில்தான் இடப்பட்டது. எம்மில் ஒருசிலரைப்போல் உன்னிகிருஷ்ணன் தனது மனைவிக்கு மிகவும் பயந்து நடப்பவர். அந்த அம்மாள் பெரிய இடத்துப் பெண். வாட்டசாட்டமான உடலமைப்பும் சிம்மக் குரலும் கொண்டவர். வேறுபெண்களிடம் சுகம் தேடும்நோக்கில் உன்னிகிருஷ்ணனின் கண்ணும் கருத்தும் சுழன்றுகொண்டிருந்ததை அமெரிக்கத் தூதரகத்தில் பணியாற்றிய சி.ஐ.ஏ அதிகாரி அவதானித்துவிட்டார்.

றோ அதிகாரியை வீழ்த்தும் உபாயத்தை சி.ஐ.ஏ அதிகாரி உடனடியாக வடிவமைத்தார். முதற்கட்டமாக உன்னிகிருஷ்ணனுடன் ஒரு நட்புறவை ஏற்படுத்திக்கொண்டார். அடுத்ததாக ஒரு மாதிரியான பெண்கள் வாழும் விடுதிகளுக்கு றோ முகவரை அழைத்துச்சென்றார். கொடுப்பனவுகளைத் தானே கவனித்துக்கொண்டார். இது உன்னிகிருஷ்ணனுக்கு மிகவும் உவப்பாக இருந்தது. தன்னை அறியாமலே அவர் சி.ஐ.ஏ அதிகாரியின் பிடியில் மிகவும் இறுக்கமாகச் சிக்கிக்கொண்டார். இதன்பின் நன்றியுணர்வு மேலிட இந்திய தூதரகத்தில் நடப்பவை யாவற்றையும் சி.ஐ.ஏ அதிகாரி கேட்ட போதெல்லாம் வழங்கிக்கொண்டிருந்தார்.

1983ல் ஜெயவர்த்தன அரசு நாடு தழுவிய ரீதியில் நடத்திய தமிழர்களுக்குஎதிரான படுகொலைகளைத் தொடர்ந்து பலர் தமிழ்நாட்டிற்கு அகதிகளாகச் சென்றனர். சிங்களப் படைகளுக்கு எதிராக ஆயுதப் போர் நடத்தும் நோக்கில் தமிழ் இளைஞர்கள் தமிழ் நாட்டிலும் பிற மாநிலங்களிலும் நிறுவப்பட்ட பயிற்சி பாசறைகளுக்குச் சென்றனர். இதனையடுத்து உன்னிகிருஷ்ணனும் பதவி உயர்வோடு சென்னைக்கு மாற்றலாகினார். இங்கு இவருடைய உளவுப்பணிகள் இரு வகையாக அமைந்தன. ஒன்று அகதிகள் நடவடிக்கைகளைக் கண்காணிப்பது. அடுத்தது தமிழ் குழுக்கள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பது.ஐந்து வரையிலான தமிழ் குழுக்கள் அப்போது இந்தியாவில் நிலைகொண்டிருந்தன. இவர்கள் ஒன்றிணையக் கூடாது என்பதில் இந்தியா உறுதியாக இருந்தது.

நீங்கள் இப்படிப் பிரிந்து நின்றால் உங்கள் நோக்கம் நிறைவேறாது என்று கூறிக்கொண்டே இந்திய அரசு பிளவுகளையும் முரண்பாடுகளையும் உருவாக்கி வளர்த்தது. போராளிகளை ஒரு கருவியாகப் பயன்படுத்தி ஜெயவர்த்தனா அரசை அடிபணியச்செய்வதே இந்திய அரசின் திட்டம். அதன்பின் குழுக்களைச் செயலிழக்கச் செய்வது திட்டத்தின் முக்கியபகுதி. நேபாள மன்னர் மகேந்திராவை நேபாளப்போராளிகள் மூலம் வசப்படுத்தியபின் நேரு தலைமையிலான அரசு அதே போராளிகளை நிர்மூலமாக்கியதை வரலாறு மறக்கவில்லை. போராளிகள் மத்தியில் ஒற்றுமையின்மையை வளர்ப்பதில் உன்னிகிருஷ்ணன் முனைப்பாகச் செயற்பட்டார். இவருடைய இந்த நாசவேலையை உணர்ந்த சில போராளி அமைப்புக்கள் இந்திய அரசிடம் அது பற்றி முறையிட்டன. அது செவிடன் காதில் ஊதிய சங்கொலியாக அமைந்ததில் வியப்பில்லை.

1985ல் உன்னிகிருஷ்ணனின் வாழ்க்கை ஒரு ஆபத்தான கட்டத்தை அடைந்தது. ஒரு அமெரிக்கப் பெண் உருவத்தில் அவருக்கு ஆபத்து வந்தது. தன்னை பான் அமெரிக்கன் விமான சேவையின் பணிப்பெண் என்று அடையாளம் காட்டிய அந்த மாது பம்பாய் நகரில் இருந்து சென்னையிலிருந்த உன்னிகிருஷ்ணனுக்கு ஒரு மறக்கமுடியாத அழைப்பை விடுத்தாள். "உங்களுடைய கொழும்பு நண்பர் உங்களைப்பற்றிச் சொன்னார். நான் தனிமையாக இங்கு இருக்கிறேன்.என்னிடம் வர முடியுமா?" உடனடியாக உன்னிகிருஷ்ணன் பம்பாய் சென்றார். 1985-86 காலப்பகுதியில் அந்தப் பெண்ணின் செலவில் அவர் பல தடவை சிங்கப்பூருக்கு உல்லாசப்பயணம் மேற்கொண்டார்.

'ருஷ்யாவிலிருந்து காதலுடன்' என்ற ஜேம்ஸ் பொண்ட் நாவலில் (FROM RUSSIA WITH LOVE BYIAN FLEMING) ஒரு காட்சி வருகின்றது. நாயகன் நாயகி ஆகியோர் விடுதிஅறையில் பாலியல் லீலையில் ஈடுபடுகின்றனர். மறைத்து வைக்கப்பட்ட படக்கருவி யாவற்றையும் பதிவு செய்கின்றது. இதேவகையில் உன்னிகிருஷ்ணனும் அந்த அமெரிக்கப்பெண்ணும் சிங்கப்பூரில் வைத்துப் படமாக்கப்பட்டனர். அந்தரங்கங்கள் அடங்கிய படச்சுருள்களை வைத்து அமெரிக்காவின் சி.ஐ.ஏ பல காரியங்களைச் சாதித்தது. பாவம் உன்னிகிருஷ்ணன். இந்தச் சிக்கலில் இருந்து அவரால் மீள முடியவில்லை.

படச்சுருள்கள் தயாராகியவுடன் ஒரு சி.ஐ.ஏ ஆண் அதிகாரி அவற்றின் நகல்களுடன் சென்னையில் குடியேறினார். உன்னிகிருஷ்ணனைத் தொடர்பு கொண்ட அந்த அதிகாரி தனது கோரிக்கைகளைத் படிப்படியாக விதித்தார். "மீளா அடிமை உமக்கே ஆளாய்" என்ற பாடல் வரி இத்தொடர்பில் நினைவுக்கு வருகின்றது. போராளிகளின் மொத்த எண்ணிக்கை. அவர்களுக்கு வழங்கப்பட்ட பயிற் சியின்தன்மை. பயிற்சி நிலையங்கள். பயிற்சி வழங்கிய இந்திய அதிகாரிகளின் பெயர்விபரங்களையும் புதுடில்லியில் பணியாற்றும் சிவில் அதிகாரிகளின் போராளிகளுடனான தொடர்பு விபரங்களையும் உன்னிகிருஷ்ணன் முதற்கட்டமாக அந்த அதிகாரிக்கு வழங்கினார். லாங்லி வேர்ஜீனியா (LANGLEY, VIRGINIA) தலைமைச் செயலகத்திற்கு இவை அனுப்பப்பட்டன. அமெரிக்கத் தலைநகரில் அதற்குரிய அதிகாரிகளின் ஒப்புதலுடன் இத் தகவல் தொகுதி ஜெயவர்த்தனா அரசுக்கு வழங்கப்பட்டது.

படத்தின் பிரதிகளை மனைவிக்கும் இந்தியா அரசுக்கும் அனுப்பப்போவதாக அந்த அமெரிக்கர் விடுத்த மிரட்டல் நல்ல பலனளித்தது. 1985 நடுப்பகுதியில் திம்பு பேச்சுவார்த்தை நடப்பதற்குத் திட்டமிடப்பட்டன. இதற்கான ஒழுங்குகள் பற்றிய தகவல்களை அமெரிக்கர்களுக்கு அவர்களூடாகச் சிறிலங்கா அரசும் முன்கூட்டியே அறிந்திருந்தன. இந்திய அரசின் நிலைப்பாடு. போராளிகளின் கோரிக்கைகள் பற்றிய செய்திகளை மிகவும் துல்லியமாகத் திரட்டி உன்னிகிருஷ்ணன் வழங்கினார். ராஜீவ் காந்தியின் நம்பிக்கைக்குரிய மத்திய அமைச்சர் சண்முகம் போராளித் தலைவர்களுடன் நடத்திய இரகசிய பேச்சுக்களின் விவரங்களும் அவரூடாக அமெரிக்க. சிறிலங்கா ஆகிய அரசுகளுக்குக் கிடைத்தன.

சிறிலங்காத் தூதுக்குழு சனாதிபதி ஜெயவர்த்தனாவின் சகோதரர் ஏச்.டபிள்யூ.ஜெயவர்த்தனா தலைமையில் திம்பு பேச்சுவார்த்தைகளுக்குச் சென்ற போது எல்லாவற்றையும் முன்கூட்டியே அறிந்த நிலையிலேயே சென்றனர். எதிரி பற்றிய விபரங்களை அறிந்திருப்பது ஒரு ஆனை பலத்திற்குச் சமம் என்பார்கள். ஜெயவர்த்தனா அரசிற்கு இந்த அனுகூலம் இருந்தது. உன்னிகிருஷ்ணனை விட இந்தியாவின் வெளியுறவுச் செயலர் றொமேஷ் பண்டாரியும் அவ்வப்போது புதுடில்லியில் சிறிலங்காத் தூதரகம் ஊடாகக் காத்திரமான தகவல்களை கொழும்பு அரசிற்கு வழங்கினார். பண்டாரி ஒரு ஆடம்பர வாழ்க்கைப்பிரியன். மதுப்பிரியன். உல்லாசி. தன்னை எல்லோரும் வணங்கவேண்டும் என்று எண்ணுவதோடு வரவுக்கு மிஞ்சிய செலவு செய்பவர். ராஜீவ்காந்தியின் நெருங்கிய சகாக்களில் ஒருவராகவும் அவர் இடம்பெற்றார். உங்களிடம் என்ன இரகசியம் இருக்கிறது என்று பிரெஞ்சுத் தூதுவர் கேட்டது உண்மைதான் என்பது மீண்டும் நீரூபிக்கப்பட்டுள்ளது.

> 1985 நடுப்பகுதியில் திம்பு பேச்சு வார்த்தை நடப்பதற்குத் திட்டமிடப்பட்டன. இதற்கான ஒழுங்குகள் பற்றிய தகவல்களை அமெரிக்கர்களுக்கு அவர்களூடாகச் சிறிலங்கா அரசும் முன்கூட்டியே அறிந்திருந்தன. இந்திய அரசின் நிலைப்பாடு, போராளிகளின் கோரிக்கைகள் பற்றிய செய்திகளை மிகவும் துல்லியமாகத் திரட்டி உன்னிகிருஷ்ணன் வழங்கினார். ராஜீவ் காந்தியின் நம்பிக்கைக்குரிய மத்திய அமைச்சர் சண்முகம் போராளித் தலைவர்களுடன் நடத்திய இரகசிய பேச்சுக்களின் விவரங்களும் அவரூடாக அமெரிக்க, சிறிலங்கா ஆகிய அரசுகளுக்குக்கிடைத்தன.

இந்தியா- சிறிலங்கா ஒப்பந்தம் 29 ஜீலை 1987ல் கைச்சாத்திடப்பட்டது. இதற்குச் சில நாட்களுக்கு முன் உன்னிகிருஷ்ணன் கைதுசெய்யப்பட்டார். அவர் கைது செய்யப்படுவதற்கு சில மணி நேரத்திற்குமுன்னரே. உன்னிகிருஷ்ணனை மிரட்டி வேலைவாங்கிய அமெரிக்கர் சென்னையைவிட்டு வெளியேறிவிட்டார். பல மாதங்களாக றோ தலைமை பீடத்திற்கு ஒரு பலத்த சந்தேகம். தமது அமைப்பிலே ஒரு உளவாளி இருக்கிறான் . அவன் ஊடாக இந்தியாவின் அந்தரங்கங்கள் சிறிலங்காவுக்குச் செல்கின்றன. என்ற வலுவான நம்பிக்கை அவர்கள் மத்தியில் காலம் கடந்து ஏற்பட்டது.

உன்னிகிருஷ்ணனின் கைதுக்குமுன் சென்னைப் பொலிஸ் தலைமைபீடத்தினர். றோ உறுப்பினர்கள் ஆகியோர்களின் தொலைபேசி உரையாடல்கள் புதுடில்லியில் இருந்து வந்து சேர்ந்த அதிகாரிகளால் ஒட்டுக்கேட்கப்பட்டன. இவர்களுடைய வீடுகள் இரகசியமாகக் கண்காணிக்கப்பட்டன. இறுதியில் இந்தியாவை சிறிலங்காவுக்குக் காட்டிக்கொடுத்தவர் உன்னிகிருஷ்ணன் என்பது உறுதியாகியது. தான் பல வருடங்களாக இதைச்செய்ததாக அவர் கடும் விசாரணையின் போது ஒத்துக்கொண்டார். தனது பாலியல் சீர்கேட்டையும் அவர் தயக்கமின்றி வெளிப்படுத்தினார். இந்தியச் சட்டத்தின் கீழ் ஒரு சிவில் அதிகாரியை திறந்த நீதிமன்ற விசாரணையின்றித் தண்டிக்கவோ பதவி நீக்கம் செய்யவோ முடியாது.

> இந்தியா- சிறிலங்கா ஒப்பந்தம் 29 ஜீலை 1987ல் கைச்சாத்திடப்பட்டது. இதற்குச் சில நாட்களுக்குமுன் உன்னிகிருஷ்ணன் கைது செய்யப்பட்டார். அவர் கைதுசெய்யப்படுவதற்கு சில மணி நேரத்திற்கு முன்னரே, உன்னிகிருஷ்ணனை மிரட்டி வேலைவாங்கிய அமெரிக்கர் சென்னையைவிட்டு வெளியேறிவிட்டார். பல மாதங்களாக றோ தலைமைபீடத்திற்கு ஒரு பலத்த சந்தேகம். தமது அமைப்பிலே ஒரு உளவாளி இருக்கிறான் , அவன் ஊடாக இந்தியாவின் அந்தரங்கங்கள் சிறிலங்காவுக்குச் செல்கின்றன என்ற வலுவான நம்பிக்கை அவர்கள் மத்தியில் காலம் கடந்து ஏற்பட்டது.

திறந்த நீதிமன்றத்தின் முன் உன்னிகிருஷ்ணனை நிறுத்த இந்திய அரசு அஞ்சியது. தேசிய பாதுகாப்புக் காரணங்களுக்காகப் பூட்டிய நீதிமன்ற அறையில் நீதி விசாரணை செய்யும் உரிமையை இந்திய அரசியல் சாசனத்தில் 311ம் சரத்து வழங்குகின்றது. இதன் பிரகாரம் உன்னிகிருஷ்ணன் பதவி நீக்கம்செய்யப்பட்டுத் தண்டிக்கப்பட்டார். றோ அமைப்பின் உறுப்பினரும். பத்திரிகையாளரும் நூலாசிரியருமான எம்.ஆர். நாராயன்சுவாமி தனது 'லங்காவின் புலிகள்' (TIGERS OF LANKA) என்ற நூலில் (1996)"சி.ஐ.ஏ முகவர் என்று குற்றம் சாட்டப்பட்ட உன்னிகிருஷ்ணன் என்ற றோ உயரதிகாரி நீதி விசாரணைக்குப்பின் சிறையில் அடைக்கப்பட்டார்." என்ற செய்தி மிகவும் சுருக்கமாக ஒற்றைவரியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்பரசு

துயரம் தலையை நரைக்கச் செய்யும் ஆனால் இதயத்தைப் புனிதமாக்கும். - ஜார்ஜ் பெய்லி


தீபாவளி வாழ்த்துக்கள்!

சாரங்கா நகைமாடம்

உறுதியும் உத்தரவாதமும் உள்ள 22கரட் தங்க வைர நகைகளைப் பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனமாக விளங்குகிறது.

இல:157/1கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T-P-021-2222480
Fax- 021-222 2480

SM Graphics

கிளைநிறுவனங்கள்

அருள் முருகன் நகையகம்,
96/1,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சாரங்கன் நகைமாடம் அன் சென்ரர்
45,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-8586)
TP-021 2226059



SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY

SONY
FD Trinitron
WEGA


21" KV-PG21

தீபாவளி வாழ்த்துக்கள்!

சமதிரை (Flat TV) தொலைக்காட்சி

சீடீல்சின் உத்தரவாத பத்திரத்தை வற்புறுத்தி வாங்கவும்

இப்பத்திரம் இல்லாமல் உங்கள் சொனியை வீட்டிற்குக் கொண்டு செல்ல வேண்டாம்

சீடீல்ஸ்

ஏக விநியோகஸ்தர் கிங் பரட்ஸ்
இல:20, பிரதான வீதி,
வவுனியா.

T.P 23123 (சி-8587)



கடந்த 12 வருடங்களாக அலுமினிய பிட்டிங் பொருள்கள்விற்பனையிலும், கைதேர்ந்த பொருத்துனர்களைக்கொண்டு அலுமினிய பிட்டிங் வேலைகளை தரமான முறையில் உத்தரவாதத்துடன் மக்களின் நன் மதிப்பைப்பெற்ற எங்கள் ஸ்தாபன உரிமையாளரும் ஊழியர்களும் தீபாவளி நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றார்கள்.



கிருஷ்ணா என்ரர்பிறைஸ்

இல:52, புதிய பஸ் நிலையக்கட்டடம்,
வவுனியா. (சி-8703)
T.P 024-2222673



இதயம் கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!

டீ.வி, டெக், குளிர்சாதனப்பெட்டி, றேடியோ,மின்விசிறிகள், கணனிகள் ஓடியோ வீடியோ CD பிளேயர் இவை அனைத்தையும் ஒரு வருட உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள



ஸ்கை எலக்ரோனிக் சிஸ்ரம்

இல: 01ஊ, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (சி-8588)
T.P 021-2225349






தீபாவளி நல்வாழ்த்துக்கள்

எம்மிடம்:-
உங்களின் புகைப்படச் சுருள்களை குறித்த மணி நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்
வீடியோ மற்றும் புகைப்படங்கள் டிஜிற்றல் முறையில்பிடித்திடவும்
புகைப்பட அல்பங்கள் செய்யவும்
அடையாள அட்டை பாஸ்போட் படங்களை ஒரு மணி நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

கிளை:
பொன் வீடியோ & ஸ்ருடியோ
இல:21B, பஸ் நிலையம், வவுனியா.

பொன் கவீன் கலர் லாப்

இல:11, முதலாம் குறுக்குத்தெரு, வவுனியா.
தொ.பேசி:-0712-356210 (சி-8591)



தீபாவளி வாழ்த்துக்கள்

யாழ் நகரில் இணையசேவை

Dialog GSM
kit
அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்கள்

INTERNET மூலம்
உங்கள் இல்லங்களிலிருந்தே
உறவுகளோடு உரையாடி
உணர்வுகளைபகிர்ந்துகொள்ளலாம்
நாடுங்கள்

மேலும்அமைதியான சூழல்
அன்பான உபசரிப்பு
தெளிவான ஒலி
குறைந்த கட்டணம்

SriMurugan
Computer Systems,
Communication Services
&Agency PostOffice
303.K.K.SRoad, jaffna.

T.Phone:021-2222670,2223588
Fax: 021-2223214.
Email:del-smskr@eureka.lk. (சி-8589)

BROWSING CENTE



TILKO Holidays

# Hotels and Guest Houses

தீபாவளி நல்வாழ்த்துக்கள்

**WELCOME TO Jaffna**

*Discover the charm of jaffna*
*We will make it easy*

- யாழ் நகரின் மையம் உட்பட நான்கு பிரதான இடங்களில் அமைந்துள்ள Guest Houses.
- நவீன வசதிகளுடன் புதிதாக கட்டப்பட்ட மிகவும் சுத்தமாகப் பராமரிக்கப்படும் அறைகள்.
- A/C and non A/C rooms with hot water வசதிகளுடன்
- Single, Double and twin rooms from Rs.1000 per night
- சுத்தமாகவும் சுவையாகவும் யாழ்ப்பாணச் சுவையுடன் பரிமாறப்படும் உணவு வகைகள்.
- வாகனச் சேவைகள்.

மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து அழையுங்கள்

கொழும்பு:- 074-614447
லண்டன்:- 0044-2084720029

JAFFNA -021-222 5969
mobile- 0777-575958
077-6002621
077-6146535





(சி-8590)

# துணிவோடு அன்பு செலுத்திய கந்தளாய் அன்னை

மக்கள் கண்டு மகிழவும் கலந்து மகிழவும் குளக்கோட்டன் கட்டிய கந்தளாய்க்குளம் துடிப்போடு இருக்கின்றது என்பது ஆற்று வாய்க்கால்களில் நீர் ஓடும் வேகத்தில் வெளிப்படும்.

ஆற்று வாய்க்கால் ஓரத்தில் செழித்த பயிர்களின் பச்சைநிறம் கொழிக்கும் வயல்கள். நீர் நிறைத்த வயலுக்குள் இளம்பயிர் பச்சை பரவியிருக்கும் அழகு மனதை நிறைத் திருக்கும்.

இவ்வயல்களில் தங்கள் வேலைகளைக் கவனிக்க மண் வெட்டியை தோளில் சுமந்தபடி இவ்வூர்மக்கள் வரப்புகளில் நடமாடிக் கொண்டிருக்கும் காட்சி அற்புதமானது.

இவ்வூர் வயல் நிலவளத்தில் பாரம்பரியமாக விவசாயம் செய்து உழைத்து சமுதாய உணர்வுடன் காலங்காலமாகக் கட்டுக்கோப்புடன் வாழ்ந்து வரும் பூர்வீகத் தமிழ்க்குடிகள்.

இம்மக்கள் தன்பாட்டில் அமைதியாக வாழ்ந்தார்கள். இவர்கள் யாருக்கும் எத்தீங்கும் இழைத்தவர்கள் அல்ல. ஆனாலும் அளவற்ற துன்ப துயரங்களை சுமக்க ஆரம்பித்தார்கள்.

இம்மக்களது தேசியத்தன்மை அல்லைக்கந்தளாய் சிங்களக் குடியேற்றத்தால் சிதைக்கப்பட்டது. தமிழ்த்தேசிய எழுச்சி எழவிடாது ஊடறுப்பதற்கு இக்குடியேற்றத் திட்டத்தை சிங்களம் நகர்த்தியது.

இன்று 40.000 சிங்களவர்கள் வாழ்கின்றார்கள். 98 வீதமாக வாழ்ந்த தமிழர்கள் 01 வீதமாக்கப்பட்ட நிலையில் சிறுபான்மை இனமாக வாழ்ந்து வருகின்றார்கள்.

1958.77.83 ஆம் ஆண்டு களில் நடந்து முடிந்த இனக்கலவரங் களால் அடுக்கடுக்கான பேரிடர்களை. உயிர் இழப்புக்களை இவ்வூர் மக்கள் சந்தித்தார்கள். இவ்வூரில் 58 வயதான பூபதி அம்மா அவரது கணவர் முரு குப்பிள்ளை தம் பிள்ளைகளுடன் வாழ்ந்தார்கள். சோழமன்னனால் நிர் மாணிக்கப்பட்ட புராதன சிவன் ஆலயம் அம்மா வீட்டிற்கு எதிர்ப்பக்கமாக அமைந்திருந்தது.

இளமை கடந்து நடுத்தர வயதையும் தாண்டிவிட்ட அம்மா அப்போதும் கூட மனவலிமையுடனும். துணிவுடனும் விளங்கினார்.

எப்போதும் நேர்த்தியான. தூய்மையான ஆடையுடன் நெற்றியில் திருநீற்று பூச்சுடன் சிரித்த முகத்துடன் அம்மாவைக் காணலாம். இனபக்தி. இறைபக்தி. குடும்பபக்தி அனைத்தும் அம்மாவிடம் ஆழமாக வெளிப்படும்.

அம்மாவின் மூத்தமகன் சண்முகராசா 1977 இனக்கலவரத்தின் போது பன்குள செங்கல் சூளையினுள் உயிருடனே போட்டு சிங்களவர்களால் எரித்துக் கொல்லப்பட்டார்.

அக்காலங்களில் அம்மா அழுகையும், கண்ணீருமாக இருந்தார்.

இச்சூழலில் தான். ஈழத் தமிழரின் உரிமைக்கான போர் எழுச்சிபெற ஆரம்பித்தது. காலப்போக் கில் ஆயுதவழியை நோக்கிய திசையில் இளைஞர்கள் ஈர்க்கப்பட்டார்கள்.

இவ்வூரின் மைந்தன் மூத்ததளபதி கணேஸ் ஆயுதப் போராட்டத்தில் முதல் தன்னை இணைத்துக்கொண்டார். சில கால இடைவெளிக்கு பிற்பாடு அம்மாவின் மகன் சிவகுரு. யோகன் இருவரும் இணைந்து செயலாற்றினார்கள். சிவகுரு சில ஆண்டுகளின் பின்பு விலகி திருமணம் செய்து குடும்பத்துடன் சொந்த ஊரில் வாழ்ந்துவருகின்றார். யோகன் சில வருடங்கள் சிங்களச் சிறையில் கைதியாக இருந்து விடுதலையாகிய பின்பு திருமணம் செய்து நோர்வேயில் வாழ்ந்து வருகின்றார்.

மகன் யோகன். இயக்கப்பணி கள் நிமிர்த்தம் அரியம். தயாளன் ஆகியோர் 83 பிற்கூறில் ஊர்வந்து செல்லும் சில சமயங்களில் தன் வீட்டி லேயே உணவு ஒழுங்குகளை செய்துகொடுப்பார்.

தன் மகனது இரகசிய இயக்கப்பணிகள் தொடர்பாக நன்கு அறிந்தவராகவே அம்மா அப்போது இருந்தார்.

மூத்த தளபதி கணேஸ் 84 இறுதிக்காலப்பகுதியில் அம்மா வீடு வந்து நின்று தன் பணிகளை இரகசியமாக மேற்கொண்டார். அக்காலங்களில் அனைத்தும் அம்மா வீடுதான்.

கணேஸ் சிறிய தாக்குதல் அணியொன்றை 85.86 காலப்பகுதிகளில் காந்தியின் தலைமையில் ஒழுங்கு படுத்தி கந்தளாய் பிரதேசத்திற்கு அனுப்பினார். சுதாகர். சங்கர். ராமு. சதா. கபிலப்பா ஆகிய போராளிகள் இத்தாக்குதல் அணியில் இருந்தார்கள்.

இவ் அணியினர் இவவூர்



வந்துசேர நடுச்சாமம் ஆகிவிடும்.மிக நீண்டதூர நடைப்பயணம். வயல்வெளி சேற்றுப்பாதைகளால். கரடுமுரடான பாதைகளில் நடந்து இருட்டில் வரப்புகளில் கால்தட்டி விழுந்து கால்கள் மறுக்க உடல் களைப்புற்று. சோர் வடைந்த நிலையில் பசியுடன் வந்துசேர்வார்கள். மழைக்காலங்களில் நனைந்து பற்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பால் ஒன்றோடு ஒன்று அடிபட உடல் நடுக்கத்துடன் ஊரில் நுழை வார்கள்.

நடுச்சாமத்தில் போராளிகளின் அசைவுகள் அம்மாவை உடன் விழித் தெழவைக்கும்.

அம்மாவின் அன்பு போராளி களின் அனைத்துச்சுமைகளுக்கும் ஒத்தடம் கொடுக்கத்தக்கவகையில் அம்மாவின் விருந்தோம்பல் பண்பில் வெளிப்படும். அவ்வேளைகளில் கணவனது ஒத்துழைப்பு அம்மாவிற்கு பக்கத்துணை.

தாக்குதல் மேற்கொள்வதற்கு இடம் நகர அடுத்தகட்ட ஒழுங்குகள் செய்யும் சில நாட்கள் வரை போராளி களுக்கு பாதுகாப்பளிக்கின்ற மறைப் பிடமாக அம்மாவின் வீடு திகழும்.

இக்காலப்பகுதியில் நித்திரை மறந்த நாட்கள். உயிரைப்பணயம் வைத்து அம்மா உழைத்த நாட்கள் எண்ணிக்கணக்கிடமுடியாது.

இது ஒரு புறம் இருக்க இன்னொருபுறம் 'அசன்' தாக்குதல் அணியின் நகர்விற்கான வெளிக்கள வேலைகளை ஒழுங்குபடுத்துவார். அசன் முஸ்லிம் மகன். மத அரசியலை வெறுப்பவன். தமிழன் என்கிற சிந்தனையில் மூழ்கியவாறு விடுதலைப் போரில் தன்னை முழுமையாக இணைத்துக்கொண்டவன். அவ்வூர் முஸ்லிம் மக்களது பேராதரவு அசனுக்குப் பக்கபலமாக இருந்தது.

அசனுக்கும் அம்மாவிற்கும் ஆழமான உறவு இருந்தது. அசனுக்கு குடும்பச்சுமையும் பொறுப்பும் ஒரு பக்கம் இருப்பினும் பிடிவாதமான இயக்கப்பற்று அவனது கடின உழைப்பில் புலப்படும்.

1986 இறுதிக்காலப்பகுதியில் மூத்ததளபதி கணேஸ் வீரச்சாவடைந்த செய்தி அம்மாவினது மனதை கவலைக்குள்ளாக்கியது. "மாபெரும் வீரனைப்பெற்ற வீரநிலம்" என்ற பெருமை அம்மாவை அமைதிப்படுத் தியது.

அந்தப்பேரிழப்பிற்கு பின்பு காந்தியின் துணையுடன் கபிலன். சரோன் ஆகிய போராளிகள் வழமையான கடினங்களை சந்தித்த படியே அம்மாவிடம் வந்தார்கள்.

அம்மா கணேசின் இழப்பின் துயரங்களை இப்போராளிகளிடம் பகிர்ந்துகொண்டார். அதாவது கணேஸ் இல்லாமல் போனது தம் ஊர்த்தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு இல்லாமல்போய்விட்டது. அத்தோடு நின்றுவிடாது இங்கு சிக்கியிருக்கும் தமிழர்களின் நிலமும் உயிரும் உரிமைகளும் பாதுகாக்கும் பொறுப்பு உங்களுடையதுதான் என்றார் அம்மா.

அம்மாவின் வார்த்தைகள் அமைதியானது. அவைகள் தாழ்ந்த குரலில் சொல்லப்படுபவைகளாகவே இருக்கும். ஆனால் கண்டிப்பான அர்த்தத்தில் அவ்வார்த்தைகள் வெளிப் பட்டன.

ஒரு சில வாரங்களில் மூத்ததளபதி புலேந்தி அம்மான் ஆளுகைக்குட்பட்ட குணம் தலைமை யிலான தாக்குதல் அணிப்போராளி களான மது. பரமதேவா. சைமன். பண்டா (ரமணன்)துமிலன்.அன்சார். ஆசீர். திலகன் ஆகியோர் இவ்வூர் வந்து சேர்ந்தார்கள்.

காட்டிற்குப் போவதற்கான ஒழுங்குகள் அசனால் செய்யப்படும். சில நாட்கள் அன்சார். ஆசீர். துமிலன். திலகன் ஆகியோர் கபிலன் அரவணைப் பில் அம்மா வீட்டில் தங்கியிருந்தனர். ஏனைய போராகளிள் பிறிதொரு முஸ்லிம் பொதுமகனது வீட்டில் அசனால் தங்கவிடப்பட்டனர்.

எந்தவொரு போராளியிட மும் இன்முகத்துடன் பழகுகின்ற சுபாவம் உடையவராகவும். அன்புதவி அளிக்கும் உள்ளத்தால் அரவணைக் கும் தாயாகவும் அம்மா இருந்த தனால் இப்போராளிகளுக்கு அம்மா மீது ஆழமான பற்றுதலை ஏற்படுத்தியது.

இத்தகைய நிலையில் ஒரு நாள் பகல் வேளைப்பொழுதில் சிங்களப்படையினர் வாகனத்தில் அம்மாவின் வீட்டுப்படலையடியில் வந்து நின்றார்கள்.

இக்காட்சி அம்மாவை அச்சப்படுத்தியது. இருப்பினும் அதில் இருந்து தன்னை விடுவித்தவராக வீட்டினுள் மறைந்திருந்த போராளி களைப்பார்த்து "இராணுவம் வந்து விட்டது இனி ஒன்றும் செய்யமுடி யாது. நீங்கள் அவர்களுக்கு செய்வ தனைச் செய்யுங்கள்" என்று கூறி எங்களைப்பற்றி யோசிக்கவேண்டாம் என்றவாறு சமையல் அறையை நோக்கி நகர்ந்துசென்றார்.

போராளிகள் ஒரு சில வினாடிக்குள் ஓர் நிலைக்கு வந்து ஆபத்தை எதிர்கொள்ள வேண்டுமென்ற நெஞ்சழுத்தம் மிக்க நிலைக்கு போராளிகளை இட்டுச்சென்றது.

அந்த ஆபத்தான சூழல் சில நிமிடங்களுக்குள் தலைகீழாக மாறியது.

அதாவது வந்த சிங்களப் படையினர் வேறுதேவைக்காக வந்த செய்தி அனைவருக்கும் மன ஆறு தலைத் தந்து பதற்ற நிலை நீங்கியது.

இச்சம்பவத்தினை மாவீரனான அன்சார் நகைச்சுவையாக "நாங்கள் பின்வாங்கிச்செல்ல தீர்மானித் தாலும் அம்மா விடமாட்டார்போல் தெரிகிறது" என்று கூறி அனைவரையும் சிரிப்பில் ஆழ்த்தினார்.

சில நாட்கள் கழிய தாக்குதல் அணியானது சாந்தன் அண்ணன் உதவியுடன் காட்டை நோக்கி நகர்ந்தது.

இப்பயணம் குள உடைப் பிற்குப் பின் இருந்ததால் குளத்தரை யூடாகவே நடைபெற்றது. அக்காலத்தில் இப்போராளிகளது பயணம் ஓர் வரலாற்றுப்பயணம். அது நீண்ட தூரதுணிவுமிக்க பயணம். ஆபத்தும் கடினமும் நிறைந்தது.

சுகமாகப்போய்ச்சேர்ந்த செய்தியுடன் அசன் அம்மாவிடம் சென்றார். போராளிகளுக்கான விநியோகக் கடமையில் அசன் சலியாத உழைப்புடன் ஈடுபட்டு வருவது அம்மாவிற்குத் தெரியும். ஆதலால் அசனின் பாதுகாப்பு மீது நிரந்தர அக்கறை அம்மாவிற்கு ஏற்பட அசனைக்காணும் போதெல்லாம் விழிப்புணர்வுடன் செயலாற்றவேண்டிய அறிவுரைகளை அம்மா அசனுக்கு வழங்கத்தவறவில்லை.

காலநகர்வில் அசன் எதிரி யால் தீவிரமாக தேடுதலுக்குள்ளாக் கப்பட்டார். இந்நெருக்கடிமிகுந்த காலகட்டத்தில் அம்மாவின் உதவியும் ஒத்துழைப்பும் அசனுக்கு இருந்தது.

ஒரு சில மாதங்களில் அசன் எதிரியால் சுடப்பட்ட செய்தி அம்மாவினதும் போராளிகளினதும் மனதை வெகுவாகப்பாதித்தது. சோகநாட்களாக சிலநாட்கள் கழிந்தன.

இச்சம்பவத்திற்கு பின்பு ஊர் நெருக்கடிக்குள்ளானதால் அசனுக்கு பக்க உதவியாக செயலாற்றிய தௌபிக் காட்டு முகாம் வந்துசேர்ந்தார். உணவுப்பொருட்கள் விநியோகம் துண்டிக்கப்பட்ட நிலையால் தாக்குதல் அணிப்போராளிகளான குணம். மது. வசந். பரமதேவா. கஸ்ரோ. கங்கா. திலகன். றோய். ஆசீர். துமிலன். அலோசியஸ் ஆகியோர் சாந்தண்ணன். வெள்ளையண்ணன் வழித் துணையுடன் காட்டுப்பாதைகள் ஊடாக பிரதான சாவாறு முகாம் வந்து சேர்ந்தார்கள்.

கந்தளாய் பிரதேசங்களில் போராளிகள் வேவுக்காக. தாக்கு தலுக்காக பயணங்களை பல தடவைகள் மேற்கொள்ளும் போதெல்லாம் அம்மாவின் துணிவான அன்பு பக்கபலமாகும்.

இப்பிரதேசத்தில் செயலாற்றிய இரு தாக்குதல் அணிகளும் மேற்கொண்ட தாக்குதல்கள் சிங்கள தேசத்திற்கு அழுத்தங்களைக் கொடுத் தது. அத்துணிகரத்தாக்குதல்கள் வரலாற்றுப் பதிவுகளில் இருந்து மறையாது.

இவ்வரலாற்றுக் காலகட்டங் களில் அம்மா குடும்பம் எந்த நேரத்திலும் உயிர் ஆபத்துக்களை எதிர்கொள்ளும் வாய்ப்புகள் அதிகமா கவே அப்போது இருந்தது. சிங்களக் கிராமங்கள். சிங்களப்படை முகாம்கள் சூழ எப்போதும் இலகுவாக முற்றுகை யிடப்படக்கூடிய பூகோள அமைப்பு. மூவின மக்களும் கலந்து வாழ்வதால் இரகசியங்களைப் பேணுவதில் கடினமான சூழல்.

போராளிகள் அம்மாவின் வீட்டை விட்டு வெளியேறி தம் முகாமிற்கு பாதுகாப்பாக சென்ற பின்பும் கூட அம்மாவை விட்டு உயிர் அபாயம் நீங்கிவிடவில்லை.

அதாவது தங்கிச்சென்ற தகவல் கசிவு ஏற்படும் பட்சத்தில் குடும்பத்தில் அனைவரும் எதிரியால் கொல்லப்படுவார்கள். அத்தகைய மிக இறுக்கமான காலம்.

அம்மா வாழ்வோடு போராடி யும் மரணத்துடன் உறவாடியும் தான் போராளிகளுக்கு உதவினார். போராளி களுக்கான பணி செய்வதை விட நெருக்கமான அன்பு வேறில்லை என்பதை தன் செயற்பாடுகளில் அம்மா வெளிப்படுத்தினார்.

விடுதலைப்போர் நகர்ந்து படிப்படியாக வளர்ந்து பேரெழுச்சிமிக்க காலகட்டத்திற்குள் நுழைந்தது.

இவ்வரலாற்று நகர்வில் போராளிகள். மக்கள் உயிர்களை விலைகளாக கொடுத்தே ஒவ்வொரு நகர்வும் வெற்றியை நோக்கி நகர்ந்தது.

இப்போரில் அம்மா வளர்த்த பேரன் ஜேசு வீரச்சாவடைந்தார். இறுதி நிகழ்விற்கு வந்து கலந்துகொள்ள அம்மா வாய்ப்பை இழந்தாலும் மாவீரர்துயிலும் இல்ல கல்லறைக்கு வீரவணக்கம் செலுத்தினார்.

அம்மாவின் கன்னங்களில் காலைப்புல்லின் நுனிமீது கருக் கொண்டிருக்கும் பனித்துளிகளைப் போல் உருண்டு வழிந்து கொண்டிருந்தது கண்ணீர்.

முன்னெப்பொழுதையும் விட இப்போது வலிமைமிக்க ஓர் இனமாக நிமிர்ந்து நிற்கின்ற காட்சி அம்மாவிற்கு புத்தூக்கத்தை அளித்தது.

இந்தப் பெரும் மாற்றம் தேசியத்தலைவரின் சிறந்த வழிகாட்ட லால் தமிழ் மக்களுக்கு கிடைத்த பாதுகாப்புப்பலம் என்று அம்மா தன் வார்த்தைகளால் வெளிப்படுத்தி. தான் சாவடையும் முன்பு தேசியத்தலை வரைக் காண ஒழுங்கு செய்துதருமாறு கண்களில் நீர் வழிய போராளிகளான கபிலன். சபாவிடம் வேண்டினார். இக்காட்சியால் வள்ளிபுன சர்மா வீடு

**இ. கபிலன்**

உணர்ச்சிமயமானது.

76 வயதான முதுமையில் நோய் அவரின் ஆரோக்கிய வாழ்விற்கு சவாலாக இருந்தபோதும் அவர் சோர்வூட்டும் மனநிலையில் இல்லாது எப்போதும் உற்சாகத்துடனே வாழ்ந்தார்.

கந்தளாய் வாழ் தமிழ் மக்கள் தமது பூர்வீக தாய் மண்ணை விட்டுக்கொடுக்கக்கூடாது என்ப தற்காக சிங்கள இனவாத மரண அச்சுறுத்தல் களுக்கு மத்தியிலும் துணிவுடன் நிமிர்ந்து வாழ்ந்து வருகின்றார்கள். இவ்வூர் மக்களுடன் அம்மாவின் இறு திக்கால வாழ்வும் உள்ளது.

மனிதன் பிறப்பால் உயர்ந் தவன். தாழ்ந்தவன் என வேறுபடுத்திக் கொள்வது தவறானது.

மாறாக ஒரு மனிதனின் செயலே உயர்வு தாழ்வுகளை தீர்மானிக்கிறது.

அந்த வகையில் அம்மாவின் செயல்கள் விடுதலை வரலாற்றில் உயர்ந்தது. அவரது பெயர் என்றும் மறையாது.

அம்மாவின் அன்பு போராளிகளின் அனைத்துச் சுமைகளுக்கும் ஒத்தடம் கொடுக் கத்தக்க வகையில் அம்மாவின் விருந்தோம்பல் பண்பில் வெளிப்படும். அவ்வேளைகளில் கணவனது ஒத்துழைப்பு அம்மாவிற்கு பக்கத்துணை.

தாக்குதல் மேற்கொள்வதற்கு இடம் நகர அடுத்தகட்ட ஒழுங்குகள் செய்யும் சில நாட்கள் வரை போராளிகளுக்கு பாதுகாப் பளிக்கின்ற மறைப்பிடமாக அம்மாவின் வீடு திகழும்.

எமது வாடிக்கையாளர் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

பாடசாலை அதிபர்களே! மாணவ மணிகளே!

வந்து விட்டது

"திவான்" வியாபாரக் குறியீடு கொண்ட கணக்குக் குற்றிகள்.
இன்றே விஜயம் செய்யுங்கள்.

பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களுக்கான பாடப்புத்தகங்கள், உபகரணங்கள், பேப்பர் வகைகள், பெயின்ற் வகைகள் மற்றும் தரமான உள்ளீட்டுப் பொருட்களுக்கானமூலதனப் பொருள்கள், அழிபொருள்கள், வாத்தியக் கருவிகள், விளையாட்டுப்பொருள்கள், அலுவலக அலுமாரி, அலுவலக மேசைகள், பயில் அலுமாரி, கம்பியூட்டர் மேசைகள், புத்தக றாக்கைகள், ஆய்வு கூட இரசாயனப்பொருள்கள், ஆய்வுகூட உபகரணங்கள்,
O.H.P புறஜெக்ரர்
மற்றும்
அறிவுஅமுது, அந்திவானம் பதிப்பகங்களின் பதிப்புக்கள், வெளியீடுகள்
யாவும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

குறிப்பு:
எம்மிடம் டீன் குற்றிகளுக்கு பதிவு செய்தவர்கள் உடன் வந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

☎021-222 5542

சி-8555

212, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.



இதயம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்

வீ.எம்.கே ஜுவல்லறி

22கரட் தங்க நவீன அழகிய டிசைன்களில் உறுதியுடனும் உத்தரவாதத்துடனும் பெற்றுக்கொள்வதற்கு உகந்த ஸ்தாபனம்
சிறுவர் முதல் பெரியோர் வரை சிந்தை கவரும் வடிவங்களில் சிறப்பாக காலத்தால் அழியாத சிறந்த தங்க நகைகளுக்கு நாடுங்கள்

கண்டி வீதி, சாவகச்சேரி.
தொ.பே-0602-212989, 777-723021

[சி-8558]

SM Graphics



அன்புகலந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

நயம்! நாணயம்!! உத்தரவாதம்!!!

சிறி கருமாரி நகையகம்

அசல் 22 கரட் தங்கத்தில் காலத்திற்கும் கருத்திற்கும் உகந்த நவீன டிசைன்களில் தங்க நகைகளை பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்.

சிறி கருமாரி நகையகம்

இல:177 - D, கஸ்தூரியார் வீதி,
(வின்சர் தியேட்டர் முன்பாக)
யாழ்ப்பாணம்.

T.P: 021-2225385

[சி-8559]

தீபாவளி வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

இணைப்புக்களுடனான மேசைத்தொலைபேசி
விசேட கழிவில் விற்பனைக்கு

பவர் செலூலர்

24 மணிநேரத்தில் பக்கேஜ் இணைப்புக்களுடனான மேசைத்தொலைபேசி எப்பிரதேசத்திற்கும் பொருத்தித்தரப்படும்.

வாகனசேவை
0712-387122

IDD இணைப்புக்கள்
சிறிலங்கா ரெலிகொம்முடன் இணைக்கப்பட்டுள்ளது.

உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்

உத்தரவாதம் உண்டு



HAND PHONE UNLOCK செய்து தரப்படும்.

எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப்பிரதேசத்திற்கும் இயங்கக் கூடிய சேவை என அறியத்தருகின்றோம். அத்துடன் அன்ரனா மூலம் இயங்குகின்றது. மேலதிக விபரங்களுக்கு

HAND PHONE பழுது பார்க்கப்படும்

பவர் செலூலர்

T.P 021-2227070
0712-399220
0712-384624
0777-242416

மாபெரும் தீபாவளி சிறப்புத்தள்ளுபடி

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (ராஜா தியேட்டர் அருகில்)

[சி-8556]

அங்கீகாரம் பெற்ற முகவர்கள்

| | | |
|---|---|---|
| விஜேய் வீடியோ சென்ரர் புங்குடுதீவு 0712-399113 | இந்திரா கொமினிக்கேசன் நயினாதீவு, அனலைதீவு. 0712-370471 0602-213207 0777-111448 | பிரசன்னா கனனி நிலையம் கே.கே.எஸ் வீதி, சுன்னாகம் 0712-507828 |
| திருப்பதி கொமினிக்கேசன் மானிப்பாய் 0602-213352 0777-722914 021-2225940 021-2225732 | சண் கொமினிக்கேசன் திக்கரை காரைநகர் 0712-299264 0602-213190 | தீபா கொமினிக்கேசன் பிள்ளையார் கோவில் வீதி நெடியகாடு வல்வெட்டித்துறை |
| பவர் கொமினிக்கேசன் நெடுந்தீவு. 0712-348922 0712-370491 | சொலக்ஸ் ஒப்ரிக்கல் 100, கண்டிவீதி சாவகச்சேரி. 0777-855328 | k. மதியழகன் வல்லை வீதி, சங்கானை 0712-358019 , 0777-243203 |
| V. அரவிந்தன் சுழிபுரம் மேற்கு சுழிபுரம். 0777-550949 | சுதன் கொமினிக்கேசன் மிருசுவில் 0777-584876 | சோதி கொமினிக்கேசன் வலுப்போடை களபூமி காரைநகர் 0712-370480 |
| | R. தயாகரன் வட்டுக்கோட்டை 0777-244524 | சிவராசா லக்கி எலற்றோனிக்ஸ் மானிப்பாய் |



இதயம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

அம்பிகா ஜுவலர்ஸ்

உங்கள் விருப்பத்திற்கேற்ற தங்க நகைகளுக்கு மன்னாரில் நம்பிக்கையான ஸ்தாபனம்

TP - 023 - 2232350 பெரியகடை, மன்னார்

[சி-8560]

SM Graphics

இராசா டீசல் என்ஜினியர்ஸ்

தீபாவளி வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

எல்லாவகை டீசல் பம்புகளும், இன்ஜெக்ரர்களும்திருத்துவதும், சேவிஸ் செய்வதும் உதிரிப்பாகங்களையும் விநியோகம் செய்பவர்கள்.

இராசா டீசல் என்ஜினியர்ஸ்



180, பருத்தித்துறை வீதி,
குருநாதர் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

T.P 021-2223239

[சி-8557]



தீபாவளி நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றது

மகாநதி புடைவையகம்

புதிய டிசைன்களிலான நவீன பாணியிலமைந்த ஆடைத் தெரிவுகளுக்கு நாடுங்கள்.

இல:16, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

இல:04, நவீன சந்தை,
சாவகச்சேரி.

சாறி, பிளவுஸ் பீஸ்வகைகளுக்கான பிரத்தியேகக் காட்சியறை.

இல:16, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்(மேல்மாடி)

[சி-8561]

SM Graphics

# 7ம் ஆண்டு வீரவணக்கம்



லெப். கேணல் நாதன்
கந்தையா பேரின்பநாதன்
(அரியாலை, யாழ்ப்பாணம்.)

கப்டன் கஜன்
கந்தையா கஜேந்திரன்
(கோண்டாவில், யாழ்ப்பாணம்.)

உயிர் வற்றிய மனிதம்
விழிகளின் ஜீவன் தேக்கி
மௌனப் புலம்பலுடன்
வைகறை வரம் தேடி
தவம் செய்து கிடக்கும்
மானிடத் தேடலில்
இந்த
மரணங்கள் மறுபடியும் உயிர்க்கும்.

கப்டன் கஜன் (1991)

வீரச்சாவு
26.10.1996

அன்புத்தம்பிகள்,
குடும்பத்தினர்.

SM Graphics

(சி-8705)



அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்

**நியூ நகுலா ஜுவல்லறி**
இல:-74,கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
T.P-021-2225511

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
இல:-171,கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
T.P-021-2223433

**நகுலா நகைமாடம்**
இல:-74,கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
T.P-021-2225511

யாழ் நகரில் மின்னிடும் தங்கநகைகள் விற்பனையில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்.

(சி-8577)

**விநாயகா டிரேட் சென்ரர்**

தீபத்திருநாளில் எங்கள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

எங்களிடம் கலர், பிறவுன் ,notural அலுமினிய பார் வகை,ஒட்டுப்பலகை, MDF போட், P.V.C வெள்ளை போட், ஜிப்சம் சீலிங்சீட், போமிக்கா சீட், தரைவிரிப்புகள், ரெக்சின் வகை,வெல்பெட்துணி குசன் செற்றிகள்,அனைத்து வகையான கைபிடிகள், பூட்டுகள், யன்னல்கண்ணாடி, மேசை கண்ணாடி,மெகிபோட்,நோட்டீஸ் போட்,கூலின் ஸ்ரிக்கர் வகைகள் சகல விதமான அலுமினிய பிட்டிங் வேலைகள் என்பவற்றிக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம். METRDF வேலைகளும் ODER மூலம் செய்து தரப்படும்.

102,முதல் மாடி,
புதிய பஸ்நிலைய கட்டடம்,
வவுனியா.

(சி-8704)

**ஹோட்டல் சுவர்க்கா**

தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

விசேடவைபவங்களுக்கு உணவு வகைகளை பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
0242221291

உங்களுக்காக
காலை11.00மணிமுதல்
மாலை 4.00வரை
மாலை 6.00மணி முதல் 12.00வரை...

**ஹோட்டல் சுவர்க்கா**

குளிரூட்டப்பட்ட குளிரூட்டப்படாத அறைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்:- 024 2221291

(சி-8578)

தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

**ஏஞ்சல் மூக்குக் கண்ணாடி நிலையம்**

**Angel Optician**

வன்னி மக்களின் நலன் கருதி மிகக் குறைந்த விலையில் தரமான பிரேம்களைக் கொண்ட மூக்குக் கண்ணாடிகளை உங்கள் அருகாமையில் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள நம்பிக்கையான ஸ்தாபனம்.

**ஏஞ்சல் மூக்குக் கண்ணாடி நிலையம்**

இலவசக்கண் பரிசோதனை

உங்கள் விழிகளின் பாதுகாவலர்

இல:-1/1ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
T.P-0232232221

பிரேம் , லென்ஸ், சன்கிளாஸஸ்

Angel Optician
no-1/1,Hospital Road,
mannar.



AOP

(சி - 8579)

இதயம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்

- வெளிநாட்டு உணவுப்பொருட்கள்
- பழரசங்கள்
- ஜாம் வகைகள்
- குழந்தைகளுக்கான உணவுப்பொருட்கள்

ஆகியவற்றைப்பெற்றுக்கொள்ள வவுனியா நகரில் நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

**வெங்கடேஸ்வரா**

இல:-15, குளோப்கட்டடம்
பஸார் வீதி, வவுனியா.

(சி - 8580)



MORE FRUITS, MORE GLASSES.

"வடமாகாணத்தின் மாபெரும் கணனிக் காட்சியறை"

**நொதேன் ரெக்னோலஜி பிறைவேட் லிமிட்டட்**

**NORTHERN TECHNOLOGY(PVT)LTD**



- சகலவகையான கணனிகளையும் நீங்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
- இலங்கையில் எப்பிரதேசத்திலும் இல்லாதவாறு இரண்டு வருட உத்தரவாதம்
- இலகு தவணைக்கட்டன முறை

யாழ்ப்பாணத்தில்:-
இல:20,கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-021-222 5653

வவுனியாவில்:-
இல:-52,2ம் குறுக்குத்தெரு,
வவுனியா.
T.P:-024-2221649

மன்னாரில்:-
இல:-31A,ஆஸ்பத்திரி வீதி,
மன்னார்.

தீபாவளி நல்வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகட்டும்!

(சி-8539)

"கணனி உலகின் காட்சிப்பெட்டகம்"

நண்பர்கள், அன்பர்கள்,
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
தீபாவளி நல்வாழ்த்துக்கள்.

**நியூ றப்பர் ஸ்டேம்ப்**

கணனிமூலம் கட்டிங்கில் மூன்றுமொழிகளிலும்

நைலோன் கொம்பியூட்டர் சீல்,
பாடசாலைச்சின்னம்
(பிளாஸ்டிக்,வெள்ளி,பித்தளை)
தரத்தில் பாடசாலை டைகள்,
பிளாஸ்டிக் போட்கள், எம், போசிசில்
சிறப்புக்கோர்வை பதக்கங்கள்
மூன்றுதரத்திலும்பெற்றுக்கொள்ளலாம்.

இல:-106B, பஸ்நிலையத்தொகுதி,
முதலாம்மாடி, வவுனியா.
T.p:- 024-2220302
FAX:- 024- 2222644

(சி - 8702)

# தொடர்கதை

## பகுதி — 02

# தாமரைச்செல்வியின் பச்சைவயல் கனவு

## அத்தியாயம்-08

எழுபத்தேழாம் ஆண்டிற்குப்பிறகு கிளிநொச்சியில் இன்னமும் சனங்களின் குடியிருப்பு அதிகமாகியது. தென்பகுதியிலிருந்து அடிபட்டுநொந்துபோய் ஓடி வந்தவர்களில் அநேகம்பேர் கிளிநொச்சியில் வந்து தங்கிக்கொண்டார்கள். எங்காவது காணிதேடி குடிசைபோட்டு வயல்வேலைகளுக்குப்போய் தங்கள் சீவியத்தை நடத்தத் தொடங்கினார்கள். வருடத்தில் இரண்டு தடவை வயல் விதைப்பு நடப்பதால் வேலைகளும் அதிகமாய் இருந்தது. முன்பைவிட இப்போது நிறையப்பேர் வயல்செய்கிறார்கள். அரசாங்கம் கொடுக்கும் காணிகள் தவிர தாமாகவே காடுகளை வெட்டி தமது பெயரில் பதிந்துகொண்டு வயல்செய்யத்தொடங்கியிருந்தார்கள். சிறுபோக காலங்களில் இரணைமடு குளத்து நீர் திட்டமிட்டு பகிர்ந்துகொடுக்கப்பட்டது.

நெல் விதைப்பிலிருந்து அறுவடை செய்து நெல் வீடுவந்துசேரும்வரை வயலில் எத்தனையோ வேலைகள். உழைப்பதற்கு வாய்ப்பு இருப்பதால் பலர் கிளிநொச்சியைத்தேடிவந்து குடியிருக்கத்தொடங்கினார்கள்.

மணலாற்றுப்பக்கமாக உள்ள எல்லைக்கிராமங்களிலிருந்து துரத்தப்பட்ட தமிழ் மக்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் பரவலாக வந்து பல காணிகளில் குடியிருந்தார்கள்.



அநுராதபுரத்திலிருந்து அடிபட்டு ஓடிவந்த ராமசாமியின் குடும்பம் சிவத்தின் வயல் காணியில் குடிசை போட்டு இருந்தது. மரியக்கண்டு பண்டாகமத்து வீட்டில் இருந்து வயலைக் கவனித்துக்கொண்டிருந்தான். பண்டாகமத்துக்காணியில் ஏழெட்டுக் குடும்பங்கள் குடிசை போட்டு இருந்தன. வேலாயுதத்தின் எல்லா வயல் வேலைகளையும் அவர்களே செய்தார்கள்.

மரியக்கண்டு இன்னமும் தன் உழைப்பைச் சேர்த்து தன் குடும்பத்துக்கே அனுப்பிக் கொண்டிருந்தான். அதை நினைக்க கவலையாக இருக்கும். இங்கே வந்து எத்தனை வருடமாகிறது. ஒரு தடவை கூட தன் வீட்டிடுக்குப் போகவில்லை.மூன்று வயதுக் குழந்தையாகவிட்டு வந்த மகன் மீசை வளர்ந்த இளைஞனாக வந்து எதிரே நின்றபோது மரியக்கண்டுவுக்கு எப்படி இருந்திருக்கும்.

அப்படி இரண்டு மூன்று தடவை மகன் வந்து பார்த்துவிட்டுப்போயிருக்கிறான். உழைத்து உழைத்து உரமேறிய உடலில் இப்போது சிறிது தளர்வு. தலையில் நரை. தன் இளம் பருவத்தையே இந்த மண்ணில் கரைத்துவிட்டிருந்த மரியக்கண்டுவ்க்கு இப்போது ஊருக்குப்போகும் ஆசை மெதுவாய் எட்டிப்பார்த்தது. "எம் பொஞ்சாதி சொகமில்லாமல் இருக்காம், ஒரு தடவைபோய் அதும் முகத்தைப்பார்த்திடணும், பாவம் என்ன சந்தோசத்தைக் கண்டிச்சு.."

மரியக்கண்டு கொழும்பு சென்று கடவுச்சீட்டுப்பெற்று விமானமூலம் தமிழ் நாடு போவது சாத்தியமற்றது என்பது தெரிந்ததனால் ஆசைப்படுவதோடு அந்த விடயம் நின்று போனது. அதுதான் அதிக கவலையைத்தந்தது.

இந்த மண்ணின் அங்கீகரிக்கப்படாத குடிமகன்,

இந்த விடயத்தில் தன்னாலும் எதுவும் செய்யமுடியாது என்பது சிவத்துக்குத்தெரியும். என்றாவது ஒரு நாள் மரியக்கண்டு தன் கடைசிக் காலத்திலாவது மனைவி பிள்ளைகளுடன் போய் சேர்ந்துவிடவேண்டும் என்று அடிக்கடி நினைத்துக்கொள்வார்.

வயலில் அரிவு வெட்டு, சூடு வைப்பு, சூடடி என்று வரிசையாய்வேலைகள் தொடங்கி விட்டன. அத்தோடு முருகன் கோவில் வேலைகளும் இருந்தன. இப்போது முருகன் கோவில் கட்டடமாக கட்டப்பட்டுக்கொண்டிருந்தது. ஊர்ச்சனம் எல்லாம் இணைந்து கோவில் கட்டக் காசு கொடுத்தார்கள். கிராமமக்களுக்கு அந்த சித்திர வேலாயுதக் குமரன் குலதெய்வம் ஆனான். சிவம் தான் அதற்கும் பொறுப்பாய் நின்று எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டான்.

அன்று கோவில் வேலைகளைப் பார்த்துக்கொண்டிருந்தபோது சதாசிவம் வந்து சொன்னான்.

"குஞ்சுப்பரந்தன் சிவலிங்கம் விதானையார் மோசம்போயிட்டாராம்."

"அட கடவுளே... என்ன நடந்ததாம்?"

"நெஞ்சுவலி எண்டு நேற்று ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோனவையாம், இண்டைக்கு காலமை சீவன் போட்டுதாம். புண்ணியம்செய்த மனிசன். செத்தவீட்டுக்கும் போகவேணும்."

அப்படியே வேலைகளை விட்டுவிட்டு குஞ்சுப்பரந்தனுக்கு போனார். நிறைய ஆட்கள் வந்து குவிந்திருந்தார்கள். இவர் நிறையவே மனிதர்களை சம்பாதித்திருப்பதாய் தோன்றியது.

கூடவே சுடலைக்கும் போய்விட்டு வீடு வந்து முழுகிசாப்பிட நான்கு மணியாகிவிட்டது. வயலில் சூடடி நடந்துகொண்டிருந்தது. ஒரு பகுதி நெல் அடித்து வந்ததை யாழ்ப்பாணத்திலிருந்து லொறிகள் வந்து ஏற்றிச்சென்றுவிட்டன. நெல் புறோக்கர் குணம் ஒவ்வொரு வீடுகளுக்கும் லொறிகளைக்கூட்டி வந்து எடுத்துக்கொடுப்பான். இரண்டு பக்கத்தாலும் குணத்துக்கு காசு கிடைக்கும்.

கிராமத்து வீதி லொறிகளின் ஓட்டத்தால் புழுதி பறந்தது. அறுவடைக் காலங்கள் ஆனந்தமயமானவை. புது நெல்லின் வாசனை மூக்கை நெருட உழைப்பின் பலனை அனுபவிக்கின்றநேரம் இது. பராசத்தியும், பிள்ளைகளும் புதுத்துணிகள் எடுத்துக் கொள்வார்கள். நகைகள் செய்துகொள்வார்கள்.

நெல் மகாலட்சுமிதான். ஒரு பிடி நெல் வீட்டில் இருந்தாலே எல்லா செல்வமும் நிறைந்தது போலத்தான்.

பொழுது இருளும் நேரம், சூடடிக்களத்துக்கு புறப்பட்டார். வழியில் தருமலிங்கம் வீட்டு வாசலில் லொறி நின்று நெல் மூட்டைகளை ஏற்றிக்கொண்டிருந்தது.

"குணம்! நாளைக்கு லொறியைக்கொண்டு வா. இரவு அடிக்கிற நெல்லு வீட்ட வந்திடும்."

"ஓமண்ணை, நாளைக்கு மாப்பியன்ர லொறி மானிப்பாயிலயிருந்து வருகுது. இல்லாட்டியும் நெல்லியடி லொறிகளும் வரும். கூட்டிவாறன். எத்தனைலோட்டு வரும்."

"ரெண்டு லோட்டு ஏத்தலாம்."

"சரி கூட்டி வாறன்."

அவர் வயலுக்கு வந்து தெருக்கரையில் காரை நிறுத்தி இறங்கி உள்ளே நடந்தார். மரியக்கண்டு களத்தைக் கவனித்துக்கொண்டிருந்தான். மெல்லிய இருட்டில் வரம்பில் குறுக்காகப்போன பாம்பைக்கண்டு ஒருநிமிடம் துணுக்குற்று நின்று பார்த்துவிட்டு தொடர்ந்து நடந்துபோனார்.

பெட்ரோமாக்ஸ் வெளிச்சத்தில் உழவியந்திரத்தை செலுத்திக்கொண்டிருந்த செல்வத்தை கவனித்துப்பார்த்தார்.

"என்ன மரியக்கண்டு, செல்வம் பயமில்லாமல் ஓடுறானே"

"பையன் துணிச்சல்காரன், விரைவாய் மிசின் ஓடப்பழகியிட்டான். இருபது வயதின் சுறுசுறுப்பு அது.

கிளிநொச்சிக்கு வந்து சொந்தமாய் வயல் செய்தவர்கள் ஏதே ஒரு விதத்தில் முன்னேறி விட இந்த விநாசி மட்டும் அப்படியே அதே ஏழ்மை நிலையில் இருப்பதுதான் மிகவும் கவலை தருவது. உழவியந்திரம் பழக செல்வத்தை கூட்டி வந்தபோதே செல்வத்தின் சுறுசுறுப்பில் அவருக்கு நம்பிக்கை வந்து விட்டது. அவனும் ஆர்வத்தோடு பழகி சில மாதங்களிலேயே தனியாகச்செலுத்தும் நிலைக்கு வந்துவிட்டான். சிவத்தின் மனதில் இன்னொரு உழவியந்திரம் எடுக்கும் யோசனையும் இருந்தது. சொந்தமாயும் குத்தகைக்கும் நூறு ஏக்கருக்கு மேல் வயல் செய்வதால் இரண்டு தேவையாக இருந்தது. இன்னொன்று எடுத்தால் செல்வத்தை நிரந்தரமாக வைத்துக்கொள் ளலாம்.

விநாசியின் குமரபுரக் காணியை இப்போது செல்வமே செய்கிறான். அதற்கு எல்லா உதவியும் சிவம் செய்துகொடுக்கிறார் கொஞ்சம் கை கொடுத்தால் போதும் செல்வம் உயர்ந்து விடுவான் என்றே தோன்றியது.

விநாசியிடம் இப்போது அடுத்த தலைமுறையினரும் கூத்து பழகத்தொடங்கிவிட்டார்கள். விநாசியால் ஆர்மோனியத்தைவிட முடியாது என்பது தெரிந்தவிடயம்.

ஒன்பது மணிவரை வயலில் நின்றுவிட்டு சிவம் வீட்டுக்குவந்தார். காரை நிறுத்தி பூட்டி வீட்டுக்குள் வந்தபோது எல்லா மின் விளக்குகளும் எரிந்துகொண்டிருந்தன.

பராசத்தியும் முருகானந்தனும் அவருக்காக பார்த்துக்கொண்டிருப்பது தெரிய 'என்ன என்று' வியப்புடன் கேட்டார்.

"இன்ரவியூ முடிஞ்சு இவ்வளவு நாளாகியும் ஒரு மறுமொழியையும் காணேலை ரீச்சிங் கிடைக்கவேணுமெண்டால் எங்கட எம்பிமாரை பிடிச்சு மினிஸ்ரியில கதைக்க வேணுமாம். ஐயா ஒருக்கா எங்கட எம்.பியோட கதைச்சுப் பார்க்கிறீங்களே."



சிவம் ஒரு வினாடி மகனைப் பார்த்தான். நாடியைத் தேய்த்துவிட்டுக்கொண்டார்.

"என்ர பிள்ளைக்கு வேலை எடுத்துத் தா எண்டு நான் எப்பிடி எம்.பியிட்ட கேக்கிறது. உன்ர திறமையிலதான் உனக்கு வேலை வர வேணும்."

"திறமைக்கு வேலை கிடைத்த காலம் போயிட்டுது ஐயா, இப்ப செல்வாக்குக்குத்தான் வேலை."

முருகானந்தன் மெல்லிய குரலில் சொன்னான்.

"செல்வாக்காலதான் வேலை கிடைக்குமெண்டால் அந்த வேலை உனக்கு வேண்டாம். காணி, பூமி இருக்கு, உத்தியோகம் தான் வேணும் எண்டில்லை வா, வந்து வயலைச் செய். பாலச்சந்திரன் செய்யேலையே"

முருகானந்தனின் முகம் வாடிப் போனது. திரும்பி பராசத்தியைப் பார்த்தான்.

"வயல் செய்யிற எல்லாரும் உங்களைப் போல வசதியாய் வரேலை ஐயா, நெல் விளையாமல் கடன்பட்டு கஸ்ரப்படுறவையும் கனபேர் இருக்கினம், அதுக்கும் பலன் வேணும்."

"பலன் இல்லை உழைப்பு வேணும்."

முருகானந்தன் எதுவும் பேசவில்லை. அவனுக்குத் தெரிந்துவிட்டது. தந்தை தனக்காக எம்.பியிடம் போகமாட்டார் என்று.

சிவம் நிதானமாகப் போய் உடைமாற்றிக் கொண்டு கால் முகம் கழுவிவந்தார். அமைதியாய் சாப்பிட்டார்.

வாக்குப்போட்ட மக்கள் ஒவ்வொரு அலுவலுக்கும் எம்.பியிடம் நடையாய் நடந்து கொண்டிருப்பதை அவர் பார்த்துக்கொண்டு தான் இருக்கிறார். அப்படி நடையாய் நடக்க அவரால் முடியாது.

படுக்கும்போது முருகானந்தனிடம் திருப்பிச் சொன்னார்.

"உனக்கு எது கிடைக்க பலன் இருக்கோ, அது தான் கிடைக்கும் மோனை. வேலை கிடைச்சால் சரி,இல்லாட்டியும் கவலைப்படாத"

அந்தப்பேச்சு அத்துடன் நின்றுவிட்டது.

ஒரு மாதத்தின் பின் முருகானந்தனுக்கு நாவலப்பிட்டியில் ஆசிரிய நியமனம் கிடைத்தது. தோளிலும் கையிலும் பிரயாணப்பைகளுடன் புறப்பட்ட பிள்ளையை வாஞ்சையுடன் அணைத்து வழியனுப்பி வைத்தார்.

இப்போது வீடு வெறிச்சென்று கிடந்தது.

"சித்திராவையும் கொண்டுபோய் ஹொஸ்டலில விட்டிட்டீங்கள். அஞ்சு பிள்ளையள், ஆனால் வீட்டில ஒருதரும் இல்லை."

பராசத்தி ஆதங்கத்தோடு சொன்னாள்.

"அப்ப இன்னும் அஞ்சைப் பெத்திருக்கலாம் எண்டு சொல்லுறியே"

அது சரி ஆசைதான்

"வீட்டில நிறைய பிள்ளையள் இருந்தால். சந்தோசம்தானே."

அவருக்கு மரியக்கண்டுவின் நினைவு வந்தது. தனிமை என்பது எத்தனை பெரிய துயரம். காசு சேமிப்பதால் மரியக்கண்டு ஒழுங்காக சமைத்து சாப்பிடுவதுகூட இல்லை. வாயை வயிற்றைக்கட்டி காசு சேர்ப்பது என்பது மரியக்கண்டு விடயத்தில்தான் நல்ல பொருத்தமாய் இருந்தது.

அண்ணையைப் பார்த்து நிறைய நாட்களாகிவிட்டது என்ற நினைவில் அன்று வேலாயுதம் வீட்டுக்குப் போனார். பெரிய வீடு தளபாடங்களும் மின் விளக்குகளுமாக பளிச்சென்றிருந்தது. பாலச்சந்திரன் மனைவி பிள்ளைகளுடன் இங்கேயே இருக்கிறான். இரண்டு பெண்களுக்கு எஞ்சினியர் மாப்பிள்ளை பார்த்து திருமணம்செய்து வைத்துவிட்டார். பண்டாகமத்தில் பெரிய வீடுகட்டி மூத்த மகளுக்கு கொடுத்திருந்தார். அடுத்த மகளுக்கு கிளிநொச்சிப் பக்கமாக கண்டி வீதியில் வீடு கட்டிக்கொடுத்திருந்தார். அவர்கள் கொழும்பில் இருக்கிறார்கள்.அடுத்த பெண்ணுக்கு இப்போது மாப்பிள்ளை பார்த்துக் கொண்டிருக்கிறார். அவளுக்குக் கொடுக்க பரந்தனுக்கும் கிளிநொச்சிக்கும் நடுவே கண்டி வீதியில் ஒருவீடு கட்டிக் கொண்டிருக்கிறார். அடுத்தடுத்த மகன் மாருக்கும் வியாபாரத்தில் ஈடுபட வசதி செய்துகொடுத்திருக்கிறார்.இத்தனை வயதாகியும் வயலுக்கும் தியேட்டருக்கும் கடைக்குமாக ஓடிக்கொண்டிருக்கிறார். நரை விழுந்த தலை, சுருக்கம் போட ஆரம்பித்த முகம், ஆனாலும் தளராத உடம்பு, அதே சுறுசுறுப்பு.

சிவத்தைக்கண்டதும் "என்னடாப்பா கனநாளாய் இந்தப்பக்கம் வரேலை, எப்பிடி இருக்கிறாய்" என்று கேட்டார்.

எத்தனை வசதி வந்தாலும் எவ்வளவு மாற்றம் நிகழ்ந்தாலும் மாறாமல் இருப்பது அந்தப்பாசம்.

"மூத்தவனிட்டயிருந்து கடிதம் வந்ததே..."

"ஓமண்ணை, நேற்று வந்தது. ஸ்கூலுக்கு பக்கத்தில ஒரு வீட்டிலவேறஆட்களோட அறை எடுத்து தங்கியிருக்கிறானாம்."

"உத்தியோகம் பார்க்கிறதோ இல்லையோ நல்லா படிக்க வேணும், ஆம்பிளைப்பிள்ளை பொம்பிளைப்பிள்ளை ரெண்டும் படிக்கவேணும். டொக்ரரோ எஞ்சினியரோ எங்கட வசதிப்படி எடுத்துக்கொள்ளலாம். அதுக்கு தக்கதாய் எங்கட பொம்பிளைப் பிள்ளையளும் படிச்சிருக்க வேணும், இந்தப்பிள்ளைக்கும் பார்த்துக் கொண்டிருக்கிறன். ஒண்டும் சரிவருகுதில்லை. வீடு கட்டி முடியமும்முரமாய் தேடவேணும்."

கனகம் மச்சாள் வந்து தேனீர் கொடுத்துவிட்டு எல்லோரையும் விசாரித்தாள்.

"ஊர்பக்கம் போனால் சொல்லு, கொஞ்சம் காசுதாறன் அன்னத்திட்ட குடுத்து விடு."

"நீ போகேலையே..."

"எங்க எனக்கு நேரம் இல்லை அவளை நினைக்க கவலையாய் இருக்கு.சின்னய்யன் வண்டிலயிருந்து விழுந்து கால் முறிஞ்சு கிடக்கிறானாம். கணேசு ஏதும் உழைச்சு கொண்டு வந்து குடுக்கிறவனாமே,அதுக்குள்ள அவன் கலியாணமும் செய்திட்டானாம். ஆராம் குடும்பத்தை பார்க்கிறது."

சிறிது கோபமும் கவலையும் அந்தக்குரலில் இருந்தது.

சிவம் எதுவும் பேசவில்லை.

அன்னத்தின் நினைவு வந்ததும் மனம் பாரமாய் போனது.

ஒரு தடவை ஊருக்குப்போய் வர வேண்டும் என்று நினைத்துக் கொண்டார்.

(தொடரும்...)

ஊக்கத்தால் சாதிக்கப்பட்டு, காலத்தின் கடுகிய போக்கில் முழுமை பெறுவது, அனுபவம். – வில்லியம் ஷேக்ஸ்பியர்




# தேசத்தின் கட்டளை

சித்திரை மாதம் பௌர்ணமி நிலவு தகதகவென்று ஒளித்தது. அக்கிராமத்தில் குடியிருப்புகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக கண்ணுக்கெட்டிய தூரத்தில்தான் தென்பட்டது. போரின் தாக்கங்கள் அந்தக்கிராமத்தில் காணப்பட்டன. அது தமிழர்களின் எல்லைப் பிரதேசம்.

கண்மணி உள்ளத்தில் இனம்புரியாத பயமும், வெறுமை உணர்வும், துக்கமும் ஆட்கொண்டது. வாழ்வில் ஏற்பட்ட பிரச்சினைகள், ரணங்கள் உயிருள்ள வரை அவளின் மனதைவிட்டு அகலப் போவதில்லை. இது தமிழீழப் பிரதேசம் எங்கும் நடந்ததுதான்...

அழுவதற்காகப் பிறந்தோம், கண்ணீரில் நனைவதற்காக வளர்ந்தோம், தெய்வம் ஊமை என்றும் அறிந்தோம்....அண்மையில் வாசித்த தேசத்தின் பாடல் இது. சிறுகதையிலுள்ள வரிகள் கண்மணியின் மனதில் மூளை வழியாக வந்து சங்கமித்தது... சில வேளைகளில் அவளின் கடந்தகால நினைவில் பூகம்பம் வெடிக்கும், எரிமலை உருகும், காட்டாறு பாயும்...

இன்றும் அதே உணர்வுதான் அவள் இதயத்தை ஆட்கொண்டது. அவள்தான் தண்ணீரூற்றி வளர்ந்த செவ்விளநீர் மரத்தைப்பார்த்தாள்... அது பூவும், பிஞ்சும், குலையுடனும் நெடுமரமாகக் காட்சிதந்ததைக் கண்டு அவள் இதயம் பால்ய பருவத்திற்குச் சென்றது.

அப்ப அவளுக்கு ஆறு வயது. தகப்பன் முத்தையா கடின உழைப்பாளி. இனக்கலவரங்களால் உறவுகளையும், சொத்துச் சுகங்களையும் இழந்து மனைவி பொன்னம்மாவுடனும் செல்ல மகள் கண்மணியுடனும் ஒதுக்குப்புறமாக தனித்து வாழ்பவர்.

மாட்டுவண்டில் வைத்து விறகு ஏற்றி சீவனம் செய்து வந்தார். தாய் பொன்னம்மா நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்தாள்...

ஓ...அந்தக் கொடூரம்...

கண்மணியால் அதற்கு மேல் சிந்திக்க முடியவில்லை.

மோன நிலையில் சஞ்சரித்தாள்.

அன்று முத்தையா விறகு ஏற்றிக் கொண்டு சென்றுவிட்டார்...இரவு எட்டு மணியாகியும் வீட்டிற்கு வரவில்லை...

கண்மணி... கண்மணி இஞ்சை வாம்மா! அப்பாவையும் இன்னமும் காணேல்லை. காலம் கெட்டுக் கிடக்குது. நேரத்தோடை சென்ற மனிசன் என்ன செய்யுதோ தெரியாது...

படித்துக்கொண்டிருந்த கண்மணி தாயிடம் சென்று ஏனம்மா கூப்பிட்ட நீங்கள்...

நீ சாப்பிடம்மா அப்பா வந்தவுடன் நான் சாப்பிடுறன்...

கண்மணி சாப்பிட்டுக்கொண்டு அப்பா சாப்பிட்டுருப்பாரா அம்மா...

இல்லையம்மா அந்த மனுசன் வீட்டை வந்து தான் சாப்பிடும்.

(வெளியில் நாய் குரைக்கும் சத்தங்களும் சப்பாத்து ஒலிகளும் கேட்டது.)

பொன்னம்மா பிள்ளை வயிற்றுடன் எழும்பமுடியாது விறாந்தையிலுள்ள மேசையில் கையைப்பிடித்து எழும்பி நாரியில் கைகளை ஊன்றியவாறு மெது மெதுவாக நடந்து வாசல் படிக்கு சென்றாள்...

நான்கு பொலிசார் ஆயுதங்களுடன் வந்து முத்தையாவை விசாரித்தனர்...

அவர் விறகேத்திச் சென்றவர். இன்னமும் வரவில்லை. பொன்னம்மா பயந்தவாறு பதிலளித்தாள்.

அவர்கள் இதுதான் தருணமென்று வீட்டிற்குள் புகுந்தனர்.





பொன்னம்மா கத்துவதற்கு வாயைத் திறந்தாள்.

வாய்பொத்தப்பட்டது... தாயின் நிலைகண்டு கண்மணி தாயை அணைத்தவாறு கதறினாள். பொலிசுக்கார கண்மணியைத் தூக்கி வெளியில் வீசினார்கள். கண்மணி மயக்கமுற்றாள்.

நடந்த கொடூரம்...

நாட்டின் பாதுகாவலரின் இன அழிப்பு.

இனவெறி அரசால் ஏவி விடப்பட்ட ஏவல் நாய்களின் வெறியாட்டம். மிருக உணர்விற்கு அப்பாற்பட்ட ஈனச்செயல்..

முத்தையா வீட்டிற்கு வந்த பொழுது பொன்னம்மா இரத்த வெள்ளத்தில் மிதந்தாள்...

கண்மணி மயக்கம் தெளிந்து தந்தையிடம் ஓடி வந்தாள்... தந்தை உணர்ச்சியற்று நின்ற திசை நோக்கினாள்.

அங்கே தாய், பத்து மாதம் சுமந்து பெற்றவள், பாலூட்டித் தாலாட்டியவள் கிடந்த கோலம் கண்மணிக்கு சிலது புரிந்தது...

கண்மணியை கண்ணை இமை காப்பது போல முத்தையா பராமரித்து வந்தார்... கண்மணி தந்தைமேல் அளவு கடந்த பாசத்துடன் வளர்ந்தாள்.

காலமும் நகர்ந்தது. வீட்டு முற்றத்தில் நின்ற குட்டித் தென்னம்பிள்ளை வளர்ந்து பாளைதள்ளிவிட்டது. கண்மணியும் பருவமடைந்தாள்.

முத்தையா அவளுக்கு காலாகாலத்தில் கலியாணம் செய்து வைக்கவேணுமெண்டு நினைத்து மகளுடன் கதைத்தார்...

பிள்ளை உன்ரை அம்மா இருந்தால் பரவாயில்லை அவளும் இடைநடுவிலை உன்னை என்ரை பொறுப்பிலை விட்டுவிட்டு போய்ச்

**ஏழுமலை மூவேந்தன்**

சேர்ந்து விட்டாள்.

உனக்கு கலியாணம் செய்து வைச்சால்தான் என்ரை மனது ஆறுதலடையும், அவளது ஆத்மாவும் சாந்தியடையும்.

அப்பா எனக்கு கலியாணம் இப்ப தேவையில்லை. அம்மாவுக்கு நடந்ததையும் நான் மறக்கவில்லை. அம்மாவின்ரை இரண்டு கடமைகளையும் நான் பூர்த்திசெய்யிறன். ஆண் சகோதரன் இருந்தாலாவது எனக்கு கடமை குறையும் அதுக்கும் பாக்கியமில்லை...

நான் முதலில் நாட்டுக்காகப் போராடப்போறன். எம் மண்ணிலிருந்து அந்நியனை அகற்றி எம் தேச விடுதலைக்கு பங்காற்றப் போறன். அதற்குப்பிறகு தான் எனக்கு கலியாணம். அவளின் உறுதியான சபதத்தால் முத்தையா ஒரு கணம் அதிர்ச்சியடைந்தார்.

நிதானமாகச் சிந்தித்த பின்னர் மகிழ்ச்சியடைந்தார்.

மனைவியின் நிகழ்வும், மகளின் முடிவும் தேத்தின் கடமைகளையும் நினைவுபடுத்தியது முத்தையாவிற்கு!

முத்தையா குடிசையில் உழைத்து உண்டு யோகி வாழ்க்கை வாழ்ந்தார். மனைவியின் துயர் வாட்டும்போது அவளிற்கு ஏற்பட்டநிலை உறுத்த...மகளை நினைத்து பெருமைப்படுவார், அவர் பெருமைப்படும் நிலையிலே மகளின் திறமை, பெயர், புகழ் அதிகரித்தது...

கண்மணி தனது திறமையால் போராட்டத்தில் கணிசமான பெரிய பங்குவகித்தாள்...

அவள் சோர்வுறும் போதெல்லாம் தாயின் நிகழ்வு ஆட்கொள்ளும். அதுவே அவளிற்கு படிக்கல்லாகியது.

கண்மணியின் குடும்ப நிலையை அறிந்த பொறுப்பானவர்கள் ஆறுமாதத்திற்கொரு தடவையாவது தகப்பனைப்பார்த்து வர அனுமதி வழங்கியிருந்தனர். கண்மணி வீடு செல்லும் போதெல்லாம் முத்தையா அவளிற்கு பாசத்தையும் ஊட்டி, கடமையையும் வலியுறுத்துவார்.

அம்மா... மகள்... தலைமையை விசுவாசி, போராளிகளை மதித்து நட, மக்களுக்காக வாழ்...இதுவே அவரின் பொன்மொழியாக இருக்கும்.

கடைசியாக கண்மணி தந்தையைப் பார்க்கவந்தபொழுது... முத்தையா தனது பொன்மொழியைத் தான் கூறினார். முத்தையாவிற்கும் அறுபது வயதைத்தாண்டிவிட்டது. அவரின் முதுமை கண்டு கண்மணி கவலையடைந்தாள். அம்மா இருந்தாலாவது அவர் கோலம் இந்தளவு மோசமாய் போயிருக்காது... மனதில் நினைவுகள் நீந்தியதால் கண்கள் பனித்தன. இப்படி எத்தனையோ குடும்பங்கள் தமிழீழத்தில் கலங்குகின்றன...

கண்மணி காலைக்கடமைகளைமுடித்துவிட்டு தனது பணியை ஆரம்பிக்க ஆயத்தமானபோது... அவளிற்கு ஒரு அழைப்புக்காத்திருப்பதாகக் கூறப்பட்டது.

என்னவாகஇருக்கும் கண்மணி நினைவில் பலவாறு எண்ணங்கள் ஓடியது.

விடயம் அவளை உலுக்கி விட்டது...

விமானக்குண்டு வீச்சில் முத்தையா காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதாக... தந்தையை காணச்சென்றாள்...

அங்கே பலரின் உயிரிழந்த உடல் குவியலுக்குள் முத்தையாவின் உடலும்...

கண்மணி கதறவில்லை...

துன்பத்தின் இறுதி, உறுதியின் படிகள்...

ஆறுவயதில் தாயைப் பறிகொடுத்த தன்மேல் உயர்ந்த அன்பைப்பொழிந்து, சிறந்த தமிழ்ப் பற்றும்சால்பும் பெறவைத்து, தனது இலட்சியப் பசிக்கு உரமூட்டிய தந்தையின் கடமைகளை முடித்துவிட்டு...வீட்டு வாசலில் பெண் போராளிகளுடன் இருந்தாள்.

அழுவதற்கா பிறந்தோம், கண்ணீரில் நனைவதற்கா வளர்ந்தோம், தெய்வம் ஊமை என்றும் அறிந்தோம்...

இல்லை... இல்லை..

வாழ்வதற்குப்பிறந்தோம் தமிழை வாழவைக்க உழைப்போம், தலைவன் வழி நடந்து தமிழீழம் மீட்போம்.

## குட்டிக்கதை



# சோம்பேறித்தனத்தின் கதி

வெறும் கட்டாந்தரையில் சூகை எறும்பொன்று ஆசுவாசமாய் நீட்டி நிமிர்ந்து படுத்திருந்தது.

அவ்வழியே வந்த இன்னொரு சூகை எறும்பைப் பார்த்து எங்கே போகிறாய் என வினவியது.

"மழைக்காலம் தொடங்கி விட்டது, எங்களது வாழ்விடத்தில் உணவுகளை சேகரித்து வைத்தால் தானே நாம் பட்டினி கிடக்காமல் மகிழ்ச்சியாய் உண்ணலாம், அது தான் நான் உணவு தேடிப்போறன்" என்றது வந்த எறும்பு.

படுத்திருந்த எறும்பு ஏளனமாய் சிரித்து விட்டு, நீ அதிக மக்காயிருக்கிறாயே உனக்கு புத்தியென்பதே றொம்ப சைபர்தான் ஏன் வீணாக அங்க இஞ்ச உணவு தேடி அலைஞ்சு நேரத்தை விரயமாக்குவான். இதோ என்னைப் பாத்தாயோ கால் கை நீட்டிப்படுத்து காத்து வாங்கியபடி சுகசீவியம் நடத்திறன்.

என்னது.....? மிகவும் ஆச்சரியமாக இருக்கிறதே நீ எப்படித்தான் சீவிக்கிறாயோ.....? நான் தினமும் உணவுதேட எவ்வளவு கஸ்ரப்படுகிறன். நீ இந்த மாதிரிபடுத்துக் கிடக்கிறாயே.

நீ இப்போது வேண்டுமானாலும் என்னுடன் வா இடத்தைக் காட்டிறன்.

எவடமெண்டு சொல்லு அதன்பிறகுதான் நான் உன்னுடன் வருவனேன்றது வந்த எறும்பு.

உங்க பக்கத்தில தெரீற அடுப்படிக்குள்ளை சிறு துவாரமுள்ள பெரிய ஏதனத்துக்குள்ள சீனி கொட்டி வைச்சிருக்கினம். பல நாட்களாகவே அதுதான் எனது சாப்பாடுவா, உடனய தின்று விட்டு திரும்பியும் வரலாம் அல்லது ரண்டு மூன்று நாட்களுக்கு அதுக்கையே இருந்து குஷியாக புசிக்கலாம். அதென்ன ஜொலியான வாழ்க்கை என்ன போகலாமா? எனக்குப் பின்னால வா.

கஸ்ரப்பட்டு தேடியலைஞ்சி உண்பதுதான் எனக்குப் பிடிக்கும்.உன்னை மாதிரி குறுக்குவழீல திருட்டுத்தனமாய் நுளைந்து, நேர்மையற்று, சோம்பேறித்தனமாய் படுத்துக்கிடந்து உடம்பு வளர்ப்பதில் எனக்கு எந்த உடன்பாடுமில்லை, நான் வருகிறன் ப்சே.... இவளவு நேரமும் உன்னோடு மினக்கெட்டேனே, என நச்சரித்தபடி விசைத்தளிக்கொண்டு போனது நல்ல எறும்பு. பாவம் வாழத்தெரியாது என்று இகழ்ந்தது மற்றைய எறும்பு.

என்னப்பா! தண்ணி இன்னும் கொதிக்கேலையோ? வேலைக்கு நேரம்போகுது.

ம்..,ம்...வந்திட்டன் வந்திட்டன் இந்தாங்கோ தேத்தணி.

வழமைபோல அந்த நல்ல எறும்பு அதிகாலையே உணவுதேடி அவ்வழியால் வந்துகொண்டிருந்தது.

ப்பூ....துப்....என்னடியப்பா தேத்தணீக்க எறும்பு.

ஐயோ! நான் கவனிக்கேலையப்பா, சீனிக்குள்ள எறும்பு இருந்ததோ இல்லையோ எண்டது, எனக்குத் தெரியாது, நீங்கள் அவசரப்பட்டதால நான் வடிக்காமல் கொண்டு வந்திட்டன்.

அவர் துப்பிய துப்பில் வந்த எறும்புக்கு பக்கத்தில் போய் விழுந்து மல்லக்காகக் கிடந்தது அந்த எறும்பு சுடுநீரில் அவிந்து போய்!

நல்ல எறும்பு சொல்லிற்று.

"குறுக்கு வழியிலை போறவன்
ஒருக்காலும் உய்யான்"

**ஆவரங்கால் சுதன்**



# கனவுவெளி!

ஜதார்த்தங்களை
சிலவேளைகளில்
ஜீரணிக்க முடிவதில்லை
மனசின்
வடிவமைப்புகளிற்கு
வெளியே - தீர்மானிக்கப்படும்
முடிவுகளினால்
நொருங்கும் கனவுகள்
எண்ணங்களினாலானது
கனவுவெளி
அவ்வெளியின் மீது
ஏற்றப்பட்டிருக்கிறது
வாழ்வு!
சிதைகிற அதற்காய்
அழுகிறது என் மனசு
ஆளறுந்த தெருவின்
ஒற்றை நாயென
பிரக்ஞை அற்று....
வடுக்களின் மீதமர்ந்தும் - மனசு
மிச்சம் வைக்கிறது - வாழ்வை
கனவுகளை
கோர்ப்பதற்காய்
எனினும் - என்
கனவுகளை ஓரம் கட்டுகிற
ஜதார்த்தங்களிற்கு
தெரிவதில்லை
கனவுகளின் மீதான
என் மனசின்
அக்கறை....

த.அகிலன்

# அழகு

அழகு என்பது என்ன முதலில்? தத்துவமா? உருவமா?

இதைப்பற்றி விவாதங்கள் சச்சரவுகள் நடைபெற்றிருக்கின்றன. பெரும் புத்தகங்கள் எழுதியிருக்கிறார்கள். சிலர் அழகு என்பது உருவமானால் நசித்துப் போகுமே. அழகு நிரந்தரமாக இருப்பதால் தத்துவம் தான் என்று சாதிக்கிறார்கள். சிலர் தத்துவம் எப்படியாகும். அழகு பஞ்சேந்திரியங்களின் ரசனைக்கு உட்பட்டதுதானே. உருவத்தில் தானே மனதை மயக்குகிறது. அழகு உருவம் தான் என்கிறார்கள்.

ஆராய்ந்து பார்த்தால் அழகு உருவமுமல்ல தத்துவமுமல்ல. இரண்டும்தான். இரண்டும் கலப்பு தெரியாத முறையில் கலவை கொண்ட ஓர்உருட்த் தத்துவம்.

அழகு வாழ்க்கையில் தென்படும்பொழுது பொதுவாக உருவம், கலையில் தென்படும் பொழுது பொதுவாக தத்துவம். இரண்டிற்கும் விதிவிலக்குகள் இருக்கின்றன. கலையில் சிலை உருவமாக இருக்கிறது. வாழ்க்கையில் ராகம் தத்துவமாக இருக்கின்றது.

வாழ்க்கை கலையாகிறதா? கலை வாழ்க்கையாகிறதா? எந்தமுறையில் அழகு பரிமாணம் அடைகிறது. இதுவும் பெரிய கேள்வி. இதற்கும்பெரும்புத்தகங்கள் இருக்கின்றன. எழுதினவர்கள் எல்லோரும் சிறந்த ரசிகர்கள். தத்துவதாரிகள், ஆராய்ச்சியாளர்கள்.

இந்த ஆராய்ச்சியில் ஒரு விசயம் மிகவும் முக்கியமானது. அது விஞ்ஞானமே புகட்டும் உண்மை. எதுவும் ஒரு தனிவஸ்துவல்ல. ஆட்டம் என்று பரமணுவில் கூட புளூட்டோன், எலக்ரோன் என்று இரண்டு இருக்கின்றன.அந்த புளூட்டோனைப் பிரித்தாலும் இரண்டும் இருக்கலாம். எனவே எதுவும் இரண்டு அல்லது பல கலந்த ஒன்று - நீர் போல.

இந்த உண்மையை மனதில் வைத்துக்கொண்டு பார்த்தால் சிக்கலே இல்லை. இதன்படி உருவத்தில் தத்துவம் இருக்கிறது. தத்துவத்தில் உருவமிருக்கிறது. வாழ்க்கையில் கலை இருக்கிறது கலையில் வாழ்க்கை இருக்கிறது. இது அனுபவம் கூட.

உருவமோ தத்துவமோ அழகு என்பதற்கு எது உரைகல்? ஒன்றை அழகு வாயந்தது. எழில் பெற்றது, வனப்புமிக்கது, கவர்ச்சி பூண்டது என்று எப்படிச் சொல்லுகின்றோம்?

மனிதனுடைய உள்ளம் தான் அதைத்தீர்மானிக்கும் அதிகாரி. உணர்ச்சியை எது சந்திரோதயம் சமுத்திரத்தைத் தூண்டுவது போலத் தூண்டுகிறதோ அது அழகு. சூரியரச்மி தாமரையை மலரச்செய்வது போல எது மனித உள்ளத்தை விரியச்செய்கிறதோ அது எழில். இரும்பைக்காந்தம் இழுப்பது போல எது பஞ்சேந்திரியங்கள் மூலம் மனதைக் கட்டுகிறதோ அது வனப்பு. ஒளிவிட்டிலை அழைப்பது போல எது மனிதனை அழைக்கிறதோ அது கவர்ச்சி.

அழகுதந்த நிறத்தி லிருக்கிறது. அங்க நிறைவிலிருக்கிறது. கண் இமைப்பிலிருக்கிறது. இதழ்ப் பிரிவிலிருக்கிறது. நிலாவானில் இருக்கிறது. குரல் துவண்ட முணுமுணுப்பிலிருக கிறது. துடிக்கும் தாரஸ்தாயியிலி ருக்கிறது. கண்ணில் பதிகிறது. செவியில் பாய்கிறது. ஸ்பரிசத்தில் ஏறுகிறது. நாசியில் மணக்கிறது. வாயில் சுவை தட்டுகிறது.



உள்ளத்தில் இவ்வாயில்கள் வழியே பதிவு பெற்று மனோபாவத்தின் மூலம் மறுபடிவெளியேறி காவியமாகவும், சிலையாகவும், சங்கீதமாகவும் உருப்பெறுகிறது. நெகடிவில் பதிவு பெற்று உருவம் பிரோமைடில் வெளியாவது போல.

அழகு வாழ்க்கையின் ஜீவரஸம். இளமை, இனிமை, நிறைவு, இசை எல்லாம் கொண்டது. கலைஞன் அதை மூலிகை மூலிகையாகப் பிழிந்து சேர்த்துப் புடம் போட்டு முறைப்படி பாதரஸ மாக்கி விடுகிறான். வெறும்பச்சிலைச்சாறு அழியும். பாதரஸம் அழியாது.

**கு.ப.ரா**



# ஒப்பனைக்கும் அப்பால்

செயற்கைத்தனங்களுக்கு
வாழ்க்கைப்பட்டுப்போனதால்
இப்போது
இயந்திர வாசனை வீசிக்கொண்டிருக்கிறது
உன்மீதும்!
அதனால்...
பெற்றோல் விலையோடு என்
கண்ணீரை
ஒப்பிட்டுக்கொண்டிருக்கிறாய் நீ!
இயற்கையாய் உனக்குக் கிடைத்த
அழகினை — தினமும்
உருக்குலைத்துக்கொண்டிருக்கிறது
உன் முகப்பூச்சு!
உன்னைச் சுற்றியுள்ளவர்களின்
போலித்தனமான அலங்கரிப்புக்களினால் — நீ
அழகாய் இருப்பதாய் எண்ணிக்கொண்டே
உன் வீட்டு கண்ணாடியை
மறந்து விடுகிறாயோ?
அல்லது
மறைத்து விடுகிறாயோ?
நானறியேன்!
இப்போதெல்லாம் உன்
வார்த்தைகள் வெறும்
செயற்கையாகவே இருக்கின்றன
நீ சூடியிருக்கும் அந்த
"பிளாஸ்ரிக்" கனகாம்பர
மாலையைப் போல
ஒன்று சொல்கிறேன் உனக்கு!
எனக்காய் நீ அனுப்பும் அந்த
மலர்வளையமாவது
மலர்களிலேயே இருக்கட்டும்.
அழகாய்...
உண்மையாய்...

த.நிரஞ்சலன்



ஓடர்களை 22 கரட் தங்கத்தில் உத்தரவாதத்துடன் செய்து பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்
நங்கையர்களின் நகைச்சுரங்கம்
SM Graphics
சுவர்ண மஹால் கோல்ட் ஹவுஸ்
பெரியகடை, மன்னார். T.P:- 023-2232385




தித்திக்கும் தீபாவளித் திருநாள் நல்வாழ்த்துக்கள்!
ராசி சில்க்ஸ்
திருமணப் பட்டுப்புடைவைகளின் கைராசி ஜவுளியகம்
இல: 70,71A, T.P- 021-2225571
நவீனசந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஜவுளித் தெரிவுகளுக்கு
நல்லி சில்க்ஸ்
இல:- 121/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 021-2225573
SM Graphics




எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அன்பு கலந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
சிறியவர் முதல் பெரியோர் வரை யாவரும் விரும்பி அணியும் புடைவை வகைகளின் சங்கமம்
SM Graphics
புதிய சோபனா ஆடையகம்
இல:- 16, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
TP - 0777-574027




எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்!
SUMEE
S.M. கோல்ட் ஹவுஸ்
காலத்தால் அழியாத கண்கவர் தங்க நகைகளை சுத்தமான 22கரட் தங்கத்தில் தெரிவுசெய்து பெற்றுக்கொள்ளலாம்.
இல: 46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
T.P: - 24-2224247, 077 - 6059672.
SM Graphics




அன்பர்கள், நண்பர்கள், அனைவருக்கும் எம் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
உதயா ஜுவலர்ஸ்
அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்து பெற்றுக்கொள்ள இன்றே நீங்கள் நாடவேண்டிய இடம்
உதயா ஜுவலர்ஸ்
இல:- 162, பஜார் வீதி, வவுனியா.
SM Graphics
TP - 024-222 1944


தீபாவளி நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்!
சிவகுரு கட்டடப் பொருள் உந்துருளி வாணிபம்
உங்களின் சிறந்த தெரிவுகளுக்கு எங்களின் காட்சியறைக்கு வாருங்கள்
நாயகி கட்டடம், பரந்தன் சந்தி அருகாமை,
யாழ் சாலை, கிளிநொச்சி.
உந்துருளி விற்பனையில் முன்னணி வகிக்கும் நிறுவனம்
DAIDO
Scootypep First love
TVS
(சி- 8567) SM Graphis


அனைவருக்கும் அன்புகலந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பட்டுச்சாறி வகைகள் ஸ்கேட் அன் பிளவுஸ் கவுன் வகைகள்சல்வார் கமீஸ்வகைகள் ஆகியவற்றை ஒரேஇடத்தில் பெற்றுக்கொள்ள
DP
DRESS POINT
ட்றெஸ் பொயின்ட்
இல:-23, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்
T.P:- 0777- 74551
(சி- 8568)
SM Graphis


அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!
நங்கையரின் மனம் விரும்பும் வடிவங்கள்
தரம் குன்றா தங்கநகைகள்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்.
கணேசா நகையகம்
123,பஜார் வீதி, வவுனியா. TP : 024-2222464
கணேசா நகையகம்
194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
TP - 021 222 5987
யாழ் கணேசா நகையகம்
124,செட்டியார் தெரு, கொழும்பு- 11.
TP - 011-2336252
SM Graphis
(சி- 8569)


EXPOAIR
your friend in the skies
எக்ஸ்போ எயார்
யாழ்-கொழும்பு பயணத்தின் போது ரோல்ஸ் ரோய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்.
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் -
021-2223891, 021-2226297, 074 512666, 01-2360291, 0712-348888, 0712-349999, 01-2360290,
e-mail- jaffna@expoavi.com
இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை
C-8540
SM Graphics


அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
நங்கையர் விரும்பும் நவீன டிசைன் நகைகளை
அசல் 22 கரட்டில் அழகாக வடிவமைத்து
உங்களுக்கு தருபவர்கள்!
சிவா கோல்ட் ஹவுஸ்
இல:- 56, தர்மலிங்கம் வீதி, வவுனியா. T.P:- 024 - 2223034
(சீ - 8549)


தீபாவளித்திருநாள் நல்வாழ்த்துக்கள்
அனைவருக்கும் உரித்தாகுக!
பொன்னம்பலம் அரிசி ஆலை
PONNAMPALAM RICE MILL
சுத்தமானஅரிசிவகைகளை
உங்கள்விருப்பத்திற்கேற்ப
தெரிவுசெய்து பெற்றுக்கொள்ள
எம்மிடம்வாருங்கள்
PRM
பொன்னம்பலம் அரிசி ஆலை
A-9வீதி, பரந்தன் - கிளிநொச்சி
பொதிசெய்யப்பட்ட
அளவுகளிலும்
கிடைக்கும்


இதோ!
தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாக...
உங்கள் தேவைக்கான
சுபமுகூர்த்தப்பட்டுப் புடைவைகளின்
மகத்தான தரமான தெரிவுகளுக்கு!
யாழ் நகரில்
நீங்கள் நம்பிக்கையோடு நாடவேண்டிய இடம்:
மகாசில்க்ஸ்
இல:32, 40A, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.
கிளைநிறுவனமான:
பியூட்டி சில்க்ஸ்
உங்கள் புடைவைத்தேவைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்
Beauty Silks
இல-69,நவீன சந்தை(உட்புறம்),
யாழ்ப்பாணம்.
[சி-8551]

RAMCO CEMENT

அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

ராம்கோ சீமெந்து
RAMCO CEMENT

ஆசியாவின் முதல் தர(நம்பர்-1)

தொழிற்சாலையாக தெரிவு செய்யப்பட்ட தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் ராம்கோ சீமெந்தினை நேரடியாக குடாநாட்டுக்கு இறக்குமதி செய்து குடாநாட்டு மக்களின் பல கோடி ரூபாய் ணத்தை மீதப்படுத்தினோம்.

SLS -107 அங்கீகாரம் பெற்றது
ISO -9002தரம் பெற்றது
BSS-12-1991தரத்திற்கு அமைவானது

ராம்கோ சீமெந்து ஏகஇறக்குமதியாளர்கள்

ஈஸ்வரபகவான் & கொம்பனி

இல:91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P-021 2222350

(சி-8548)

குறிப்பு: முன்கூட்டியே பதிவு செய்பவர்களுக்கு நேரடியாக ராம்கோ சீமெந்து விநியோகிக்கப்படும்.

RAMCO CEMENT

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்!



யாழ் நகரில் உங்களுக்குத்
தேவையான சகல விதமான
புடைவை வகைகளுக்கும்
எம்மிடம் வாருங்கள்



மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்

இல: 10, மின்சார நிலைய வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்.
TP - 0777-311486
(சி-8547)

சைவ உணவுப் பிரியர்கள் அனைவருக்கும்



ஸ்ரீ வாணி விலாஸ்

உரிமையாளர்களும், ஊழியர்களும் தமது
தீபாவளி நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றனர்.




ஸ்ரீ வாணி விலாஸ்

இல: - 144A, கண்டி வீதி, வவுனியா

[சி-8546]

இனிய தீபாவளி
நல்வாழ்த்துக்கள்



சரியான வழியின் முன்னோடி

Multilac®
www.multilac.com
WORLDWIDE

வடபகுதிக்கான ஏக
விநியோகஸ்தர்கள்

கந்தவேலன் ரேடர்ஸ்

இல-110,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P-021-2222822



Multilac

SM GRAPHICS

[சி-8543]



தீபாவளி நல்வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகட்டும்

சர்வதேச தரநிர்ணய சான்றிதழை வழங்கும்

CSC
ISO 9001
Certified Institution
INDIA

பல்லூடக
தொழில்சார்
கற்கை நெறிகள்
MULTIMEDIA



எண்ணங்களின் பிரதிபலிப்பு

கல்லூரிகள், கல்விநிறுவனங்கள்.
பல்கலைக்கழகங்கள்.
விளம்பர நிறுவனங்கள்.
அச்சகங்கள், பதிப்பகங்கள்.
நாளிதழ்கள், பத்திரிகைகள்.
தொலைக்காட்சி நிறுவனங்கள்.
சீ.டி தயாரிப்பு
இன்ரநெட் சேவை மையங்கள்.
டிசைனிங்
ஓடியோ, வீடியோ எடிட்டிங்
காட்டுன் மையங்கள்.
டிசைனிங் மையங்கள்
கிரபிக்ஸ் டிஜிட்டல் நூலகங்கள்
சினிமா நிறுவனங்கள்

முதன் முறையாக
வவுனியாவில்....

TECHNO WORLD
DIGITAL DESIGNING SCHOOL
147, TANK ROAD, KUDIYIRUPPU,
Vavuniya
TEL:024-2221486

இனிவரும் காலம் மல்ரிமீடியாவின் ஆதிக்கமே! [சி-8544]
(தங்குமிட வசதி ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்)



A T S
ENGLAND

குகன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்

QUALITY GUARANTEED
ENGLAND
WORLDWIDE EXPORTERS

அன்பர்கள், நண்பர்கள்,வர்த்தகப் பெருமக்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

உழவு இயந்திர, வாகன
உதிரிப்பாகங்களைப் பெற்றுக்கொள்ள



KM குகன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்
இல:52, 2ம் குறுக்குத்தெரு, வவுனியா.
☎ 024-2221845 ☎ 024-2221842



நீர் இறைக்கும் இயந்திரம், மோட்டார் சைக்கிள், லான்ட் மாஸ்ரர்,
ஜெனறேற்றர் உதிரிப்பாகங்கள் கிடைக்கும் இடம்

KM குகன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்
இல:110,பஜார் வீதி, வவுனியா.
☎024-2222475,☎024-2222474

K
U
G
A
N





[சி-8545]

# பணிநிலை வேண்டுகை

வன்னியில் நன்மதிப்புடன் இயங்கிவரும் முன்னணி நிறுவனமான பாண்டியன் வாணிபத்துக்கு கீழ்வரும் பணிநிலைகளுக்கு ஆளணி தேவைப்படுகிறது. தகைமையும் பட்டறிவுமுடையவர் வேண்டுகைகளை அனுப்பி பணியை பெற்றிட முனையவும்.

| பணிநிலை | கல்வித்தகைமை | பட்டறிவு | பால் | அகவை |
|---|---|---|---|---|
| மேற்பார்வையாளர் | க.பொ.த. (உ/த) சித்தி. | முன்னணிநிறுவனம் அல்லது பொதுத்துறை நிறுவனத்தில் மூன்று ஆண்டுகள் பணியாற்றிய பட்டறிவு. | ஆண் | 23-40 |
| கணனி இயக்குநர் (கணக்குப்பதிவாளர்) | க.பொ.த.(சா/த)இல் ஆங்கிலம்,தமிழில் திறமைச்சித்தி உட்பட தேர்ச்சிபெற்றிருத்தல். அல்லது கணனிக்கல்வியில் டிப்ளோமா பட்டம் அல்லது MS office இல் தேர்ச்சி | கணனித்துறையில் 2வருடம் பணியாற்றிய முன் பட்டறிவு. | இருபாலரும் | 20-40 |
| எழுதுநர் | க.பொ.த. (சா/த) தேர்ச்சி. க.பொ.த. (உ/த) கற்றிருத்தல் விரும்பத்தக்கது. | பொதுத்துறை அல்லது தனியார்துறை நிறுவனத்தில் எழுதுநர் பணியில் ஓராண்டுக்கு குறையாத பட்டறிவு. | இருபாலரும் | 20-40 |
| களஞ்சியக்காப்பாளர் | க.பொ.த. (சா/த) தேர்ச்சி. க.பொ.த. (உ/த) கற்றிருத்தல் விரும்பத்தக்கது. | முன்னணி நிறுவனம் ஒன்றில் களஞ்சியக்காப்பாளர் பணியில் 2 வருடத்திற்கு குறையாதபட்டறிவு. | ஆண்கள் | 20-40 |
| தொழில்நுட்பவியலாளர் | க.பொ.த. (சா/த) தேர்ச்சி. மின்னியல், இலத்திரனியல் கற்கைநெறி ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் கற்று தேர்ச்சிச்சான்றிதழ் பெற்றிருத்தல். | மின்னியல், இலத்திரனியல் துறைசார் தொழிலில் 2 வருடத்திற்கு குறையாத பட்டறிவு. | ஆண்கள் | 25-40 |
| விற்பனையாளர் | க.பொ.த. (சா/த) கற்றிருத்தல். | முன்னணி நிறுவனம் ஒன்றில் அல்லது நடமாடும் வாணிபத் தொழிலில் 2 ஆண்டுகள் பணியாற்றிய பட்டறிவு. | இருபாலரும் | 20-40 |
| பாதுகாவலர் | க.பொ.த. (சா/த) கற்றிருத்தல். | பொதுத்துறை அல்லது தனியார்துறை நிறுவனத்தில் குறிப்பிட்ட பணியில் 3ஆண்டுகள் பட்டறிவு பெற்றிருத்தல். | ஆண்கள் | 18-40 |
| உணவு வழங்குநர் (உபசரிப்பாளர்) | 9ம் வகுப்பு கற்றிருத்தல் | முன் பட்டறிவு விரும்பத்தக்கது. | இருபாலரும் | 18-40 |
| சிற்றூழியர் | — | குறித்தபணியில் குறிப்பிடத்தக்க அனுபவம் விரும்பத்தக்கது. | இருபாலரும் | 18-40 |
| சமையல் உதவியாளர் | — | குறித்தபணியில் 2 ஆண்டுகள் முன் அனுபவம் | இருபாலரும் | 18-40 |
| சுத்திகரிப்புத் தொழிலாளர் | — | குறித்தபணியில் முன் அனுபவம் | இருபாலரும் | 18-40 |

- ⇨ சம்பளம் தகைமைக்கேற்ப நேரில் கலந்துரையாடி தீர்மானிக்கப்படும்.
- ⇨ பட்டறிவு உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். பட்டறிவு இல்லாதவர்களும் வேண்டுகைகளை செலுத்தவும்.
- ⇨ வேண்டுகை அனுப்பவேண்டிய கடைசி நாள் 05.11.2003
- ⇨ வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி :- விளம்பர இல-600,
  ஈழநாதம் பணிமனை,
  யாழ்சாலை, கிளிநொச்சி.
- ⇨ வேண்டுகை அனுப்பியவர்கள் அனைவரும் நேர்முகத்தேர்வுக்கான நாள், நேரத்தை அறிவதற்கு 07-11-2003 ஆம் நாள் வெள்ளிநாதத்தை தவறாது பார்க்கவும்.

ஆளுகை
**பாண்டியன் வாணிபம்**

[சி-8538]


தீபத்திருநாள் வாழ்த்துக்கள்..
உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ள தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம். நவீன முறையான மெசின்கட் வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.
ஜெசும் நகையகம்
முதன்மைச்சாலை, கரடிப்போக்கு, கிளிநொச்சி.
(சி-8575)
SM Graphics


அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்களுடன்
லலிதா ரெக்ஸ்
உங்களின் ஜவுளித் தேவைகளுக்கும் கல்யாணப் பட்டுப் புடைவைகளுக்கும் தலைசிறந்த ஸ்தாபனம்.
இல:- 13, சந்தை வீதி, வவுனியா.
TP:- 024 222 1773
இல:- 5,6 புதிய சந்தை, யாழ்ப்பாணம்.
TP:- 021-2225260
(சி-8574)
SM Graphics


எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்
HERO HONDA
YAMAHA
TVS
மோட்டார் சைக்கிள் நிறுவனங்களின் அங்கீகாரம் பெற்ற சேவிஸ் நிலையமும், பழுது பார்க்கப்படுமிடமும்
இரத்தினம் ஊர்திச்சேவைத்தளம்
பயிற்சி பெற்ற ஊழியர்களின் பக்குவமான சேவை
இல : 30,32
சிறாம்பையடி வீதி, யாழ்ப்பாணம்.
2003-10-28 இல் தனது இரண்டாவது அகவையில் காலடி எடுத்து வைக்கின்றது.
(சி-8576)
SM Graphics


அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்
கிளிநொச்சியிலும் மல்லாவி நகரிலும்
மங்கையர் மனங்கவரும் ஆடைத் தெரிவுகளுக்கும் சிறுவர் முதல் பெரியோர் வரை அணியக்கூடிய ரெடிமேட் ஆடை வகைகளுக்கும்
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்
முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலை
யாழ்சாலை, கிளிநொச்சி. (அமுதசுரபிமுன்பாக)
யோகபுரம், மல்லாவி.
(சி-8573)
SM Graphics

**பயணக்கட்டுரை**

# தேசாபிமானம் மட்டும் போதாது விழிப்புணர்வும் வேண்டும்



முகமாலை இராணுவ தடை முகாம் அவன் சரளமாய் பிசிறில்லாமல் தமிழ் கதைக்கிறான்.

"சேர் நீங்கள் எந்தப்பாடசாலை அதிபர்"

"................"

"நல்லது இயக்க தளபதிகளிற் கிடையில தர்க்கமாமே..."

சுற்றிவளைக்காத நேரடிக்கேள்வி.

"தெரியாது சேர்"

"என்ன சேர் தெரியாது நீங்கள் தானே எல்லாரும் ஒண்டா நிண்டு போரிடுறியள்"

"..............."

அவன் சொல்வது உண்மை 99%மும் உண்மை இல்லையெண்டா இத்தனை அவலங்குள்ளயும் எப்பிடி நிமிர்ந்து நிற்க முடிகிறது.

"என்ன சேர் நீங்கள் உள்ளுக்க நிக்கிறியள். உள்வீட்டுப் பிரச்சினையள் தெரியாத ஆளாய் இருக்கிறியள்... சரி சரிபோங்கோ. அதிபராய் இருக்கிறியள். இது கூடத் தெரியாம..."

அவன் முணுமுணுப்பு துல்லியமாய்க் கேட்கிறது.

வாங்கியதும் வாங்காததுமாய் அப்பால் நகர்கிறார் அவர்.

அவன் கவனம் அவளில் பதிகிறது.

அவள் போராளிப்பிள்ளை, ஊன்றுகோலின் உதவியுடன் நடந்து வருகிறாள். இரண்டு கால்களும்விழுப்புண் தாங்கியிருந்தன. இயக்கக்கட்டு அவளைப் போராளிப் பிள்ளை என்று அடையாளப் படுத்துகிறது. சீருடை அணிய முடியாது சிவில் உடையில் அவள்.

அவன் பார்வை அனுதாபமாய் அவளில் விழுகிறது.

நம்மவர்களா செய்தார்கள்? அவர்கள் அல்ல நாங்கள். நாங்கள் நல்லவர்கள் என பறைசாற்றும் நகை! புன்னகை! அவனிடம்.

அவளிடமும் புன்னகை.

என்ன நினைத்திருப்பாளோ....

பசு வேசம் போட்டசிங்கம் என்று நினைத்திருப்பாளோ... பசித்தாலும் புலி புல்லுத்தின்னாதுடா' என்று நினைத்திருப்பாளோ... எத்தினை நாளைக்குத் தான் வேசம் போடுவியள் என்று நினைத்திருப்பாளோ...'

அவள் சவட்டி,சவட்டி உறுதியாக நடந்து மிடுக்காய் இவன் அருகு வருகிறாள்.

அடையாள அட்டைப் பதிவுகளை மேற்கொண்டிருந்த இவள் கணிசமான அதிகாரத்திலுள்ள அதிகாரி போன்ற நிமிர்வில் பதிவுகளை மேற்கொள்கிறாள்.

அவள் அவஸ்தைப் பட்டுக்கொண்டு நிற்காதபோதும் பவிசாய் எழுந்து துடிப்புணர்வோடு இவள் அவளை இருக்கையில் அமருமாறு தன் இருக்கையை அவளிடம் நகர்த்துகிறாள்.

காட்சியை கண்டவர் கண்களில் கண்ணீர் பனிக்காத குறை.

எவ்வளவு இங்கிதமாய் நடந்து கொள்கிறார்கள்...

என் நினைவுத்திரையில் 'மக் ஆதர்' படம் விரிகிறது.

மக் ஆதர் படம் பார்க்காதவர்களுக்காக இவ் விபரம்:

2ம் உலக மகாயுத்தம் ஜேர்மன் இத்தாலியுடன் அச்சு நாடாய் சேர்ந்து கொண்ட ஜப்பான் பதவிப் பிராந்திய தீவுகளில் நேசநாட்டு எதிரிப் படைகளுக்கு எதிராக நிலை கொண்டிருக்கிறது.

மக் ஆதர் தலைமையில் பசுவிக் பிராந்தியத் தீவுகளின் மீட்பர் போன்று பசுபிக் பிராந்திய மக்கள் மட்டுமன்றி ஜப்பான் நாட்டு அரசே நாடி அழைக்கும் வகையிலான வலைவிரிப்பு.

வல்லாதிக்க வலிமைப்படுத்தல் அன்று தொடக்கம் இன்றுவரையில் சங்கிலித் தொடராய் தொடரும் வெளிப்பாடாய் மின்னலடிக்கிறது. அரங்கேறிக் கொண்டிருக்கும் இவர்கள் செயற்பாடுகள்.

பயணம் நகரை நோக்கி நகர்கிறது.

என் அடுக்குமாடி குப்புறக் கிடக்கிறது. பின்லேடனின் தாக்குதலில் இரட்டைக் கோபுரம் இப்பிடித்தான் கிடந்திருக்கும். உள்ளம் கொதிக்கிறது.

வெள்ளை மனிதனுக்கு மட்டும் தான் உள்ளம் கொதிக்குமோ. உஷ்ணம் 100 டிகிரியையும் தாண்டும் என்று தோன்றுகின்றது.

அருகிலிருந்த அவன் குடிசை அடுக்கு மாடியாய் நிமிர்ந்து நிற்கிறது. 'நாகராசா வாசா' அவனது பெயர்தான்.

என்ன முயற்சியில் உயர்ந்தான்... விடை அவனிட மிருந்தே கிடைக்கிறது. 'நாகராசா பார்' தந்த உழைப்பாம் அது.

அதுதானே பார்த்தன் 07 வருடங்களில் இமயத்தைத் தொடுகிறான் என்றபோது நெருடியது தான்.

பேய்கள் போக பிசாசுகள் வருகினம் என்று சொன்னவர்களில் இவனும் ஒருவனாய் இருக்கலாம்.என் எண்ணங்கள் வண்ணமிடுகையில்,

"சீ ஆர்கண்டது உப்பிடி ஒரு ஒப்பந்தம் வருமெண்டு சாதுவாத் தெரிஞ்சிருந்தாக்கூட சுவிஸ்சுக்குப் போயிருப்பன். இப்பஅவனுகளும் சமாதானம் எண்டு திருப்பி அனுப்புறானுகளாம்.வேற என்ன தொழிலைச்செய்து தான் இங்க உருப்படியாக முடியுது..."

அவன் புழுக்கம் அடங்குவதாய் இல்லை. அந்த நேரம் பார்த்து என் புழுக்கம் அதிகமாகும் வகையில் அவள் வருகிறாள்.

பார்வையைப் பறிக்கும் பளிச்சிடல் ,பொட்டில்லை. வெட்டையில வெறுமையா இடம் பெயர்ந்து இன்று வரைக்கும் நாங்கள் நினைக்கிறது போல வெறுமையா அவள் நெற்றி.

அவளது பிறை நெற்றியில் ஒரு பொட்டிருந்தா எங்கட பொடியள் சொல்லுற பாசையில சொல்லுறதெண்டா 'அந்தமாதிரித்தான்' இருக்கும்.

என்ன சிந்தனை, வயதுக்குக் கூடாது தான்.வருகுதே! நான் என்ன செய்யிறது. அவன் தான் விபரம் சொல்கிறான்.

## எரிமலை

இவள் 'டிலக்சி' சுந்தரலிங்கத்தாற்ற கடைசி. பக்கத்து முகாம் பொறுப்பதிகாரியைத்தான் செய்திருக்கிறாள்.

என் நாவில் வறட்சி.

'அங்கிள், அங்கிள்' என்று காலைச்சுற்றிய முன் வீட்டு சுந்தரலிங்கத்தின்ர கடைக்குட்டிச் சுட்டி.

என் இதயச் சுவர்களின் வெடிப்பு! துலக்கமாய் கேட்கிறது. நாகராசாவுக்கும் கூடக் கேட்டிருக்கும்.

மனித வாடையே இல்லாத் தனித்த தீவில் தவறிவிட்ட ஏகாந்தம் என்னுள் புகுகிறது.

அந்த இடத்தை அப்போதைக்கு விட்டு அகன்றால் தான், என் னால் நிதானிக்கமுடியும் என்று தோன்றுகிறது.

ரவுணுக்குப் போகவேணும், 'அடையாளங்கள் இழந்துபோன' இடங்களை அடையாளம் காண 'அடையாளம் இழந்தவர்களை' அழைத்துச் செல்வதில் எனக்கு உடன்பாடில்லை.

நினைவுபடுத்தி நினைவு படுத்தி ஆரியகுளம் சந்தியை அடைகிறேன். அதிர்ந்தே போகிறேன்.

அண்மையில் செய்திகளாய்க் கேட்டது தான்.

ஆனால் நேரில் பார்க்கையில் நெருப்பு எரிகிறது.

எங்கள் அடுக்குமாடிகளை இடித்துவிட்டு, கோபுரமா கட்டியிருக்கிறார்கள்.

"புத்தம் சரணம் கச்சாமி...சரணம் புத்தம் கச்சாமி..."

"தீயதைப் பார்க்காதே, தீயதைக் கேட்காதே, தீயதைப் பேசாதே" காந்தித் தாத்தாவின் குரங்குப்படமும் வாசகங்களும் வலுவூட்ட காதைப் பொத்த கையெடுக்க முனைந்து நிதானித்துக் கொள் கின்றேன்.

கான்ரிலிலிருந்து கையெடுத்தா என் கதி என்னாகும்?

திரும்பி விடுமோ... சீ என்னால் அது முடியாது போகிறது.என்னால் அவளைப் பார்க்காது திரும்பிவிட முடியாது.

என்னை வருடி, வசப்படுத்தி, பரவசப்படுத்தி நிமிர்த்தியவள் அவள்.

என் ஒவ்வொரு அணுவும் அவள் உறவு சொல்லும். அவள் எனக்கு வேணும்.

பாழ்பட்டுப்போனவனையும் பக்குவப்படுத்திவிடும் காதலியைப் போல

முடவனையும் ஊனம் மறைத்து உற்சாகப்படுத்தும் தாயைப்போல, என் தலைகோதி தலையணை மந்திரம் சொல்லி தாலி கேளாது மடி தந்தவள் அவள்.

தாலாட்டுப்பாடி தனயணை உறங்க வைக்கும் அன்னைபோல எத்தனையோ இரவுகள் என்னை இருட்டிலிருந்துமீட்டு இரையாகாது காத்தவள் அவள்.

சுருக்கமாய் அவள் என்னவள். என் நிமிர்வின், நிமிர்த்த காரணி!

எவ்வளவு நேயத்துடன் அவளிடம் ஓடுகிறேன். எட்டவே கண்டு விட்டேன். ஆனாலும் ஏன் எந்தப் பரவசமும் இல்லை என்னிடம்.

தொட்டு உறவாடியபோதும் அவள் உறவாடவில்லை. ஏனென்றால் அவள் உயிருடன் இல்லை.

அவளிடத்தில் இருப்பவள் வெறும் தாசி.

அரை குறையாய் நிற்கும் அவளையும் அரைநிர்வாணத்தில் காட்டி ஆதாயம் தேடும் முயற்சியில் பலர்.

கட்டியவளைக் கரியாக்கி விட்டவனுக்கு வைப்பாட்டி வேண்டிக்கிடக்கு! மூச்சுமுட்டுகிறது! மூன்று நாள் கூட என்னால் முடியவில்லை. மூச்சு வந்தபோது முல்லைத்தீவிலிருந்தேன்.

பிராணவாயுவில் பேந்தும் எங்கோ பிசகு.

விபரம் கிடைத்தபோது நாசமாய்ப்போன நான், நாலுநாள் வதையில் அதை மறந்தேபோனேன்.

அதிபர் முந்திக்கொண்டதன் விளைவு:

"இயக்க பொறுப்பாளர்களிற் கிடையில் பிணக்காம்."

"ஆர் சொன்னது."

"பொயின்றில நிண்டவங்கள் தான்."

"உதோட எத்தின பேரிட்ட சொல்லிற்றியள்."

"உம்மோட எல்லா ஆசிரியர்களுக்கும் தெரியும்."

"அவன்ர வேலை சுலபமாய் முடிஞ்சுது."

"என்ன சொல்லுறீர்..."

"ஊதியப்பணம் வேண்டாமல் ஊழியம் செய்திருக்கிறியள்'' எண்டுறன்.

"விளையாடாம விளக்கமாச் சொல்லும்."

என்னத்த விளையாடுறது. விளையாட்டு முடிஞ்சு வினை ஆரம்பிச்சாப்பிறகு! விவஸ்த்தையில்லா ஆளா பொறுப்பான அதிகாரியே பலியாகேக்க விளக்கம் என்ன வேண்டிக்கிடக்கு.

அவன் உதடுகளில் துடிப்பு.

தேசாபிமானம் மட்டும் போதாது. விழிப்புணர்வு வேணும். விசாகனுக்கு உடன் தெரியப்படுத்துவம். "அபிசீனிய" மக்கள் போல எங்கட மக்கள் விழிப்புணர்வு பெற வேணும்.

பிரித்தானியர் இண்டைக்கும் நுழையமுடியாமல் போனதைச் சொல்லுவினம்.

'கணேசன் விசாகனிட்ட சொல்லுறதோட உன்ரபணி முடியேல்ல. நல்ல குருநாதர் நல்ல நிர்மானி பார். நாட்டைக் காக்கப்போற தூண்களை நிறுத்திக் கொண்டிருக்கிறவர்களே நீங்கள்தான். உங்கட பணியில அர்த்த சாஸ்திரத்தையும் அலகாய் கொள்கிற பெரிய கடமையில இருக்கிறியள்..."

என் நாவும் நர்த்தனமிடுகிறது.

பொய்யா மொழிப்புலவரின் குறள்களில் பொருத்தமான முத்தான மூன்று குறள்களையும் மீட்டுக்கொள்கின்றேன்.

"பொருள் அல்லவற்றைப்
பொருள் என்று உணரும்
மருளான் ஆம் மாணாப்
பிறப்பு" (கு:351)

உண்மையற்ற விடயங்களை உண்மையான விடயங்கள்தான் என தவறாக எண்ணும் குழப்பமான அறிவுடையவன் சிறப்பில்லாத உயிர் வாழ்வு வாழும் இழிந்தவனாகப் பிறரால் கருதப்படுவான்.

"நெடு நீர் மறவி மடிதுயில்
நான்கும்
கெடுநீரார் காமக்கலன்"

காலம் தாழ்த்திச்செய்தலும், மறத்தலும்,சோம்பலும், தூங்குதலாகிய நான்கு குணங்களும் கொண்ட கெட்டுப்போகும் தன்மையுடையவர்கள் விரும்பி ஏறிச் செல்லும் ஓட்டைப் படகுகளாகும்.

"வருமுன்னர்க் காவாதான்
வாழ்க்கை எசி முன்னர்
வைத்தாறு போலக்கெடும்"
(கு:435)

தன் மீது ஏதாவது குறைபாடு அல்லது தனக்கு ஏதாவது ஆபத்து ஏற்படுவதற்கு முன்னதாகவே அது வராமல் காத்துக்கொள்ளாதவனுடைய வாழ்க்கையானது நெருப்பின் முன்னர் வைத்த வைக்கோல் குவியல் போல அழிந்துவிடும்.

திறனாய்வாளரின் பணி, வரையறை செய்வதல்ல, விரிவுரை செய்வதே. - யுஜீன் ஜயானெஸ்கோ.




# பாடசாலை போகவேணும்

-ஆங்கிலத்தில் குவான்ஹுவா-

"எட்டாவதுவழி இராணுவம் வந்ததும் நாங்கள் எல்லோரும் பள்ளிக்கு போகலாம் என்றுசொன்னீர்கள் அல்லவா?" என்று இரும்பனும் அவனது நண்பர்களும் ஆசிரியர் சாயை பல முறை கேட்டுவிட்டார்கள். ஆசிரியர் சாய் புன்னகை தவழ அவர்களுக்குப் பதிலளிப்பார். "முக்கியமான விடயங்களை முதலில்செய்யவேண்டும். கிராமத்திலே மக்களுடைய அரசியல் அதிகாரம் வலுவாக நிலை நாட்டப்படாமல் ஏழைப் பிள்ளைகள் எப்படிப் பாடசாலைக்குப்போவது? ஏழை மக்களுடைய அரசியல் அதிகாரம் கிட்டினால் தான் அவர்களுக்கென பாடசாலை இருக்க முடியும்"



"பிள்ளைகளுக்கான அணிக்கு பயிற்சிகள் நடக்கின்றன. அவர்களோடு போய்ச் சோர்ந்துகொள்ளுங்கள். அதன் பின்பு நீங்கள் விறகு சேகரிக்கச் செல்லலாம். வாடகையையும் வட்டியையும் குறைப்பது பற்றிக் கலந்துரையாடியபின் பாடசாலை அமைப்பது பற்றி யோசிப்போம்" என்று கிராமத் தலைவரான கூ தாத்தா கூறினார்.

கிழவனுடைய வார்த்தைகளுக்கு வலுவூட்டும் விதத்திலே, சாய் ஆசிரியர், இரும்பனுடைய வயிற்றைச் சுட்டிக்காட்டியபடியே, "தாத்தா சொல்வது சரி. வெறும் வயிற்றோடு எப்படிப்பள்ளிக்குப் போவாய்? ". என்று கூறினார். அது கடினமான அலுவலாகத்தான் இருக்கும் என்று ஒப்புக்கொண்ட இரும்பன் அதற்குப்பின் நச்சரிப்பதை நிறுத்திக்கொண்டான்.

ஒரு நாள் காலையிலே சியாங்சுண் நதிக்கு மேலாக அமைந்திருந்த பாலத்தின் அருகே இரும்பனும், அயல்வீட்டு சிறுமி ஒருத்தியும் விறகு சேகரித்துக்கொண்டிருந்தபொழுது ஒரு மனிதன் கிராமத்திலிருந்து வெளியேறுவதைக்கண்டனர். மெல்லிய கம்பளித் தொப்பியொன்றையும் துணித் துண்டுகளை இணைத்துத்தைக்கப்பட்ட மேலங்கியையும் அணிந்திருந்த அந்த மனிதனது இடுப்பிலே சாக்கு ஒன்று கட்டப்பட்டிருந்தது அக்குளிலும் ஏதோபொருளை வைத்துக்கொண்டிருந்தான்.

இரும்பன் தன் கைகளால் சூரிய ஒளியை மறைத்தபடி கண்களைக்குறுக்கி அது யார் என்று பார்க்கமுயன்றான். "அது ஆசிரியர்சாய் அல்லவா? ஏன் அவர் இப்படி ஆடை அணிந்திருக்கிறார்?" என்று வியப்புடன் கேட்டான்.

அது ஆசிரியர் சாய் என்று அந்த சிறுமி நினைக்கவில்லை. பாடசாலையை ஆரம்பித்து வைப்பதில் ஓய்வொழிச்சலின்றி ஈடுபட்டிருக்கும் அவர் எப்படி கிராமத்தை விட்டுபோக முடியும் என்று அவள்கேட்டாள்.

மென்பனி மூடியிருந்த கோதுமை வயல்களுக்கு அப்பால் உள்ள வீதியில் தரித்துக்கொண்ட அந்த மனிதன், "இரும்பா! கழுகுக் கூட்டு மலைக்குச் செல்லும் பாதை இதுதானா?" என்று உரத்த சத்தமாகக் கேட்டான்.

அந்த மனிதன் ஆசிரியர் சாய் தான். இரும்பன் தன் கூடையைக்கீழே வைத்துவிட்டு, அவரை நோக்கி "சாய் ஆசிரியரே, நீங்கள் ஏன் அங்கே போகிறீர்கள்? திரும்பிவருவீர்களா? என்று கத்திக்கொண்டே ஓடினான். "கட்டாயம் வருவேன்" என்று அவர் பதிலளித்தார். அதைத்தொடர்ந்து கழுகுக்கூட்டுமலைக்கு எப்படிப் போவது என்று இரும்பன் விபரித்தான்.

"பாலத்தைக்கடந்ததும் நீங்கள் பறக்கும் குதிரை மலைக்கு போகும் பாதையில் இருப்பீர்கள். மலைக்கணவாய் ஒன்றின் ஆரம்பத்தில் இருக்கும் பைன் மரம் ஒன்றை காணும்வரை மேற்குத் திசையில் நடவுங்கள். அதற்குப் பின்பு வடக்குத்திசையில் பல குன்றுகளைக்கடந்ததும் நீங்கள் கழுகுக்கூட்டு மலையை அடைவீர்கள். நான் உங்களுக்கு வழி காட்டுகிறேன். கடந்துபோன இளவேனிற்காலத்தின்போது, தாத்தாவுடன் அங்கே வேட்டையாடியிருக்கிறேன்."

பாலத்தை நோக்கி நடந்துகொண்டே ஆசிரியர் சாய், இரும்பனைநோக்கி, "நீங்கள் விறகுகளை சேகரியுங்கள். என்னால் வழியைக்கண்டுபிடிக்கமுடியும்" என்றார்.

கண்களை சிமிட்டிக்கொண்டே சிறிதுநேரம் நின்ற இரும்பன் திடீரென ஆசிரியர் சாய்க்கு அருகே ஓடிப்போய் அவரைக் கட்டிப்பிடித்தபடி "உங்களை நான் போகவிடமாட்டேன்" என்றான். வியப்படைந்த ஆசிரியர் சாய், ஏன் அப்படிச்சொல்கிறாய் என்று கேட்க, அவரை மேலும் இறுகக் கட்டிப்பிடித்துக்கொண்ட இரும்பன், "நீங்கள் போனால் இராணுவத்தில் மீண்டும் இணைந்து விடுவீர்கள், பாடசாலையைப்பற்றி மறந்து விடுவீர்கள்."

(தொடரும்...)

தமிழில்
வி.பி.யோசப்

## மருத்துவம்

# நோய் கிருமிகளை அழிக்கும் மருந்துகளும் குழந்தைகளுக்கான ஒவ்வாமை நோய்களும்

குழந்தைகளுக்கு நோய் கிருமிகளை அழிக்கும் மருந்துகளை கொடுக்கும் போது அவை அவர்களிடையே பல ஒவ்வாமை நோய்களை தோற்று விக்கின்றன. இவ்வாறு அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.



குழந்தை பிறந்த 6 மாதங்களுள் அவர்களுக்கு கொடுக்கின்ற நோய் கிருமிகளை அழிக்கும் மருந்துகளால் அவர்களிடையே ஆஸ்துமா, செல்லப்பிராணிகளால் ஒவ்வாமை, நோய் மற்றும் புற்கள், தூசுகள் ஆகியவற்றால் நோய்கள் உண்டாகவும் வாய்ப்பளிக்கின்றன.

இதனால் குழந்தைகளுக்கு மருந்துகளை சிபாரிசு செய்யும்போது கவனமாக இருத்தல் அவசியமென வைத்தியர்கள் எச்சரிக்கை செய்துள்ளார்கள். சிறுவர்களுக்கு கொடுக்கும் மருந்துகள் அவர்கள் இரைப்பையின் உட்பகுதியின் வளர்ச்சியை பெரிதும் பாதிப்படையச்செய்கின்றது.

பிற்காலத்தில் நோய் ஒன்றிற்கு எதிராக உடலில் சுரக்கும் "ஹோமோன்கள்" நன்றாக செயற்படமுடியாது போய் விடுவதால் பலவிதமான ஒவ்வாமை நோய்களுக்கு உள்ளாகின்றார்கள். இதனால் அம் மருந்துகளை கொடுப்பதை கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும்.

அதிக அளவில் நோய் கிருமிகளை அழிக்கும் மருந்துகளை குழந்தைகளுக்கு கொடுக்கும் போது உடலில் இந் நோய் கிருமிகளுக்கு எதிரான வலுவுள்ள கிருமிகளை தோன்றச் செய்கின்றன. மேலும் இரைப்பையில் மனித உடலுக்கு நன்மை தரக்கூடிய கிருமிகளையும் அழித்துவிடுகின்றன. அமெரிக்க வைத்தியர் டாட்டர் ஜோண்சன் ஆய்வு ஒன்றிற்காக 448 குழந்தைகளை அவர்களின் பிறப்பிலிருந்து 7 வயது வரையானகாலம் வரை ஆய்வுசெய்தார். பிறப்பில் கொடுக்கப்படும் நோய் கிருமிகளை அழிக்கும் மருந்துகள் 49 குழந்தைகளுக்கு கொடுக்கப்பட்டிருந்தன. பின்னால் அவற்றை ஆராய்ந்தபோது சிறு வயதில் நோய் கிருமிகளை அழிக்கும் மருந்துகளை உட்கொள்ளாதவர்களில் "ஒவ்வாமை" நோயின்தாக்கங்கள் காணப்படவில்லை.

# "நோ"

புரிந்துகொள்ள முடியாத ஒரு புதிர்.
நோ-அல்லது 'வலி'யென்பது
ஒரு மனிதனின் வாழ்வில் பல்வேறு
வடிவங்களில் வருகின்றன,
அது சிலவேளைகளில்
மன அழுத்தத்தை ஏற்படுத்தலாம்.
தற்கொலைக்கும் இட்டுச்செல்லலாம்...
ஆகவே 'நோ' என்பது
மனிதனை ஆட்கொள்ள அனுமதிக்கவே
கூடாது.
அதனை துணிவாக எதிர்த்துப்
போராடவேண்டும்.

வலியும், சந்தோசமும் மனிதனுக்கு ஏற்படும் அனுபவங்களாகவே கருதப்படுகின்றன. உடல் ரீதியாகவும், அறிவு ரீதியாகவும் இவற்றை உணர்ந்துகொள்ளமுடியும் சந்தோசம் இனிமையான அனுபவமாகவும் ரசிக்ககூடியதாகவும் அமையும். அதே நேரத்தில் நோ அல்லது வலி என்பது எவரும் விரும்பாத பிரச்சினையாகவும், புரிந்துகொள்ள முடியாத ஒரு மர்மமாகவும் தென்படுகின்றது. சரித்திரத்தின் ஆரம்பத்தில் இருந்தே நோ அல்லது வலி மனிதனை பரபரப்பில் ஆழ்த்தி வந்துள்ளது. தத்துவஞானிகளையும் அதன் பின்னால் உள்ள மர்மங்களை அறியத்தூண்டியது. ஒவ்வொரு மதமும் ஒவ்வொருவிதமான விளக்கங்களைத் தர முயன்றன. 'நோ' என்பது கொடியது. அது அகற்றப்படவேண்டும் என்ற கருத்து மக்கள் மனதில் ஆழமாக பதிந்திருந்தது. விஞ்ஞானம் 'நோ'வை அகற்றுவதற்கு தொடர் முயற்சிகளை செய்து வந்துள்ளது. உடல் ரீதியாக ஏற்படும் நோக்களை அகற்றுவதில் வெற்றியும் கண்டுள்ளது.

ஆனாலும் மனம், இதயம் ஆகியவற்றில் நோ தொடர்ந்தும் மனிதனை துன்புறுத்தியே வந்துள்ளது. இதற்கு பரிகாரமாக போதை வஸ்துக்கள், கொலை மற்றும் மது மூலம் தீர்வு காணமுற்பட்டார்கள். மேலாக தற்கொலை மூலமும் தீர்வுகாண முயற்சி செய்துள்ளார்கள். தத்துவஞானிகள் வலியை வேறுபட்ட எதிர்முனைக் கருத்து நிலையிலேயே நோக்கியுள்ளார்கள்.

மனிதனின் வாழ்விற்கு நோ அவசியம் எனவும் அவர்கள் கருத்து தெரிவித் துள்ளார்கள். வாழ்வது என்பது ஒரு விதத்தில் 'நோ' என்றும் நோ அல்லது வலி அற்ற நிலை என்பது வாழ்வின் முடிவு எனவும் கருதப்பட்டது.

ஒரு மனிதன் தன்னைத் தூய்மைப் படுத்திக்கொள்வதற்கு நோவும் வலியும் அவசியம் எனவும் இதன் மூலம் இயற்கைக்கு மேம்பட்ட நிலைக்கு தன்னை கொண்டு செல்ல முடியும் எனவும் உலக இன்பங்கள் துறந்த சன்னியாசிகளும் துறவிகளும் கருத்துக்கொண்டுள்ளார்கள். இதனால் நோவை தனக்குத் தாமே உருவாக்கிக்கொள்ள முனைந்தார்கள். இதற்காக தமது உயிர் வாழும் நிலையில் இருந்து உயிர் பிழைக்கும் நிலைக்கு தம்மை கொண்டு சென்றார்கள். இதே நேரத்தில் கிறிஸ்தவ மதத்தில் தன்னைத் தியாகம் செய்யும் நிலையை உருவாக்கி மற்றவர்களை காப் பாற்ற முயன்றார்கள்.

ஒரு மனிதனின் வாழ்வில் இவை பல்வேறு வடிவங்களில் வருகின்றன. சில வேளைகளில் மன அழுத்தத்திற்கும், தற்கொலைக்கும் ஒருவரைக் கொண்டு செல்லலாம். அதனால் நோ என்பது மனிதனை ஆட்கொள்வதற்கு அனுமதிக்கக்கூடாது. அதனை துணிவாக எதிர்த்துப்போராட வேண்டும்.






மூன்றாண்டு நினைவில்....



# லெப்.கேணல் சேகர்

சாள்ஸ் அன்ரனி சிறப்புத் தளபதி
(மாயாண்டி ஜெயக்குமார்)
இல.21, யூனியன்குளம், கோணாவில்.

ஈன்றவள் மடியில்
03.04.1975

ஈழத்தாய் மடியில்
23.10.2000

கல்லறையில் கண்துயில் கொள்ளும் காவியமே!
காலமெல்லாம் வாழும் எம் நாயகனே
தாயின் மடியில் தவழ்ந்து
தலைவன் சேனையில் இணைந்து
சாவுக்குள் சரித்திரம் எழுதிய
சாள்ஸ் அன்ரனி சிறப்புச்சேனையின்
வீரத்தளபதியே!
ஈழமதின் விடிவிற்காய்,
ஈகம் செய்திட்ட, உங்கள் உயிரது.
மூன்றாண்டுகள் சென்ற போதும்
உயிர்த்திட்ட உதயமாகியே தெரிகிறது
நித்தம் உங்கள் நினைவோடு நாமிருக்க
உங்கள் வீரச்சரித்திரமே
தமிழீழமதில் உயிர்ப்புடன் மலர்ந்திருக்கும்.
என்றும் எம் இதயக் கோயிலில்
உங்கள் நினைவிருக்கும்.

—குடும்பத்தினர்.

(3114) SM Graphics

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணுலகில்
18 - 11 - 1975



விண்ணுலகில்
06 - 10 - 2002

திதி:26.10.2003

## சோதிலிங்கம் கவிலராசன்

(நட்டாங்கண்டல்)

எங்கள் மனங்களில் நிறைந்துள்ள
அன்புக் கவியே -நீ
எம்மை விட்டுப் பிரிந்து சென்று
ஓராண்டு மறைந்தாலும் -உன்
முகம் நிழலாடுது இங்கே
ஈர விழிகளுடன் உன் செயல்
போராடுது இதயமதில் -உன்
பசுமையான நினைவுகள்
இன்றுபோல் என்றும் நிலைபெற்று வாழும்.

சோ.இதயராசன்
ஆசிரியர்,
அண்ணன்

நட்டாங்கண்டல் (சி-8668)

## 31ம் நாள் நினைவலைகள்

தோற்றம்
25 - 01 - 1978



மறைவு
25 - 09 - 2003

## குணரட்ணம் யூட்சந்திரகாசன் (சந்திரன்)

செல்வபுரம்,முல்லைத்தீவு

அலை தொடும் கடலோரம் -தினமும்
எம் மனதில் நீங்கள் வெகு விரைவில்
திரும்புவீர்கள் என வழி பார்த்தோம்.
காலை புலர்ந்த போது வானலை
தாங்கி வந்தது உங்கள் மரணச்
செய்தி! கேட்டுப் புழுவாய்த் துடி
துடித்தோம் கல்லறை இல்லாத
கடல் மாணிக்கமே!

என்றும் உம் ஆத்மா சாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம்.

குயூட்,
செல்வபுரம்,
முல்லைத்தீவு.

(3715)

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்,உறவினர்.



தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ள தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்

தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்

நியு நிறைஞ்சனாஸ்

ஓடர் நகைகள் குறித்த தவணையில் 22கரட் தங்கத்தில் செய்து கொடுக்கப்படும்.

83/1 கஸ்தூரியார் வீதி, செம்மா தெரு (E.S போரம்பலம் முன்பாக) யாழ்ப்பாணம். T.P.077-6070679



(சி-8570)



# IIS மாபெரும் புலமைப்பரிசில்திட்டம்-2004

விண்ணப்ப முடிவு திகதி:15-11-2003 மாலை 3.00மணி

எமது நிறுவனத்தால் ஆண்டுதோறும் கணனித்துறையிலே ஆர்வமுள்ள மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுவருகின்றன. இத்திட்டத்தின் பிரகாரம் எதிர்வரும் கல்வியாண்டு 2004/2005 இற்கான புலமைப்பரிசில் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தீபாவளி நல்வாழ்த்துக்கள்

புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ள பயிற்சி நெறிகள்

| | |
|---|---|
| Programme 1(**P1**)<br>a.Diploma in Ms Office<br>b.Diploma in Computer Programming | Programme 2(**P2**)<br>a.Diploma in Internet Technology<br>b.Diploma in Computer Programming |
| Programme 3(**P3**)<br>a.Diploma in Internet Technology<br>b.Diploma in Java Programming | Programme 4(**P4**)<br>a.Diploma in Internet Technology<br>b.Diploma in Hardware Technology |
| Programme 5(**P5**)<br>a.Diploma in Ms Office<br>b.Diploma in Visual Basic Programming | Programme 6(**P6**)<br>a.Diploma in Ms Office<br>b.Diploma in Desk Top Publishing |
| Programme 7(**P7**)<br>a.Diploma in Ms Office<br>b.Diploma in Internet Technology | Programme 8(**P8**)<br>a.Diploma in Ms Office<br>b.Diploma in AutoCAD |
| Programme 9(**P9**)<br>a.Diploma Hardware Technology<br>b.Diploma in AutoCAD | Programme 10(**P10**)<br>a.Diploma in Visual C Programming<br>b.Diploma in AutoCAD |

நீங்கள் பெற்றுக்கொள்ளும் புலமைப்பரிசிலை மேற்குறிப்பிட்ட ஏதாவது ஒரு **Programme** ஐ தெரிவு செய்வதனூடாக இரு **Diploma** கற்கை நெறிகளினைக் கற்பதற்கு தகுதியுடையவர் ஆகின்றீர்கள்.

## தெரிவு செய்யும் முறை:

இருவேறுபட்ட முறைகளினூடாக மாணவர்கள் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

### 01) போட்டிப்பரீட்சையின் அடிப்படையில்

இம்முறையின் பிரகாரம் விண்ணப்பிக்கும் மாணவர்கள் புலமைப்பரிசிலைத் தட்டிக்கொள்வதற்கு **IIS** இனால் நடாத்தப்படும் (நுண்ணறிவு/பொதுஅறிவு) போட்டிப்பரீட்சையில் தோற்றுவதன் மூலம் தெரிவு செய்யப்படுவீர்கள்.

### 02) A/L பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில்

இம்முறையின் கீழ் மாணவர்கள் தங்களது A/L பரீட்சை (எவ்வருடத்தில் தோற்றியிருப்பினும்) பெறுபேறுகளினைக்கொண்டு விண்ணப்பிக்க முடியும். மாணவர்களின் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவீர்கள்.

## விண்ணப்பிக்கும் முறை

உங்கள் விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து ரூபா 200 விண்ணப்பக் கட்டணத்துடன்(19 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு விண்ணப்பக் கட்டணம் ரூபா 150 மட்டும்) கீழ்க்காணும் முகவரிக்கு நேரடியாக அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும். காசுக்கட்டளையாக அனுப்ப விரும்புவோர். Director, Institute Of Informatics Studies எனப்பெயரிட்டு பணம் பெறும் நிலையம் Post Office Jaffna எனக் குறிப்பிடவேண்டும்.

விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய முகவரி:

Director,
Institute Of Informatics Studies
100,Clock Tower Road,Jaffna.

விண்ணப்பப்படிவங்களை IIS அலுவலகங்களிலும் யாழ்மாவட்டத்திலுள்ள பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: A/L 2004 பரீட்சைக்குத்தோற்றவுள்ள மாணவர்களுக்காகவே **May** மாதத்தில் விசேட பிரிவு ஆரம்பமாகும்..

போட்டிப்பரீட்சையில் மிகத் திறமையாகச் செயற்படும் மாணவர் ஒருவருக்கு புத்தம் புதிய கணனி (PIV) ஒன்று பரிசளிக்கப்படும்.

சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்!

கணனிக்கல்விக்கு தனித்துவம் மிக்க **IIS** நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

# INSTITUTE OF INFORMATICS STUDIES (IIS)

தலைமை நிறுவனம்:
100,மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
**TP** 021-2222831

Email-IIS@sltnet.lk

கிளை நிறுவனம்:**IIS** -நெல்லியடி
**TP** -2263335

(சி-8571)



# PALM BEACH RESTAURANT

யாழ்.மக்கள் அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்

புதுமையும், பொலிவும், எழிலும் மிக்க முற்றிலும் குளிரூட்டப்பட்ட அருமையான உணவகம்

# பாம் பீச் றெஸ்ரோறன்ஸ்

அனைத்து நிகழ்வுகளுக்கும் ஆதரவுக் கரம் நீட்டி உதவக் காத்திருக்கின்றோம்

பிறந்தநாள் விழாவா? திருமண நிகழ்வா ? விருந்துபசார வைபவங்களா?

இந்தியன் இனிப்பு வகைகள்
குலொப் ஜாமன், ரசகுல்லா, லட்டு, பால் கோவா, மைசூர் பாகு, காஜா, ஸ்வீட் கேக், ஜிலேபி.




உங்கள் திருப்தி தான் எங்கள் நிறைவு
நீங்கள் காணும் மன நிறைவே எங்கள் திருப்தி

PBR

சைவ அசைவ உணவுகள்
இந்திய சமையல் வல்லுநர்களின் கைவண்ணம் தினம் தினம் புது மாதிரி உணவுகள் நல்ல ருசி! நிறைந்த தரம் !



ஒரு முறையல்ல தினமும் விஜயம் செய்து சுவை மிக்க உணவுகளை உருசித்து மகிழுங்கள்

10/11ஸ்ரான்லி வீதி, யாழ்பாணம்
T.P-021-2226634

இல.169,சேர்.பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P-0777-178493

(சி-8572)

# குருகுலம்-பாலர் பூங்கா

சி.சுப்பையன்



அன்றொருநாள் நாம் குரு குலத்துக்கு சென்றிருந்தோம். வழமை யாக குருகுலத்துக்கு, வந்த ஆட்களுடன் போய் அலுவலகத்தில் நாம் விடயத்தை கூறியதும் அவர்களின் பணியாளர் ஒருவர் வழிகாட்டியாக வந்து எங்களைக் கூட்டிக்கொண்டு போய் ஒவ்வொரு பகுதியாகக் காட்டு வார். முதலில் பாலர்கள் பராமரிக் கப்படும் பகுதிக்குப்போவோம். அங்குள்ள குஞ்சுகள் எங்களைக் கண்டதும் 'வணக்கம்' என்று எல்லோரும் ஒத்த குரலில் வரவேற்பார்கள். ஒரு பிள்ளை வந்து கையில் பிடித்து அழைத்துப்போகும். இன்னு மொரு பாலன் வந்து கைகளை விரித்துக்கொண்டு தூக்கச்சொல்லும். இன்னுமொன்று ''என்னுடைய பெயர்........'' என்று சொல்லும். மற் றொன்று "என்னையும் தூக்குங்கோ" என்று அடம்பிடிக்கும். ஆனால், முக் கியமாக,தங்களுக்கு ஏதும் கொண்டு வந்தார்களா என்று கையைப் பார்க்கவோ, " என்ன கொண்டு வந்தீர் கள்?'' என்று வாயால் கேட்கவோ மாட்டார்கள். அத்தனை கட்டுப்பாட்டு டன் வளர்கிறார்கள் அந்த ஒரு வயதுக்கும் ஆறு வயதுக்கும் இடைப் பட்ட குஞ்சுப்பாலர்கள். வந்த பிற நாட்டவரும் அவர்களுடன் கொஞ்சிக் குலாவுவார், படம் பிடிப்பார், அன்ப ளிப்புகள் செய்வார்-பெரிய ஆரவார மாய் இருக்கும்.

அடுத்ததாக அடுத்தமட்டச் சிறு பிள்ளைகளை பார்க்கப்போவோம். அவர்களும் வரிசையாக நின்று வணக்கம் சொல்லி,பெயர்கள் சொல்லி வந்திருக்கும் பிற நாட்ட வருடன் அன்னியோன்யமாகப் பழகு வார்கள். பின்னர், அடுத்த மட்டம். சற்றே வளர்ந்த பிள்ளைகள் வசிக்கும் பகுதிக்கு அழைத்துப்போவார்கள். அவர்களும் வந்தவர்களை வரவேற்று, பாடத்தெரிந்தவர்கள் பாடிக்காட்டி, தங்கள் திறமைகளை வெளிப் படுத்துவார்கள். கடைசியாக வளர்ந்த பிள்ளைகளின் பகுதி. இவர்கள் தரம்7,8 தொடக்கம் க.பொ.த. உயர் நிலை வகுப்புகள் வரை கல்வி கற் கும் பிள்ளைகளாவர். முன்னேற் பாட்டின்படி இவர்கள் அனைவரும் பெரிய மண்டபத்தில் கூடி இருப்பார் கள். வந்த விருந்தாளிகளை வரவேற் பார்கள்: ஆனால் அதற்கு மேல் ஒன்றும் தாங்களாக வாய்திறக்க மாட்டார்கள். வெட்கம்! ஆனால் அமைதியாக இருப்பார்கள்.வந்த பிறநாட்டவர் கேட்டுக்கொண்டால் மட்டும்,பாடத்தெரிந்தவர்பாடியும், பேச்சுவன்மையுள்ளவர்கள் பேசியும், கராட்டி பழகுபவர்கள் (வெளி முற்றத்தில்) கராட்டியின் அடிபிடி அசைவுகளைக்காட்டியும், இப்படி யாக, வந்தவரை உளம் மகிழ வைப்பார்கள். இடையில் குளிர்பானம், கடித்துக்கொள்ள ஏதாவது சிற்றுண்டி பரிமாறப்படும். இதில் பிரதானமாக கவனிக்கவேண்டியது என்ன வென்றால், பிள்ளைகள் எல்லாருமே மிகவும் குதூகலமாக இருப்பார்கள். எல்லோர்முகத்திலும் சந்தோசத் தைக்காணலாம். விட்டுப்பிரியும் போது, ஒவ்வொரு பகுதிப் பிள்ளைகளும் "பாய்,.பாய், போயி ட்டு வாங்கோ!'' என்று எல்லோரும் ஒத்த குரலில் சொல்லி, வழியனுப்பி வைப்பார்கள்.

குருகுலத்துக்கு யூன் மாதம் 9ஆம் திகதி போனதாக ஞாபகம். அதன் பிறகுகொஞ்சநாட்கள் போகவில்லை.நான் முன்புபோன நாட்களில் கவனித்ததில், பாலர்கள் பகுதிக்கட்டடங்களுக்கும் பெரிய பிள்ளைகளின் விடுதிகளுக்கும் இடையில் ஒரே பரந்தவெளியில் பின்னேரங்களில் சிறு பாலன்கள் தங்கள் விடுதிக்குப் பக்கத்தில் இருந்த வெளியில் அங்கொன்று இங் கொன்றாக நின்று இருவர், மூவராகக் கூடியிருந்து கதைசொல்லிக்கொண்டி ருப்பவர்களுமாக ஒரு காட்சியை காணலாம். யாராவது வெளியில் இருந்து வருகைதந்தால்





உசாராக,குதூகலமாக ஓடித் திரிவார்கள்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் பராமரிக்கப்படும் ஏழு சிறுவர் இல்லங்களில் குரு குலமும் ஒன்று. 1960ம் ஆண்டு தொடங்கிய இவ்வில்லத்தில் தற்போது 507பெண் பிள்ளைகள் பராமரிக்கப்படுகிறார்கள். அதேபோல, அங்கிருந்து இரண்டு கி.மீ. தூரத்துக்கப்பால் காந்தி நிலையம் என்னும் (169) ஆண்சிறுவர்களை த.பு.கழகம் பராமரிக்கும் சிறுவரில்லம் ஒன்று உண்டு. இது 1957ல் தொடங்கப்பட்டது.

காந்தி இல்லமும் குரு குலமும் சேர்ந்து ஆண்டு விழாவை கடந்த யூன் 23ஆம் திகதியன்று குருகுலத்தில் கொண்டாடுவதற்கு ஏற்பாடாகியிருந்தது. இதற்கு முதற்கிழமை இரவிரவாக மோட்டர் வேலைசெய்யும் சத்தம்,லொறிகள், வாகனங்கள் போக்கு வரவுச்சத்தம் அருகில் குடியிருந்த எங்களுக்கு கேட்டவண்ணம் இருந்ததுதான். ஆனால் அதை நாம் அதிகமாகப் பொருட்படுத்தவில்லை.எனினும், குருகுலத்துக்கு சில நாட்களாகப் போகாத படியால்,ஆண்டு விழாவிற்கு என்னென்ன ஏற்பாடுகள் செய்திருக் கிறார்கள் என்று பார்ப்பதற்கு மனம் ஏவிற்று. 22ஆம் திகதி பின்நேரமாக அந்தப்பக்கம் போனேன். விடுதிக்குக் கிட்டப்போனதும்,விடுதியை நோக்கிப்போகும் தெருக்களின் இரு மருங்கும் ஒரு புல்லுக்கூட காண முடியாதபடி துப்பரவாக்கியி ருந்தார்கள். இரு பக்கமும் தடிகள் நட்டு அவற்றில் கொடிகளும் தோரணங்களும் தொங்கின.

வழக்கமாகப்போகும் முகப் புக்கேற்றை தாண்டி உள்ளுக்குப் போனேன். உள்ளுக்கும், பெரிய விடுதிகளையும் மைதானத்தையும் பிரிக்கும் பாதையோரம் நீட்டுக்குக் கொடிகளும் நிறக் குமிழ் வெளிச் சங்களும் பிரகாசமாகத் தோற்ற மளித்தன. போய்க்கொண்டே வலது பக்கம் திரும்பிப்பார்த்தேன். பாலர்கள், குழந்தைகள் இவர்களின் விடுதி களைக் காணவில்லை. ஆனால் அதற்குப் பதிலாக அழகான குழந் தைகள் பூங்கா ஒன்று தோற்ற மளித்தது அதிசயமாக இருந்தது. அந்தப்பூங்காவில் பெரியதொரு மாநகரசபை பூங்காவில் காணக் கூடிய அத்தனை விளையாட்டுச் சாதனங்களும் இடம்பெற்றிருந்தன. நிற வெளிச்சக் குமிழ்களும்,தண்ணீர் ஊற்றுத் தொட்டிகளும், இரட்டி னமும், ஸீஸோவும் மலையும் அதில்

சி.சுப்பையன்

வழிந்தோடும் அருவிகளும், மலையி லேறி மற்றப்பக்கத்தால் சறுக்கி வரக்கூடிய அமைப்பும் (Balcony) மேல் வீடும், அதில் ஒருபிரசங்க மேடையும், பூங்காவைச்சுற்றி, குழந்தைகள் தவறி வெளியே போகாதவண்ணம் தடுக்கும் கம்பி வேலியும் (Merry-go-Round) சுழல்வட்டச்சவாரி இவை எல்லா வற்றையும் பாலக வயதுக் குழந் தைகள் என்றபடியால் அவர்களுக் கேற்றவாறு சிறிய அளவுகளில் நிறுவி, குழந்தைகளுக்கும் பார்ப் போருக்கும் மனதில் நிறையக் குதூ கலம் பிறக்கக்கூடியதாகத் தயாரித்து வைத்திருக்கின்றர்கள். நான் இடம் மாறிவந்து விட்டேனோ என்று நினைத்து, பக்கத்தில் நின்ற ஒரு பிள்ளையிடம் குழந்தைகள் விடுதியைக்காணவில்லையே என் றேன். பிள்ளை சிரித்துவிட்டு, "அதோ மாமா, பூங்காவிற்குப் பின்னாலை, எங்கடை விடுதி இருந்த இடத்தி லேயே இருக்குது மாமா" என்று மழலை மொழியில் சொல்லிற்று. பின்னர் கவனமாகப்பார்க்கும் போதுதான் தெரிந்தது மைதானத்தில் பாலர் விடுதிப்பக்கமாக ஒரு காணித்துண்டை ஒதுக்கி இந்தப் பூங்காவை அதில் அமைத்திருக் கிறார்கள் என்று. பார்ப்போர் கண்ணுக்கு ரம்மியமாக இருந்தது. குஞ்சுக் குழந்தைகளுக்கோ அது சுவர்க்கம் போன்றிருந்தது.

இந்தப் பூங்காவின் பெயர் மனமகிழ்வுப்பூங்கா.அடுத்த நாள், 23ஆந் திகதி, பின்நேரம் 3.45 மணியளவில் நண்பருடன் நானும் போனேன். மைதானத்தில் நூற்றுக் கணக்கான கதிரைகள் அடுக்கியிருந் தார்கள். சற்றுத்தூரத்தில் சிறிய மேடையும் அதைச்சுற்றி பந்தலும் அமைத் திருந்தார்கள். இப்பந்தலுக்கும் அடுக் கியிருந்த கதிரைகளுக்கும் இடையில், புற்றரையில் பாய்களும் விரிப்புக்களும் பரவிவிரிக்கப்பட்டி ருந்தன. பார்வையாளர்கள் எல்லோ ரும் கதிரைகளில் அமர்ந்துவிட் டார்கள். சுமார் 4.00 மணியளவில், சின்னஞ்சிறு பிள்ளைகள் சீருடையில் பின்னுக்கிருந்து ஒருவர்பின் ஒரு வராக வரிசையில் வந்து மேடைக்கு அண்மையில் இடது பக்கமாக அமர்ந்தார்கள். அடுத்து அதற்கு அடுத்த மட்டப்பிள்ளைகள் சீருடை யில் பவனி வந்து சிறு குழந்தை களுக்குப் பின்னால் அமர்ந்தார்கள். மேடைக்கு அண்மையில், மற்றப் பக்கத்தில் பாரதி இல்லத்தைச் சேர்ந்த (பெண்) பிள்ளைகள் சீருடை யில் வரிசையாக வந்து வலது புறம் அமர்ந்தார்கள். அடுத்து காந்தி நிலையத்தைச் சேர்ந்த சிறார்கள், சிலர் சீருடையிலும், மற்றையோர் வழ மையான உடையிலும் வரிசையாக வந்தார்கள். அவர்களில் சிலர் தரையிலும் ஏனையோர் பக்கத்தில் நின்றும் காட்சிகளைப் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தார்கள்.

அன்றைய நிகழ்ச்சிகளில் குருகுலத்திலிருந்தும், காந்தி நிலையத்திலிருந்தும் வந்த சிறார் களின் மேடைப்பேச்சுக்கள், நாட கங்கள்,பாட்டுக்கள், கராட்டி அம் சங்கள் முதலியனவும், வருகைதந்த பிரமுகர்களின் உரைகளும், வெவ் வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற பிள்ளைகளுக்கு பரிசளிப்புகளும், இப்படி பற்பல நிகழ்ச்சிகளை ஒழுங் குபடுத்தி அழகாக நடாத்தி முடித் தார்கள் பொறுப்பாளர்கள். பிற்பகல் 4.00 மணியளவில் தொடங் கிய நிகழ்ச்சிகள் இரவு 1.00மணி வரையும் தொடர்ந்தன. இருந்தும் சபையோர் எவரும் கலைந்து போகா மல் அவற்றை ரசித்தபடி அமர்ந்தி ருந்தார்கள். நிகழ்ச்சிகள் முடிந்ததும், பிள்ளைகளின் திறமைகளை மெச்சியபடி எல்லோரும் வீடு திரும் பினார்கள்.

எனது மனமோ திருப்திப் படவில்லை . பார்வையாளர்கள் மட்டும் பிள்ளைகளின் திறமை களைக் கண்டு ரசித்து விட்டுப்போவ தற்காகவல்ல இந்தப்பூங்காவை உண்டாக்கினவர்களின் நோக்கம். குழந்தைகளின் சந்தோஷமும் அவர்கள் தங்களை மறந்து ஆனந் தத்தில் மூழ்கியிருக்கவேண்டும் என்பதே இப்பூங்காவை நிறுவி யவர்களின் பிரதான குறிக்கோளாகும். அவர்களுடன் பேசியபொழுது இது புலனாயிற்று. ஆகவே, ஆண்டு விழா விற்கு அடுத்த நாளும், அதற்கடுத்த சில நாட்களும் ஒழுங்காகப் பின்நேரங் களில் பூங்காப்பக்கம் நான் போகத் தவறவில்லை. அப்போது நான் கண்ட காட்சிகள் என்னைப் பிரமிக்கச் செய் தன. குழந்தைகளின் குதூகலமும், உலகையே மறந்து அவர்கள் அந்த விளையாட்டு சாதனங்களில் ஏறியும், சறுக்கியும், சுழன்றும், சிரித்தபடி விளையாடியதையும் பார்த்துப்பார்த்து ரசித்தேன். குழந்தைகளுக்கு மட்டு மல்ல, அங்கு செல்லும் பார்வையா ளருக்குமே பிள்ளைகள் அனுபவித்த இன்பம் மன நிறைவைக் கொடுத்தது. இந்தப் பூங்காவையும் குழந்தைகள் விளையாடுவதையும் பார்த்த எல்லோ ருமே வியந்தார்கள். இது பிள்ளை களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்று புகழ்ந்தார்கள்.

எந்த நல்ல திட்டத்திற்கும் ஒரு பின்னடைவு இல்லாமலில்லை அல்லவா! திட்டமும் தீட்டி, தீர்மானம் எடுத்தாகிவிட்டது. ஆனால் நடை முறைச்சிக்கலும் கூடவே வந்தது. அது தான் பணக்கஷ்டம் மொத்தச் செலவுத்தொகை மதிப்பீட்டிலும் பார்க்க செலவு அதிகமாகிவிட்டது.

இனி என்ன செய்வது தொடங்கிய காரியம் ஒப்பே றத்தானே வேண்டும். கையிருப் பைப்பாவித்துத் தொடங்கினார்கள். கைமாற்றாக வாங்கிக் காரியத்தை முடித்துவிட்டார் கள். ஆறு லட்சத்துடன் முடிக் கலாமென்று தொடங்கியது பத்து இலட்சத்தை தாண்டி விட்டது. காரியம் முடிந்தது. குழந்தை களுக்கும் மற்றையோருக்கும் மனமகிழ்ச்சி. ஆனால் கைமாறிய தொகைக்குக் கைகொடுப்பார் யார்? உறவுகளை இழந்த குழந்தைகள் மேல் அனுதாபம் உள்ளவர்கள் கரிசனை கொள்வார்களா?





அனைவருக்கும் எமது
தீபாவளி நல்வாழ்த்துக்கள்

- சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகள்
- கூறைச் சேலைகள்
- பட்டு வேட்டிகளுக்கு

யாழ்நகரில்
கைராசியான நிறுவனம்

சீமாட்டி புடைவைக்கடல்

122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021-2222196

[சி-8582]

InfoLand
COMPUTER SYSTEM
இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்

தொழில்புரிவோர், பாடசாலை மாணவர்கள்,
வெளியிடங்களில் இருந்து வருவோர்
நலன் கருதி
சனி, ஞாயிறு தினங்களில்
பிரத்தியேக புதிய பிரிவுகள் ஆரம்பம்
25-10-2003 சனிக்கிழமை

Training Division
Hardware Division
Info Pro-Printers
Info CD Dark
Info Visual Media
Info Developers

E-Mail : infoland@sltnet.lk
Tel : 024-2220112
Our Ambition is your success
#66, Station Road,
Vavuniya.

[சி-8707]

தீபாவளி நல்வாழ்த்துக்களைத்தெரிவித்துக்கொள்ளும்

தில்லையம்பதி மோட்டோர்ஸ்

GREAVES LIMITED



AGENTS FOR - GREAVES, SPARE PARTS
விவசாய நீர் இறைக்கும் இயந்திரம், மின்சார நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்கள்.



(மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்)

தில்லையம்பதி மோட்டோர்ஸ்



இல 236, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P. 021-222 2488, 021-2223820

[சி-8581]


# 7ம் ஆண்டு நினைவுப்பகிர்வு...



வீரப்பிறப்பு
10.10.1964



வீரப்பிறப்பு
17.04.1966



தறுக்கர் அழிப்பில் 26.10.1996

விடுதலைப் புலிகளின் அனைத்துலக நிதிப் பொறுப்பாளர்
**லெப் கேணல் நாதன்**
பேரின்பநாதன் கந்தையா
அரியாலை

ஈழமுரசு ஆசிரியர்
**கப்டன் கஜன்**
கஜேந்திரன் கந்தையா
கோண்டாவில்

மலர் வதனத்தில் மருவிய சிரிப்பும்,
நெஞ்சில் ஊடுருவும் பாசக் கணையும்,
தாயகக் காதலில் தணியாத் தாகமும்,
களைப்புறாப் பணியும்,
மெய் வருந்தப் பொறித்த தடமும்,
இன்றும் இன்னும் பழுதுபடாமல்
எம்மிடையே எம்முள்ளே...

அனைத்துலகத் தொடர்பகம்.

[சி-8706]

தீபாவளித்திருநாளில்
அனைவருக்கும் எமது நல்வாழ்த்துக்கள்!

TVS Lanka Private Ltd. இன்
அங்கீகரிக்கப்பட்ட (3S)
யாழ் முகவர்




சுசுக்கி ரேடர்ஸ்

இல:-59 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-8553)

அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
தீபத்திருநாள் நல்வாழ்த்துக்கள்!

HERO HONDA
World No. 1
Two-Wheeler Company

STAFFORD MOTOR CO-LTD இன்
அங்கீகரிக்கப்பட்ட
(3S) யாழ் முகவர்

RG இரத்தினகோபால்ஸ்

இல:-63, 65 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

TP-0777-340056
021 222-6185

HERO HONDA 2 Year warranty

கலையம்சத்துடன்
வடிவமைக்கப்பட்ட பைக்




(சி-8554)

HERO HONDA
World No. 1
Two-Wheeler Company

வவுனியா நகரில் HERO HONDA வகை
மோட்டார் சைக்கிள்களின்
அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளராக விளங்கும்
என்.எஸ் இரத்தினம் & சகோதரர்கள் தமது
அன்பிற்குரிய அனைவருக்கும் தீபாவளி
நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றனர்.

Street
Splendor
CBZ
PASSION
AMBITION

# என்.எஸ்.இரத்தினம் & சகோதரர்கள்

இல:-06, முதலாம் குறுக்குத்தெரு,
வவுனியா.
☎024-2221237

HERO HONDA
CD100
Dawn
CD100SS




HERO HONDA 2 Year warranty

(சி-8552)

# எங்கள் மண்ணின் மாண்பு

சிதம்பரதிரு

பொருண்மியத்தடை நீக்கப்பட்ட ஒரு சூழ்நிலையில் நாங்கள் இப்போது வாழ்கின்றோம். பொருண்மியத்தடை இருந்த காலத்தில் அதனால் எங்களுக்கு நெருக்கடிகள் மாத்திரம் உருவாகவில்லை.



மாறாக அந்த நெருக்கடிகளுக்கு சில தீர்வுகளும் கிடைத்தன. பஞ்சு விளக்கும், சைக்கிலில் சில்லுச்சுற்றி ரேடியோ கேட்பது போன்ற பல விடயங்கள்.

அதுமாத்திரம் அல்ல நெருக்கடிகளை, கஸ்டங்களை எதிர்கொள்ளவும், அவற்றுடன் மோதி வாழவும் பழகிக்கொண்டோம். உறுதியான மனோதைரியமும்கிடைத்தது.

இத்தகைய நல்ல பேறுகளைநாங்கள் தொடர்ந்து பராமரித்துவந்தால் எக்காலத்திலும் நாங்கள் தலைநிமிர்ந்து வாழமுடியும்.

உள்ளூர் மூலவளங்களைப் பயன்படுத்தி உள்ளூரில் உற்பத்தியாகும் பொருட்களை நாங்கள் போற்றவும், பாவிக்கவும், அவற்றின் விற்பனைகளை மேம்படுத்தவும் முனையவேண்டும்.

எமது பிரதேச உற்பத்திகளான மாம்பழம், திராட்சை, தக்காளி போன்ற பழங்களில் இருந்து ஜாம், பழக்கூட்டுக்கள் தயாரித்தல்.

சிறுதானியங்கள், கிழங்கு வகைகள், ஆகியவற்றை உபயோகித்து பிஸ்கட் வகைகள், இனிப்புவகைகள் ஏனைய உணவுப்பொருட்கள் தயாரித்தல்.

உரிய சந்தைவாய்ப்பு இன்றி வன்னிப்பகுதியில் விரயமாகும் பாலை மூலப்பொருளாகக் கொண்டு பாற்பொருட்கள், யோக்கட், பட்டர், நெய், இனிப்புப்பொருட்கள் தயாரித்தல்.

இன்னும், தென்னை,பனை போன்றவற்றை உக்கிரமாகப் பயன்படுத்தி அவற்றில் இருந்து கிடைக்கக்கூடிய உற்பத்திப்பொருட்கள் பெற்றுக்கொள்ளல்.

என எவ்வளவோ விடயங்கள் உள்ளன. புதிய உற்பத்தி முயற்சியாளர்கள் இது தொடர்பாக சிந்திக்கவேண்டும்.

# பொருண்மிய வாசல்

## “வன்னி சுரபி” பால்பதனிடல் நிலையம்

எமது பிரதேசத்தைப் பொறுத்தவரையில் விவசாயமும் விலங்கு வேளாண்மையும் ஜீவாதாரத்தொழிலாக விளங்குகிறது. விலங்கு வேளாண்மையைப் பொறுத்தவரையில் மாடு வளர்ப்பே பெரும்பாலான மக்களால் மேற்கொள்ளப்படுகிறது. பால் உற்பத்தி. மாட்டெரு. இறைச்சித்தேவை பூர்த்திசெய்யப்படல் போன்ற பல்வேறு பயன்களை மக்கள் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

வன்னியைப் பொறுத்தளவில் அனேகமாக எல்லா வீடுகளிலும் பால் உற்பத்தி சிறிய அளவிலாவது நடை பெறு கின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 15000 இற்கும் மேற்பட்ட பால் தரும் பசுக்கள் உள்ளன. அவ்வாறே முல்லைத்தீவு மாவட்டத்தில் 20250 பால்தரும் பசுக்கள் உள்ளன. இப்பசுக்களில் இருந்து ஆண்டு தோறும் 2 இலட்சம் லீற்றர் பாலுக்கு குறையாமல் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் இம் மாவட்டங்களில் போதியளவு பால் சேகரிப்பு நிலையங்களும் பால்பதனிடல் முறைகளும் இல்லாமல் பெருமளவு பால் வீணாகிக் கொண்டிருக்கிறது. இதனால் மக்கள் தமது வருமானத்தை இழக்கும் நிலை காணப்படுகின்றது. சில வீடுகளில் 5லீற்றர் பால் பெறக்கூடியதாய் இருந்தபோதும் தமது தேவைக்கு மட்டும் ஏற்றளவில் குறைவாக எடுத்துக்கொண்டு மிகுதியை அப்படியே விட்டுவிடும் செயற்பாட்டையும் காணக்கூடியதாக உள்ளது.

இதனைக் கருத்தில்கொண்டு பொருண்மிய மதியுரையகம் முல்லைத்தீவு மாவட்டத்திலும். கிளிநொச்சி மாவட்டத்திலும் பால்பதனிடல் நிலையங்களைத்திறந்துள்ளது. முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புப் பகுதியில் “அருச்சுனா பால் பதனிடல்” நிலையம் ஏற்கனவே திறக்கப்பட்டுவிட்டது.

இவை இரண்டினதும் நோக்கங்களாவன.. உற்பத்தியாகும் பாலை விரயமாகாமல் பயனுள்ள முறையில் பதனிடல்.

மக்களின் போஷாக்கு மட்டத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு வழங்குதல்.

மக்களின் வருமானத்தை அதிகரித்து வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல்.

இராசா தங்கவேல்

இதன் அடிப்படையில் இந் நிலையத்தை முதன்மைப்படுத்தி வேறு கிளைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கிளி.மாவட்டத்தில் வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையில் இயங்கும் வன்னி சுரபி ஆனது அமெரிக்காவில் உள்ள பொருண்மிய மதியுரையகம் (ரெக்) கிளையின் ஊடாக 22 இலட்சம் ரூபா. அன்பளிப்பைக் கொண்டு கட்டடங்கள் புனரமைக்கப்பட்டு தொழிற்சாலைக்கான ஒரு பகுதி உபகரணங்களும் கொள்வனவு செய்து ஆரம்பிக்கப்பட்டது.

இதேபோல் சுவிசில் உள்ள பொருண்மிய மதியுரையகம் (ரெக்) கிளையின் ஊடாக 10 இலட்சம் நிதியுதவியில் இன்னொரு தொகுதி உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் திட்டத்திற்கான நடை முறைச் செலவிற்கும் இந் நிதி பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையத்தில் உற்பத்தியாகும் பொருட்களுக்கான 500லீற்றர் பாலில் 100 லீற்றர் பண்ணையிலுள்ள பசுக்கள் மூலம் கிடைக் கின்றது. மிகுதிப்பால் மக்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்படுகிறது.

இங்கு தயிர், யோக்கட். பால்கோவா. நெய். சுவையூட்டப்பட்ட பால் போத்தலில் அடைக்கப்பட்ட பால். ஜெலி.பட்டர் போன்ற பல்வேறு உணவுப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.

உற்பத்தி செய்யப்படும் பாலை கிளிநொச்சி. வட்டக்கச்சி. யாழ்ப்பாணம். முகமாலை. முறிகண்டி. புளியங்குளம் ஆகிய பிரதேசங்களில் விநியோகம் செய்யப்படுகிறது.

இவ்வாறு பல்வேறுபட்ட சுவைமிகு உற்பத்திப் பொருட்களைத் தயாரித்துக்கொண்டிருக்கும் வன்னி சுரபியானது மேலும் உற்பத்திகளைப் பெருக்கத் திட்டமிட்டுள்ளது. இன்னும் பல இடங்களிலும் இந் நிறுவனங்களை நிறுவி இச்சேவையை பிரதேசம் எங்கும் விஸ்தரிப்பதைநோக்காகக் கொண்டுள்ளது. (சி-8290)

# உருவமா? உள்ளடக்கமா?

## இலக்கியப்பகிர்வு

சிறுகதையாளனின் உள்ளத்தில் இருந்து பிறப்பது உள்ளடக்கம். அவனது படைப்பின் அடித்தளம் அதுதான். தன்னில் இருந்து பீறிட்டுக் கிளம்பும் தன் மன உணர்வுகளை வெளியீட்டை அவன் வெளிக்கொண்டு வரும்போது அதுவே அவனது படைப்பின் உள்ளடக்கமாகின்றது.

அந்த உள்ளடக்கத்தை அப்படியே கிள்ளித்தெளிக்கவோ. அள்ளிக் கொட்டவோ முடியாது. தலையணை பஞ்சுக்கு ஒரு தலை உறை தேவைப்படுமே அது போலத்தான் இங்கு உள்ளடக்கத்திற்கு உருவம் தேவைப்படுகின்றது.

முதுபெரும் எழுத்தாளரான சங்கர்ராம் அவர்கள் கிட்டத்தட்ட நாற்பத்திநான்கு வருடங்களுக்கு முன்னால் தெரிவித்த கருத்துக்கள் சிலவற்றை இங்கு பார்ப்போம்.

“உருவம் இல்லாமல் கலைஞன் இருக்க முடியாது. என்பது உண்மை தான். விஷயப் பரிமாறுதலுக்கு அது அவசியமானது தான். வாசகன் உள்ளடக் கத்தை உணர்ந்து பதிக்கச் செய்ய அது ஒரு முக்கிய இயக்கசாதனம் (ஏஜன்சி) என்பதில் சந்தேகம் இல்லை ஏதாவதொரு உருவம் இல்லாமல் கலைஞன் எதுவும்செய்ய முடியாது. ஆனால் உருவம்தான் எல்லாம் என்பதும் கிடையாது. சொத்தையான உள்ளடக்கத்துடன் கூடிய ஒரு சத்தான உருவம் உபயோகமற்றது. தெரிவிப்பதற்கு அதில் எதுவும் இல்லை. அதன் நோக்கமும் வெற்றிபெறாது. உயிர்ப்பு இல்லாத அழகிய உடல் போன்றது அது. ஆனால் உலகப் பொதுவான மனித இயல்பையும் உணர்ச்சிகளையும் கையாளும் சிறந்த உள்ளடக்கம் உருவக் குறைவு வாய்ந்ததாக இருந்தாலும் வெற்றி பெறவாய்ப்பு இருக்கிறது.”



“உள்ளடக்கத்தை பயன்பட தெரிவிப்பதற்கு உருவம் இன்றியமையாதது என்பது அறியப்பட்டிருக்கிறது. என்றாலும் டால்ஸ்டாய் சொல்கிறபடி பிறருக்குப் படவைத்தல் ஒரு தொற்று வியாதி போன்றது. உருவகங்களின் வீதமும் அதன் வளர்ச்சித்தரமும் எழுத்தாளனது திறமைக்கு ஏற்ப வேறுபடலாம். இனித்த பாலை ஒரு இளவரசன் தங்கக் கிண்ணத்தில் சாப்பிடலாம். ஒரு ஏழை கிராமவாசி அதே காரியத்துக்கு ஒரு மொந்தையை உபயோகிக்கலாம். பாண்டங்கள் வேறானாலும் இரண்டு நிலைகளிலும் பால் பாலாக இல்லை என்று ஆகிவிடவில்லை.”

சிறுகதையாளன் தன் வெளியீட்டை வெளியீடாக ஒழுங்கமைக்கும் முறையே உருவம். எனவே அங்கள்ராம் அவர்கள் குறிப்பிட்டது போல் படைப்பாளிக்குப் படைப்பாளி அதன் தன்மை மாறுபடுகிறது. அதுபோலவே காலமாற்றத்திற்கு ஏற்பவும் உருவமும் மாறுபட்டுவருகின்றது/வரும்.

படைப்பில் உருவம் ஒரு முக்கிய இடத்தை வகிக்காத தன்மையாக இருந்திருந்தால் இத்தகைய மாற்றத்துக்கு பெருமளவு இடம் இருந்திருக்காது.

சமூக. பொருளாதார. அரசியல் மாற்றங்களுக்கு ஏற்ப எத்தனையோ வகை இலக்கியப்போக்குகள் தோன்றி அவற்றுக்கு ஊடாக வடிவத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் மூலம் இதனை அறிந்து கொள்ளலாம்.

நவீனத்துவம். பின்நவீனத்துவம். மாந்திரீகயதார்த்தவாதம் எனக் கண்ட மாற்றங்கள் எல்லாம் இவற்றுக்குக் காரணமாயிற்று

எனவே உருவமும் உள்ளடக்கமும் ஒன்றை ஒன்று பிணைத்துக் கொண்டு தம்மளவில் சரியான விதத்தில் தம்மைப் பங்குபோட்டுக்கொண்டு படைப்பாக /சிறுகதையாக வெளிப்படுத்த வேண்டும் என்பது உண்மையானது.

“உருவமா? உள்ளடக்கமா? காலம் காலமாக சிறுகதை எமக்கு அறிமுகமான காலத்தில் இருந்து வாதப்பிரதிவாதங்கள் நடந்துவந்தன. எமது நாட்டிலும் அது சிலகாலம் சர்ச்சைகளை உண்டாக்கியது.

எமது விடுதலைப்போராட்ட எழுச்சியினால் அள்ளுண்டுபோன பல் வேறு சங்கதிகளில் இவ்வாறான இலக்கிய தர்க்கங்களும் (சில பயனுள்ள. சில தேவையற்ற) காவுகொள்ளப்பட்டுவிட்டன.

உருவம் முக்கியப்பட வேண்டும் என்றும். உள்ளடக்கம் தான் முக்கியப்படவேண்டும் என்றும். அதனையே மறுவழமாக கலை கலைக்காக என்றும். கலை மக்களுக்காக என்றும் கொடி பிடித்து ஒரு பக்கம். மறுபக்கம் அடித்துக் கொண்டார்கள்.அவ்வாறு அடித்துக் கொண்டவர்கள் தங்கள் தங்கள் தரப்பாரை தடவிக்கொடுத்துக்கொண்டே இதனைச் செய்தார்கள். இதன் முரண் என்னவெனில் எதிர்ப்பக்கத்திற்கு சாட்டையை வீசியபடி அதேதவறைச் செய்யும் தமது தரப்புக்கு சாமரை வீசினார்கள். இது தொடர்பாக ஆராய வேண்டியது இங்கு அவசியமில்லை.

உருவம் உள்ளடக்கத்துடன் தொடர்புடைய இவ்விடயங்களை எமது இலக்கிய வரலாற்றுடன் தொடர்புபடுத்தி சம்பந்தப்பட்டவர்களின் கருத்துக்களுடன் சேர்த்து பார்ப்பதன் மூலம் சில தகவல்களை நாம் பெற்றுக்கொள்ளலாம் என நினைக்கின்றேன்.

“கடந்தகாலங்களில் உள்ளடக்கத்திற்கு அழுத்தம் கொடுக்கப்பட்டதால் உருவம் புறக்கணிக்கப்பட்டு வரட்சியான படைப்புக்கள் பெருகிவிட்டன. இனிமேல் உருவம் போன்ற அழகியல் அம்சங்களுக்கு நாம் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற கருத்துப்பட ஈழத்து இலக்கிய உலகின் தலைமைக்காரர் சிலரும் வேறு பலரும் சமீப காலங்களில் சொல்லத்தொடங்கியுள்ளனர். காலங்கடந்தாயினும் இந்த ஒப்புதல் வாக்குமூலம் வரவேற்கத்தக்கது. என்றாலும் இதில் பாதி அளவுதான் உண்மை. கடந்தகால வரட்சிகளுக்கு உருவம் புறக்கணிக்கப்பட்டமை மட்டுமல்ல உள்ளடக்கத்தின் வரையறுப்புக்களும் காரணமேயாகும். கலை இலக்கியம் என்பன எல்லாமே அனுபவ வெளிப்பாடு என்ற அடிப்படை மறக்கப்பட்டு அவையெல்லாம் வெறும் பிரசாரக்கருவிகள் என்ற கருத்து ஒப்புக் கொள்ளப்பட்டதால்.

“எரிகிற பிரச்சினைகள்”. “சமூகப் பெறுமானம்”, “செயலுக்குத் தூண்டுதல்” என்ற சுலோகங்களுக்கு மட்டும் பொருந்துவதாக பொருள் வரையறை பெற்றது. இதற்கு அப்பால் இலக்கியத்தின் பொருள்கள் இருக்கமுடியாது எனச்சொல்லப்பட்டது. முற்போக்கு இல்லாதவையெல்லாம் பிற்போக்கானவை என்ற பிழையான கருத்து முன்வைக்கப்பட்டன. நட்பு. காதல். அழகியல் உணர்வு என்பன இலக்கியத்தில் தீண்டாமைக்குரியன என ஆகின. சொந்தவாழ்வில் காதலித்துக்கொண்டே அதனால் தவிப்புற்றுக்கொண்டே இலக்கியத்தில் மட்டும் தத்துவத்தாலும் போர்க் குணத்தாலுமாய மனிதர்களைப் போன்ற பாவனை காட்டுதல் எல்லாம் நிகழ்ந்தன. வாழ்வில் உள்ளது கலை இலக்கியத்தில் மட்டும் ஏன் வெளிப்பாடடைய முடியாது? குறித்த தனிமனித உணர்வுகளுக்கு உட்படுவதையோ வெளிப்படுத்துவதனையோ ஒப்புக் கொள்ள வெக்கமுறுபவர்களுக்கு ரஷ்யதிரைப்பட இயக்குநரும் கவிஞருமான அலெக்சாண்டர் தொல்ஹன்கோ சோவியத் எழுத்தாளர்களின் இரண்டாவது காங்கிரசில் பேசிய சில வாசகங்களைச் சமர்ப்பிக்கலாம்.

“உங்களைப் போலவே நானும் மக்களை நேசிக்கிறேன். மக்களுக்குப் பணியாற்றுவதில்தான் என் சொந்த வாழ்க்கைக்கு அர்த்தம் இருக்கிறது என்பதை நான் உணருகிறேன். நான் அனைத்து தேசங்களுக்கிடையே சகோதரத்தின் வெற்றியை நம்புகிறேன். கம்யூனிசியத்தை நம்புகின்றேன். ஆனால் செவ்வாய் கிரகத்தை வெற்றிகொள்ளும் முதற் பயணத்தில் என் அன்புக்குரிய சகோதரனோ. மகனோ பிரபஞ்சவெளியில் எங்கோ ஓரிடத்தில் மரணத்தைத் தழுவ நேர்ந்தால் அந்த இழப்பின் கஷ்டங்களை வெற்றிகொண்டு விட்டேன் என்று சொல்ல மாட்டேன். என் துயரத்தைதான் அவர் அவர்களுக்குச் சொல்லுவேன். அந்த பிரபஞ்ச வெளிகளை நான் சபிப்பேன். இரவு முழுவதும் எனது தோட்டத்தில் அமர்ந்து பூத்துக்குலுங்கும் செரியின் மேல் உள்ள வானம்பாடிகள் அஞ்சி விடாமல் இருப்பதற்காக அதன் கீழ் முத்தமிட்டுக் கொள்கிற காதலர்களுக்கு இடையூறு இல்லாமல் இருப்பதற்காக எனது விம்மல்களை தொப்பியினால் மறைத்துக்கொண்டு நான் அழுது கொண்டிருப்பேன்.

மேல் சொன்ன வரிகள் 1977இல். அ.யேசுராசா அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் ஆகும்.

சிதம்பரன்

# அனுமார் பதில்கள்



● **அனுமாரே! பல ஆண்கள், ஒரு பெண்ணைக் காதலித்துக் கொண்டு பல பெண்களைப் பார்த்து கண் அடிக்கிறார்கள் ஏன் அனுமாரே.**

சுஜி,
கோம்பாவில்.

பல பெண்களைக் காதலித்துக் கொண்டு ஒரு பெண்ணுக்கு கண்ணடிக்கும் அளவுக்கு இன்னும் அவர்கள் கெட்டவர்கள் ஆகவில்லை.

● **அனுமாரே! நம் நாட்டு வளங்களை அயல் நாட்டுக்கு அன்பளிப்புச்செய்ய நினைக்கும் அம்மையாருக்கு இதன் பின் விளைவைப் பற்றி சற்று கூறுங்கள்.**

க.புஸ்பா,
புளியங்குளம்.

அம்மையாரே தயவு செய்து நிறுத்துங்கள். உங்களைத் தட்டிக்கேட்கமாட்டார்கள் எங்களிடம் தான் கேட்டுக் கழுத்தறுப்பார்கள்.

● **அனுமாரே! ஒரு பெண்ணின் மனம் ஆழும் என்று சொல்லுகின்றார்களே. சொல்லுங்கள் பார்ப்பம்.**

த. சேம்,
உடையார்கட்டு.

விழுந்தவர்களால் எழ முடிவதில்லை. எழுந்தவர்கள் யாரையும் விழவிடுவதில்லை.

● **வணக்கம் அனுமாரே! தலைவர் வந்து உமக்கு என்ன வேண்டும் என்று கேட்டால் முதலில் என்ன கேட்பீர்.**

கே.வசந்தி,
யாழ்ப்பாணம்.

எங்களைவிட வேறு யாருக்கும் நீங்கள் தலைமை தாங்கக்கூடாது என.

● **அன்பின் அனுமாரே! அரச அலுவலகங்களில் சக்தி F.M. கேட்டுக் கொண்டிருக்கும் உத்தியோகத்தர் பற்றி தங்கள் கருத்து?**

க.ஓயிவன்,
செம்மலை.

அதற்காக அவர்கள் 'அலவன்ஸ்' கேட்காததே பெரும் காரியம் என்று அரசு மனம்ஆறுகிறது.

● **அனுமாரே! "அன்னையும் பிதாவும் பின்னுக்கு இடைஞ்சல்" என்று கூறுபவர்கள் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்.**

மா.யேசுராணி,
வள்ளிபுனம்.

இவர்கள் முன்னுக்கே இடைஞ்சலாக இருபார்கள்.

● **அனுமாரே! விபத்துக்களுக்கு நீதியில்லை என்கிறார்கள். அது உண்மையாக இருக்குமா?**

கேசவன்.

ஆனால் நீதிக்கு எங்கும் விபத்துக்கள் நிகழ்கின்றனவே!

● **அனுமாரே! காதலைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

இ.நிஷா,
முரசுமோட்டை.

விழாவிட்டால் மோகம்.
விழுந்துவிட்டால் சோகம்.
மீண்டுவிட்டால் யோகம்.

● **சிகல உறுமய குரங்குப் பாஞ்சானை துவசம் செய்யப்போகிறது என்று தென்னிலங்கைப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டனவே. அவர்கள் மறுபடி வருவோம் என்று சொல்லிவிட்டு வாலைச் சுருட்டிக்கொண்டு போய்விட்டார்களே!**

சுதன்,
திருமலை.

சண்டியர்கள் எல்லோரும் கொடுக்குக் கட்டுவார்கள். கொடுக்குக் கட்டுவதனால் மட்டும் சண்டியர்களாகிவிட முடியுமா?

● **அன்பின் அனுமாரே! புலிகள் இடைக்கால நிர்வாக சபைக்குப் போய் விட்டார்களே அனுமாரே!**

ராயு,
செட்டிகுளம்.

மழைக்கால் இருட்டெண்டாலும் மந்தி கொப்பிழக்கப் பாயாது.

● **அன்பின் அனுமாரே! கிடைக்கும் என்பார் கிடைக்காது. கிடைக்காதென்பார்கள் கிடைத்து விடும். உதாரணம் ஒன்று சொல்லுங்களேன்.**

கந்தையா,
கரவெட்டி.

முதலாவதுக்கு இடைக்கால நிர்வாக சபையையும்.

இரண்டாவதுக்கு தனிநாட்டையும். பொருத்திவிடுவோமே.

● **வணக்கம் அனுமாரே! கல்யாணத்திற்குப் பின்னர் கட்டிய மனைவியை காதலி என்று சொல்கிறார்களே. இது சாத்தியப்படக்கூடிய விடயமா?**

எ.நிலக்சி,
கிளிநொச்சி.

கல்யாணத்துக்கு முன்னர் வேறொருவர்கட்டிய மனைவியை காதலிக்கப்போனால்....தப்புவது சாத்தியமில்லைத்தானே. அதுதான் முன்னது சாத்தியம் என்கிறார்கள்.

● **அனுமாரே! புலிகளின் எந்தவொரு தாக்குதலையும் முறியடிக்க நாம் தயார் என திருமலை இராணுவக்கட்டளைத்தளபதி கூறியதை பற்றி உமது கருத்து என்ன?**

த. கீர்த்தனன்,
தர்மபுரம்.

இப்படித்தான் மாங்குளத்துக்கும் புளியங்குளத்துக்கும் ஏன் ஆனையிறவுக்கும் முன்னர் கட்டளைத்தளபதிகள் கூறாததா இது.

● **அனுமாரே! உலக பெண்கள் தினம், தமிழீழ பெண்கள் தினம் என்று பெண்களுக்கு விழா எடுக்கிறார்கள் ஏன் ஆண்களுக்கு அப்படி விழா எடுப்பதில்லை?**

விடுதலைவீரன்,
நெடுங்கேணி.

ஏன் ஏப்ரல் - 01 உங்களுக்காக விழா எடுக்கும் நாள்தானே மறந்துவிட்டீர்களா?

● **அனுமாரே! மது அருந்திவிட்டு மயக்கத்தில் அலங்கோலமாக கிடக்கும் மக்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

எம். தமிழன்,
ஒட்டுசுட்டான்.

மயக்கத்தில் அவிழ்ந்தவற்றை கட்டமுடியாதே. எப்படியும் மயக்கம் தெளிந்தவுடன் கோலம் மாறிவிடுவார்கள். ●

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –40

நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.



படத்திற்கு மெருகூட்டுங்கள் –40

.......................................................................
.......................................................................
.......................................................................
.......................................................................

பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –39



சி.சி. செல்வராசா,
4ம் வட்டாரம்,
முள்ளியவளை.

### பரிசுக்குரிய வரிகள்

ஓயாத அலை கொடுத்த அடியாலே - திரண்டு
ஓடிய ஜெயசிக்குறு படை போல
ஓட்டுபவர் கொடுத்த அடியாலே - மிரண்டு
ஓடுகிறது காளைகள் இங்கே.

### பாராட்டுக்குரிய வரிகள்

*மாட்டை வதைத்து*
*மனிதன் பெறுகின்றான் பரிசு*
*நாட்டைச் சிதைத்து*
*அரசியல்வாதி பெறுகிறான் 'பவிசு'*

த.க.லிங்கராஜா,
127, இரத்தினபுரம்.

*எல்லைப்படையாகி எதிரிகளை வென்றான்*
*எல்லா களங்களிலும் புலிகளுடன் நின்றான்*
*ஏமாற்று சமாதானத்தால் மனம் மிக நொந்தான்*
*ஏறிவிட்டான் சவாரி வண்டியில் இலக்கதனை வெல்வான்.*

சு.பால்ராஜ்,
புதுக்குடியிருப்பு.

*காளையதை கண்டபடி வதைத்து மனிதா - நீ*
*கைதட்டி வெற்றியுடன் மிளிரவென்று - உன்னால்*
*பதை பதைகக்க துடித்து ஓடும் மிருகயினமும் உன்னில்*
*உயர்வானது என்றுணர்ந்து வதைப்பதனை விடு மனிதா.*

மரியதாசன் - யோண்சன்,
தமிழீழ போக்கு வரவுக்கழகம்.

*ஊசிபாய்ச்சிய ஊற்றுத் தடியினால்*
*மூசிப்பாயும் காளையின் முதுகில்*
*ஊன்றிக்குத்தி உயிர்வதை செய்து - போட்டியில்*
*வென்றிடுதல் தகுமோ? வீணே உன் முயற்சி.*

வி.கே.இராசா,
கிளிநொச்சி.

*வண்டில் சவாரி*
*வயல் வெளி தன்னில்*
*எம் முந்தையர் மரபது தொடர்ந்திடும்*
*எம் மண்ணில்...*

எஸ். செல்வக்குமார்,
திருநெல்வேலி.

*"காரோட்டம்" கானா*
*ஊர்மக்களுக்கு*
*தேரோட்டம் வரும் என்ற*
*தகவலைச் சொல்ல.*

சிவா,
பருத்தித்துறை.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.


அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
எமது தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

சேட்டிங், சூட்டிங், பட்டுச்சேலை, பட்டுவேட்டி
வகைகள் மற்றும் அழகுசாதனப்பொருட்கள்,
கண்ணாடிப் பிறேமிங், ஏனைய வீட்டுத்
தளபாடப்பொருட்கள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

சூடர் ஒளி
வண்ணச்சோலை
நீதிமன்றம் முன்பாக,
யாழ்சாலை, கிளிநொச்சி.



சு
கு
ணா
சில்வாவீதி
வட்டக்கச்சி.
(சி-8592)







'இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.